

LORD CHELMSFORD.
Viceroy-Elect.

லார்ட் செம்ஸ்போர்ட்,
இந்தியாவின் புது வைஸ்ராய்.
(இவர் அடுத்த ஏப்ரல் மாஸத்தில் வைஸ்ராய் உத்யோகத்தை ஏற்றுக்கொள்வார்.)

# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 8. Vol. 8. | ராக்ஷஸ வருஷம், மாசி மீ, FEB—MAR, 1916. | ஸஞ்சிகை 2 No. 2.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control,

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| Half-yearly ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| 1/16 do ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras,

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | அந்ய நாடு | | |
|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | 6 | 0 | 0 |
| ஆறுமாஸத்துக்கு ... | 2 | 0 | 0 | 3 | 0 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/16 ,, | ,, ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜனாபிமானி

புஸ்தகம் 8.] ராக்ஷஸஹூ மாசிமீ. [ஸஞ்சிகை 2.

## DECEPTION IN WAR.

## யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல்.

ப்ராணிகள் தங்களை எதிர்க்க வரும் மற்ற ப்ராணிகளை ஏமாற்ற பற்பல ஸாதனங்களை அடைந்திருப்பது போலவே, தற்போது நடந்து வரும் யுத்தத்தில் ஒவ்வொரு கக்ஷியாரும் மற்ற கக்ஷியாரை ஏமாற்றி அவர்களைத் தாக்கவும், எதிர்க் கக்ஷியார் தங்களைத் தாக்காமலிருக்கவும் பற்பல ஸாதனங்களைக் கையாடிவருகிறார்கள். யுத்தத்தில் எதிரிகளை எப்படி ஏமாற்றுகிறார்களென்பதற்கு சென்ற அக்டோபர் மாஸத்து ஜனாபிமானியில் 746-ம் பக்கத்தில் சில விவரங்கள் தெரிவித்தோம். இப்போது இன்னும் சில விவரங்கள் கொடுக்கிறோம்.

எதிரிகளை ஏமாற்ற உபயோகிக்கும் ஸாதனங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம், முதலாவது அந்தந்த ப்ரதேசத்தினுடைய சுற்றுப்புறத்தின்வர்ணத்துக்குத்தக்கவாறு வீரர்கள் தக்க வர்ணங்களுள்ள உடைகளைத் தரித்துக்கொள்வதும், ஆயுதங்களுக்குத் தக்க வர்ணங்கள் பூசுவதும்.

இரண்டாவது ஸாமான் வண்டிகள், பெரிய பிரங்கிகள், போர்க்கிடங்குகள், எதிரிகளைக் கவனிப்பதற்கு ஏற்பட்டுள்ள இடங்கள் ஆகியஇவைகளை எதிரிக்குத் தெரியாமல் மறைக்க, அவைகளுக்குப் பக்கத்திலும் அவைகளுக்கு மேலும் மரங்கள், புதர்கள், செடிகளுள்ள வேலிகள், வயல்கள், வைக்கோல் போர்கள் முதலியவைகளைப்போல் அப்போதைக்கப்போது செய்து கொள்வது.

மூன்றாவது என்னவென்றால், அபாயமில்லாத இடத்திலும், பொருள்களிலும் அபாயமிருப்பது போல கற்பிதம் செய்தல்.

சென்ற அக்டோபர் மாஸத்து வ்யாஸத்தில், போர்வீரர்கள் எதிரிகளுக்குத் தெரியாமலிருப்பதற்காக காக்கி என்னும் வர்ணமுள்ள உடைகளையும் வேறு சில வர்ணங்களுள்ள உடுப்புகளையும் தரித்துக் கொள்ளுகிறார்கள் என்று எழுதியிருந்தோம். இந்த வர்ணங்கள் அவ்வளவு ச்லாக்கியமில்லை என்று ஒருவர் தெரிவிக்கிறார். பீல்ட்க்ரே என்னும் ஒருவகை சாம்பல் நிற உடுப்புகள் தான் கிட்டத்திலிருந்து பார்த்தால் கூட கண்ணுக்குத் தெரியாம லிருக்கின்றனவாம். இந்த நிறத்தை உபயோகித்தால் ஸோல்ஜர்கள் தெருக்களிலிருந்தாலும், மூடுபனியி லிருந்தாலும், வயல்களிலிருந்தாலும் பசும்புல் தரைகளிலிருந்தாலும் எதிரிகள் கண்ணுக்குத் தென்படமாட்டார்களாம். இந்த வர்ணமுள்ள உடைகளை ஜெர்மானிய ஸோல்ஜர்கள் தரித்துக் கொண்டிருக்கிறார்களாம்.

பனிக்கட்டிவிழுந்துள்ள ப்ரதேசங்களில் தான் இந்த நிறம் எடுத்துக்காட்டும். ஆனால் அந்த இடங்களில் போகும் போது ராணுவ அதிகாரிகள் வெண்மையான உடுப்புகளை ஸோல்ஜர்களுக்குக் கொடுக்கிறார்களாம். ஜெர்மானியர்கள் இவ்விதம் ஸோல்ஜர்களுடைய உடுப்புகளுக்கு மாத்ரந்தான் இந்த நிறத்தை உபயோகிக்கிறார்களென்பதில்லை. பீரங்கிகள், வண்டிகள், முதலிய யுத்தக்கருவிகளுக்குங்கூட ஸமயோசிதம்போல் பீல்ட்க்ரே வர்ணமோ, வெண்மைவர்ணமோ பூசி எதிரிகளுக்குத் தெரியாதபடி செய்து விடுகிறார்கள்.

யுத்தக்கப்பல்களுக்கும் இந்த மாதிரியே தக்க வர்ணம் பூசிவைக்கிறார்கள். அவைகள் எந்தக்

கடலில் யுத்தம் செய்யவேண்டியிருக்குமோ அந்தக்கடலின் நிறத்துக்கும் வானத்தின் நிறத்துக்கும் ஏற்றவாறு கப்பல்களுக்கு வர்ணம் பூசுவார்கள். வடகடலிலுள்ள ஜெர்மன் யுத்தக் கப்பல்களுக்கு இளம் சாம்பல் வர்ணம் பூசுகிறார்கள். வடகடலிலுள்ள இங்கிலீஷ் கப்பல்களுக்கும் பால்டிக் கடலிலுள்ள ரஷ்யக்கப்பல்களுக்கும் ஆழ்ந்த சாம்பல்வர்ணம் பூசுகிறார்கள். ஆனால் டார்ப்பிடோக்கப்பல்களுக்கு இந்த வர்ணம் பூசுவதில்லை. அவைகள் ராத்ரிக்காலங்களில்தான் வெகுவாய் தாக்குமாதலால் அவைகளுக்கு வேறு வர்ணம் பூசுகிறார்கள். இங்கிலீஷ், ஜெர்மன் டார்ப்பிடோக் கப்பல்களுக்குக் கருப்பு வாணம் பூசுகிறார்கள். ரஷ்ய டார்ப்பிடோக் கப்பல்களுக்கும் ஸப்மரீன்களுக்கும் ஆழ்ந்த நீல வர்ணம பூசுகிறார்கள். ரஷ்யக் கருங்கடல் கப்பல் படையைச் சேர்ந்த யுத்தக் கப்பல்களும் க்ரூஸர்களும் இளம் சாம்பல் நிறமாயும், டார்ப்பிடோக் கப்பல்கள் கருஞ்சாம்பல் நிறமாயும், ஸப்மரீன் கப்பல்கள் சாம்பல் நிறமும் பசுமை நிறமும் கலந்தனவாயும் இருக்கும்.

ப்ரான்ஸின் யுத்தக் கப்பல்கள் வெகுவாய் அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் யுத்தம் செய்ய வேண்டியிருக்கு மாதலால், அந்த ஸமுத்ரத்தின் நிறத்துக் கேற்ப நீலமும் சாம்பல் நிறமும் கலந்தனவாக வர்ணம் பூசப்படும். ப்ரெஞ்ச் டார்ப்பிடோக் கப்பல்கள் கரும் சாம்பல் நிறமாயும், ஸப்மரீன் கப்பல்கள் பசுமை நிறமாகவும் இருக்கும்.

யுத்தகளத்தில் முன் சொல்லியவாறு பீரங்கிகள், வண்டிகள் முதலியவைகளுக்குத் தக்க வர்ணம் பூசுவதால் தூரத்திலிருக்கும் எதிரிகளுக்கு அவை தெரியாமலிருக்கு மென்றாலும் ஆகாய விமானிகள் மேலே பறந்துவந்தால், அவைகளினுடைய உருவங்களைக்கண்டு இருப்பிடத்தையும் அவை யின்னவென்பதையும் கண்டுபிடித்து விடலாம். இதற்காக பூமியில் பள்ளந்தோண்டி பீரங்கிகளை அவைகளில் வைத்து, மேலே பலகைகளைப் போட்டு மூடி, அந்தப் பலகைகளின் மேல் சுற்றுப்புறத்து நிலத்தின் தன்மைக்கேற்றபடி மண்ணை, புல், செடி, கொடிகளை, போட்டு வைப்பார்கள். இப்படிப் போட்டுவைப்பதால் பீரங்கிக் குழாய்களின் வாயைத்தவிர வேறொன்றும் தெரியாது. குழாயின் வாயும் ஆகாயத்திலிருந்து பார்ப்பவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது.

பீரங்கிகளை க்ராமங்களுக்குப் பக்கத்தில்வைத்திருந்தால், பீரங்கிகளுக்கு ஸாதாரண கொட்டகைகளும், குடிசைகளும் கட்டி ஆகாய விமானிகளுக்குத் தெரியாமல மறைத்து விடுவார்கள். தோப்பு துரவுகளுக்குப் பக்கத்தில் பீரங்கிகள் இருந்தால், மரங்களை வெட்டிக் கொண்டுவந்து பீரங்கிகளுக்குப் பக்கத்தில்நட்டு வைத்து ஆகாய விமானிகளுக்கு ஒரு சிறு தோப்புபோல் காணும்படிசெய்து விடுவார்கள். இதனால் ஆகாய விமானிகள் பீரங்கிகளையும் மனிதர்களையும் பார்க்கமுடியாமல் போகும்.

ஆகாயக் கப்பல்களுக்கும் கூட மேகங்களுள்ள வானத்தின் நிறத்தைப்போல் வர்ணம் பூசுவதுண்டு. ஏரோப்ளேன்களுக்கு கண்ணாடி போன்ற சிறகுகளும் அமைப்பதுண்டு.

ஸாமான் வண்டிகளும் பீரங்கி வண்டிகளும் போவது ஆகாய விமானிகளுக்குத தெரியாமலிருப்பதற்காக அவைகளின்மேல் மரங்களைக் கட்டி வைப்பதுண்டென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம. ஆகாயக் கப்பல்கள் வரும் சத்தம் கேட்டவுடன இந்த வண்டிகள் உடனே நின்றுவிடும். ஆகாயத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு இவைகள் காடுகள் போலவும், தோட்டங்கள் போலவும், மரஞ் செடிகள் அடர்த்தியாயுள்ள வேலிகள் போலவும தோன்றும.

யுத்த களத்தில போர்வீரர்கள் தங்களுடைய குல்லாய்களையும், தலைச்சீராக்களையும் கல, டர்

னிப் செடி முதலியவைகளின் மேல் வைத்து விடுவதுண்டு. இதைக்கண்ட எதிரிகள் குல்லாய்களையும், தலைச்சிராக்களையும் கண்டு, ஸோலஜர்கள் இருப்பதாக எண்ணி அவைகளைத் தாக்க வருவார்கள். ஸமீபததில் மேற்குப் போர்க்களத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் டர்னிப் கிழங்குகள் பயிரிட்ட ஒரு வயலில் அந்தச் செடிகளின் மேல் தங்கள குல்லாய்களை வைத்திருந்தன. ஜெர்மானியர்கள் அங்கே ப்ரெஞ்ச் துருப்புகள் இருப்பதாக எண்ணி பீரங்கிகளைக் கொண்டு குல்லாய்களைத் தாக்கினார்கள்.

ஒரு ஸமயம ஜெர்மானியர்கள் வைக்கோல் வெட்டும் யந்தரங்களை சாய்த்து வைத்து பீரங்கிகளைப் போலிருக்கும்படி செய்தார்கள். அவர்கள் மண்குழாய்களால் பீரங்கிகள்செய்து, அவைகளை உபயோகிக்க உள்ளே வைக்கோலடைத்த சட்டைகளையும் குல்லாய்களையும் பக்கத்தில் மனிதர்களபோல் நிறுத்தி, எதிரிகளுக்கு வாஸ்தவமான பீரங்கிகளும் மனிதர்களும் இருப்பது போல் காட்டுவது முண்டாம.

சில ஸமயம் ஜெர்மானியர்கள் தங்களுடைய சனியன்களின்மேல் தலைச்சிராக்களையும் உடுப்புகளையும் வைத்துக்கொணடு எதிரிகளைத்தாக்கப்போவார்கள். எதிரிகள், ரொம்ப நட்டையானவர்கள் தங்களைத்தாக்க வருவதாக எண்ணி சனியன்மேலுள்ள தலைசசிராவையும் செட்டையும் குறிபார்த்து உயரமாகச் சுடுவார்கள். இதனால் ஜெர்மானியர்களுககுள் அதிக ஜனச்சேதம் ஏற்படுவதற்கில்லையாம்.

ஒரு ஸமயம் ரஷ்யர்கள் பிமல் நதியோரமாக உள்ள ஜெர்மன் போர்க்களத்தில் பாராத்துருப்புகள் இன்னவிடத்திலிருக்கின்றன என்பதை அறியும் பொருட்டு, அவர்கள் ஒரு தெப்பத்தில் வைக்கோலால் செய்த மனித உருவங்களை நிறுத்தி போலி பீரங்கியும் அதில் வைத்து, பீமல் நதியில் மிதக்க விட்டார்கள். இதன் நோக்கமென்னவென்றால், ஜெர்மானியப் பாராத்துருப்புகள் இந்த தெபபத்தைக் கண்டவுடன் எதிரிகள் உண்மையாய்த் தங்களுடைய இருப்பிடத்தை அறிய விரும்புவதாக நினைத்து அந்தத் தெப்பத்தைத் தாக்குமாகையால், ஜெர்மன பாராத்துருப்புகள் எங்கிருக்கின்றன வென்பதை ரஷ்யர்கள் அறிந்து கொள்ளலாம். ஆனால் ஜெர்மானியர்கள் சீக்ரம் இந்த தந்த்ரத்தை யறிந்து கொண்டு சும்மா இருநது விட்டார்கள்.

சில சேனைத் தலைவர்கள் எதிரிகளினுடைய ஸங்கேத வார்த்தைகளை, உபயோகித்து அந்த எதிரிகளினுடைய இருப்பிடத்தையும் பலத்தையும் அறிந்துகொளவதுண்டு. ஒரு ஸமயம் ஒரு ஜெர்மன் பாராத்துருப்பு ஒரு காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு ரஷ்ய பாராக்காரன் அவர்களைப் பார்தது, "நில்லுங்கள், யார் நீங்கள்?" என்று ஜொமன் பாஷையில் கேட்டான். தங்கள் ஸொந்த பாஷையில் பாராக்காரன் பேசுவதைக்கேட்ட ஜெர்மானியர்கள், தாங்கள் இன்னாரென்பதையும, தாங்கள் தங்கள் போர்க்களத்துக்கு முன்னுள்ள ப்ரதேசத்தை ஆராய்ச்சி செய்யப்போவதாகவும் சொன்னார்கள். இப்படிச் சொனனதும் இவர்களை நிறுத்தின பாராக்காரன் ஜெர்மானியனாக இருந்திருந்தால் "போகலாம்" எனறு பதில் சொல்லியிருப்பான். ஆனால் அந்தரஷ்ய பாராக்காரன் எதிரிகளின் நிலைமையை அறியவேண்டி நின்றுகொண் டிருந்ததால், "போகலா" மென்று, சொல்லாமல், விஸில் அடித்தான். அதன்மேல் ஜெர்மானியர்களை நோக்கி குண்டுகள் ப்ரயோகிக்கப்பட்டன. ஆனால் ஜெர்மானியர்கள் இந்த தந்த்ரத்தை உடனே அறிந்துகொண்டு ஓடிவிட்டார்கள். இதேமாதிரி ஸம்பவம் ஒன்று 1870-71-ம் வாஷதது ப்ரெஞ்ச்-ஜெர்மானிய யுத்தத்திலும் நடந்தது. ஸெடான் யுத்தத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் தோற்றுப்போனபோது, சில ப்ரெஞ்ச் ஸோல்ஜர்கள் காட்டுக்கு ஓடிவிட்டார்கள். அவர்களைப் பிடிப்பதற்காக ஒரு ஜெர்மன்

ஜெனரல் ஒருப்ரெஞ்ச் வாத்யக்காரனைப்பிடித்து ப்ரெஞ்ச் ஸோல்ஜர்களைக்கூப்பிடும் ஒரு ஸங்கேதத்தை பேரிகையில் அடிக்கச்சொன்னார். அவன அப்படியே செய்ய, காட்டில் ஒளித்திருந்த ப்ரெஞ்ச் ஸோல்ஜர்களெல்லாம் ஜெர்மானியர்கள் இருந்தவிடம்வந்து அகப்பட்டுக் கொண்டார்கள்.

## SHEEP FARMING IN THE TANJORE DISTRICT.

BY G. SESHADRI, B.A.

## தஞ்சாவூர் ஜில்லாவில் ஆடு வளர்க்கும் விதம்.

இவ்வுலகத்தில் கடவுள் ச்ருஷ்டிகளிலெல்லாம் மிகவும் பாவம் பண்ணினதும், புண்யம் செய்ததும், ஆடு தவிர வேறில்லை. அறிவில்லா ம்ருகமென்று அதற்குப் பெயர் வந்தபோதிலும், அது தன்னை வளர்த்த மனிதனிடத்தில் பற்று வைத்து, அவனே தன் சரீரத்தை ப்ரயோஜனப் படுத்தும்படி கொடுத்துவிடுகிற நன்றியறிவுள்ள ப்ராணி. உலகத்திலுள்ள ஸகல ப்ராணிகளிலும் அதன் மாம்ஸத்தை விரும்பாத ஜந்து சில ஹிந்துக்களைத தவிர, வேறு இல்லை. இந்த வ்யாபாரத்துக்கு, சில தெய்வங்களும் பங்குக்கு வந்து விடுகின்றன. ஆனால் மனிதன் தெய்வத்துக்கென்று சாக்கிட்டு.தன்னுடைய ஆசையைத் தீர்க்கிறான். பகலில் ஸொந்தக்காரன், ப்ரியமாக காப்பாற்றினாலும், இரவில் நாய், நரி, சிறுத்தை, இவைகள் எப்போது ஸமயம வாய்க்குமென்று பார்க்கின்றன. திருடர்கள் ஒன்றும் அகப்படாவிட்டால், ஆட்டைத் திருடிக் கறிக்குக் கொண்டு போவது வழக்கம். ஆனால் மானிட ஜன்மங்களின் வயிறறில் ஸமாதி வைக்கப்படுகிற புண்யமே, அதற்குப் பெரிய பாக்யம். திருச்சினாப் பள்ளியைப் போல் மகம்மதியர்கள் வஸிக்கும் பெரிய பட்டணங்களில், ஸாயங்காலங்களில், கசாப்புக்கடைக்குப் போகும் ஆட்டு மந்தைகளைப் பார்த்தால், இவ்வளவு ப்ராணிகள் ஒவ்வொரு நாளைக்கும் பலியாகுமானால், அங்கேயுள்ள ஆடுகளெல்லாம் சீக்ரம் நாசமாகி விடுமென்று நினைக்க ஹேதுவாகும்.

இவைகள் இப்படி மடிந்துபோயானாலும், எப்படி இவைகளை வளர்க்கலாமென்று யோசிப்போம். ஆடு, நல்ல திடல்களிலும், மலைச் சாரலிலும், புல் நிறைந்த இடங்களிலும், மனிதனுக்கு அதிக ச்ரமமில்லாமல் மேய்ந்து வளரும். நில ஆக்ரமிப்புச் சட்டம் மிராசுதார்களைத் துன்பப் படுத்துவதும், நிலங்கள் அதிக விலையாயிருப்பதால் வரப்புகளுக்குச் சச்சரவு செய்வதும், திடல்களை யெல்லாம் தோப்பாக்கி, புஞ்சை சாகுபடிக்குக் கொணர்ந்து விடுவதும் ஸகஜமாயிருக்கிற தஞ்சாவூர் ஜில்லாவில்; இவைகள் படும் கஷ்டம் சொல்லி முடியாது.

தஞ்சாவூர் ஜில்லாவில், வெள்ளாடு, செம்மறியாடு, என இரண்டு ஜாதிகள் காணப்படுகின்றன. மலைப் பாகங்களிலுள்ள பெரிய மயிரடர்ந்த ஆடுகளை இவ்விடத்தில் கொணர்ந்தால், வெகு நாளைக்குள், மயிர் உதிர்ந்து, கஷ்டப்படுகின்றன.

பள்ளை யாடு (வெள்ளாடு) தான் வீட்டில் வளர்க்கப்படுகிறது. இதன் மாம்ஸம், எல்லாவற்றையும் விட விரும்பத்தக்கது. இந்த ஆடு போஷணையால் நல்ல புஷ்டியாயிருந்தால், ஒரு தடவைக்கு நான்கு குட்டிகள் போடும். வீட்டுக்கு அருகாமையிலிருப்பதால் நரிக்கு அநேகமாய் ஆகாரமாகாது. நாங்கள் வாங்கின ஒரு ஆடு, பன்னிரண்டு வருஷததில, நாற்பது ஊருப்படி வரையில் பெருகியது. அப்படியிருந்தும் மந்தையாக சேர்த்து வளர்ப்பது வெகுகஷ்டம். இவைகளில் கொடியாடு, மந்தையாக வளரும், நரிக்குப்பயப்படாது. மரங்களிலுள்ள இலைகளைக் கூட எட்டிப்புசிக்கும், கள்ளி இதழ்களில் முள்ளிலலாவிட்டால, கள்ளிக்காடுகளை அழிக்க அதிகப்பணமும் கஷ்டமும் வேண்டாம். அநேகமாய் கருவைக்கன்றுகளெல்லாம், வயல்கரைக

ளில் வளராமலிருப்பதற்கு, இவைகளே காரணமாகும். ஆடு குடியானவர்களுக்கு மிகவும் ப்ரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

வெள்ளாடுகளைப்போல் தோலுக்கும், மாம்ஸத்துக்கும் அவ்வளவு உசிதமில்லாமலபோனலும், செம்மறி ஆடு விவஸாயத்துக்கு இன்றியமையாதது. இவைகள், அநேகமாய் மந்தையாய்த்தான் வளர்க்கப்படுகிறது. வயல்களில் இரவில் அடையவைத்தால் மூத்ரமும் சாணமும் நல்ல உரமாகும். தவிர, மாட்டுச்சாணத்தை திருட்டுத்தனமாகப் பொருக்கிக்கொண்டு போவதுபோல், இதன் சாணத்தை திருடமுடியாது. உரங்களிலெல்லாம் அதிகப்பலனைத்தரத்தக்கது இது தவிர வேறில்லை.

இந்த ஆடுகளை எப்படி வ்ருததிசெய்யலாம்? கோடைகாலத்தில், இந்த ஆடுகள் வயல்களில் மேய்ந்து விட்டு தண்ணீருக்கு வெகுதூரம் சென்று, ஸாயந்திரம் வயல்களில் வந்து அடையும்போது, இடையர்கள் நரிவாயிலிருநது இவைகளைத் தப்புவிக்க தங்கள் நாயுடன் காத்திருப்பார்கள். ஆனால் என்ன பத்ரமாயிருநதபோதிலும் 'காப்பானில் கள்வன் மிகு' மாதலால் அநேகம் ஆடுகள் நரிகளுக்கு இரையாகி விடுகின்றன. ஏழை இடையர்கள் நரிவலை வாங்கமுடியாது. அப்படி வாங்கினலும் பலமான நரிகள் வலையைத் தாண்டிக் குதித்து ஆடுகளைக் கொண்டுபோவது ஸகஜம. அதற்கு பதிலாக நரிகளிருக்கும் புதர்களுக்கு அருகாமையில், கண்ணிகுத்தி (சுளுக்கு வைத்துப்) பதுங்கியிருந்து, நரிகளை அடித்துவிடலாம். இல்லாவிட்டால் இரண்டு மாடுகளை புதாகளின்பக்கத்தில் படுக்கப்போட்டு,இரவில், அவைகளுக்கு மத்தியில படுத்துகொண்டு நரிகள் கத்திக் கொண்டு தின்னவருப்போது, தடிகளால் கொன்றுவிடலாம. குடியானவர்கள் ஸாகுபடி காலங்களில வலைத்துககொண்டு அடித்து விடுவார்கள்.

கோடைகாலத்தில் இடையர்கள் ஆட்டுக்கடாவை பெண் ஆடுகளோடு சேரவிடாமல், தடுத்துவிடவேண்டி, கடாவை பின்னங்காலிலிருந்து, முன்னங்காலில் குறுக்குக் காலுக்கு, கயிறுகட்டி தாண்டமுடியாமல் செய்யவேண்டும். ஏனெனில், சித்திரை வைகாசி மாதங்களில் தரிக்கும் பலன்கள், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் குட்டிபோடு மாகையால், மழை காலத்தில் குட்டிகள் குளிரில் மடிந்துபோம்.

அநேகமாய், ஆடிமாதத்தில் இந்தக் கயிற்றை எடுத்துவிடவேண்டும். இந்தக் காலத்தில்இவ்வாடுகளுக்குள்ள அதிக ரோமத்தை, நல்ல வெயிலாயுள்ள மத்யானத்தில்,கத்தரித்து விடவேண்டும். வெயில் காலத்தில் அதிக ரோமம் வ்யாதி உண்டாக்குவதோடு,கோடையில் இரவில் மழை பெய்தால், வயல்களில் படுத்திருக்கும் இந்த ஆட்டின் மயிர்களில், ஈரக்களிமண் ஒட்டிக்கொண்டு, ஆடுகள் எழுந்திருக்கமுடியாமலும், அப்படி எழுந்திருந்தாலும், மழையில் வெகுதூரம நடந்து திடல்களுக்குப் போவதற்குள், கீழேவிழும்படியும் செய்துவிடும்.

கத்தரித்த மயிர்களை வெற்றிலைக்கொடிக்கால் முதலியவைகளுக்கு எருவாக உபயோகிக்கலாம்.

மழைக்காலத்தில் செம்மறியாடுகளைக் காப்பாற்றுவது வெகுகஷ்டம். இக்காலத்தில் அவை புல் கொஞ்சம் ஈரமாயிருந்தாலும் அதைத் தின்னு. வெய்யில் இல்லாவிட்டால் வெளியே வரா. கொஞ்சம் மழையில் நனைந்தால் ஜலம் தலையிலேறிக்கொண்டு இறந்துவிடும். ஈரமான தரையில் படுத்திருந்தால் மாண்டுபோம். மழை விடாமல் பெய்தால், மாடு குதிரைகளைப்போல், அறுத்துவைத்த புல்லைத் தின்னமாட்டா. மரக்கிளைகளை ஒடித்துப் போட்டால், இலைகளைத் தின்னுமென்றாலும், க்ராமங்களில் மரங்களில் ஒடிக்கவிட மாட்டார்கள்.

தவிர கொட்டகையில ஈரமில்லாமல் வைக்கோல் போட்டிருக்க வேண்டும. மூத்ரம் பெய்த வைக்கோலில், படுக்காதாதலால் அடிக்கடி வைக்

கைத்தொழில்களின் அபிவிருத்தி
நூல் ...
சென்னை - 600090

கோலைப் புதுப்பிக்க வேண்டும். மிராசுதார்கள் மாடுகளுக்கு வைக்கோலில்லாமல் கஷ்டப் படுகையில், ஆடுகளுக்குப் படுப்பதற்கு காய்ந்த வைக்கோல் அகப்படுவது ஸாத்யமல்ல. குளிர்ந்த காற்று அடிக்காமலிருக்க, கொட்டகை தாழ்ந்து இருக்கவேண்டும், இரவில் குளிர்காய்வதற்கு நெருப்புமிருக்கவேண்டும். இக்காலத்தில் குட்டி போடுமானல், குட்டிகளையும், ஆட்டையும், பத்திரமாகக் காப்பாற்றுவிட்டால் அவை இறந்து போம். ஒரு வருஷத்து மழைகாலத்தில் எங்கள் ஆடுகளில் நூறு ஆடுகள் குளிரில் மடிந்துவிட்டன. இதற்காக தோட்டத்தில் ஒரு பாகத்திலேயே ஒதுக்கி, மேடாக உயர்த்தி, கொட்டகையைத் தனித்துப்போட்டு, சுற்றி செடிகளை காற்றடைப்பாக பயிராக்கி, அதைச்சுற்றி நரி வராமல் ஏற்பாடுசெய்து, தரைக்கு மணலடித்து சோளத்தட்டைகளைப் பரப்பிப் பார்த்ததில், அடுத்த வருஷம் ஆடுகள் சேதமேயில்லை. இப்படியாக தோட்டத்திலே இடம் மாற்றி மாற்றிப் போட்டால் மூத்ரமும் சாணமும் தோட்டத்துக்கு உரமாகிவிடும். திடல்களில் கொட்டகை கட்டுவதால் உண்டாகும் நஷ்டம் வராது.

தவிர, குட்டிகளுக்கு இடையர்கள் ஆமை முதுகுபோன்ற, பெரியகூடு வைத்திருப்பார்கள். இந்தக்கூடுகள் பலமாயும் கனமாயுமிருக்கவேண்டும். இல்லாவிட்டால் நரிகள் கூட்டைக்கிழித்தாவது, தூக்கியாவது. குட்டிகளைக்கொண்டு போய்விடும். இக்காலத்தில் காட்டுப்பூனைகள் ஈரமண்ணைத் தோண்டி, கீழாக நுழைந்துகுட்டிகளைத்தின்றுவிடும். இதற்காகப் பூனைக்கண்ணி குத்திவைத்து, அவைகளைக்கொன்று விடலாம்.

பெரிய மிராசுதார்கள் செம்மறியாட்டுமந்தை வைத்திருப்பது அவச்யம். பெரிய மிராசுதார்களுக்கு நாற்றங்கால்களுக்கு வேண்டிய உரம், கூட போதுமான அளவு கிடைக்காதாகையால், இந்த மந்தைவைத்திருநதால் நல்லலாபமுண்டு. ஒரு மிராசுதார் ஸுமார் 80 ஆடுகள் வைத்திருந்து அவைகளைப்பார்த்துக்கொள்ள ஒரு ஆளும் நியமித்தால் தோட்டத்துக்கும் வயல்களுக்கும் நல்ல பலனைக்கொடுக்கும்படி உரம்கொடுத்து, நல்ல லாபத்தை அடையலாம்.

ஜி. சேஷாத்ரி, பீ. ஏ.

## DEVELOPMENT OF INDUSTRIES.

## கைத்தொழில்களின் அபிவிருத்தி.

ஸமீபத்தில் நடந்த சென்னை சட்டஸபையில் ஆனரபில் மிஸ்டர் பி. என். சர்மா கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாக ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதாவது, சில சிறு கைத்தொழில் சாலைகளிலோ அல்லது வேறு இடங்களிலோ, இந்த ராஜதானியின் நிலைமைகளுக்கு ஏற்ற கைத்தொழில் முறைகளைப்பற்றிய ஆராய்ச்சிகளை விடாமல் நடத்திக்கொண்டு வரவேண்டுமென்றும், கூடுமானல் அந்த ஆராய்ச்சிகளை இன்னும் அதிகமாகச் செய்துபார்க்க வேண்டுமென்றும், இந்த வேலைக்காகவும், இந்தியர்களை கைத்தொழிலில் பழக்குவதற்காகவும், வேண்டுமான ஸந்தர்ப்பங்களில் நிபுணர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளவேண்டுமென்றும் இந்தக் கௌன்ஸில் சிபார்சு செய்கிறது.

இந்தத் தீர்மானத்தை ப்ரேரிக்கையில் மிஸ்டர் சர்மா பேசினதாவது.—கவர்ன்மெண்டார் இப்போது கண்ணாடி, ஸோப், பென்ஸில் செய்தல் முதலிய தொழில்களைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டு வருகிறார்களென்றும், கவர்ன்மெண்டார் கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்துவது விஷயமாய் இந்தியா மந்த்ரி நிபந்தனைகள் ஏற்படுத்தியிருப்பதால் அவர்கள் விசேஷமாய் ஒன்றும் செய்யமுடியாதவர்களாயிருக்கிறார்களென்றும், ஆனாலும் கைத்தொழில் முறைகளை ஆராய்ச்சி செய்து அவைகளைச் சீர்திருத்த எண்ணியிருக்கிறார்களென்றும், தாம் கொண்டுவந்திருக்கும் தீர்மானமானது இந்தியா மந்த்ரியின் உததரவுகளுக்கு விரோதமாக இல்லை

யென்றும், கவர்ன்மெண்டார் தமது ஆராய்ச்சிகளை நடத்த சிறிய தொழில் சாலைகளை ஏற்படுத்தி நடத்திவந்தால், பிற்பாடு தொழிலபிமானிகள் அந்த தொழில்சாலைகளை கவர்ன்மெண்டினிடமிருந்து வாங்கி ஸொந்தத்தில் நடத்திவர ஸௌகர்ய மேற்படுமென்றும் சொன்னார்.

இன்னும் அவர் சொன்னதாவது—கவர்ன்மெண்டார் முக்யமாய் எண்ணெய்த் தொழிலை அபிவ்ருத்தி செய்வதோடு, அந்தத் தொழிலில் கிடைக்கும் உபபொருள்களைஉபயோகிக்கும் மார்க்கத்தைப்பற்றியும் பரிசீலனை செய்யவேண்டும். இதைப்போலவே கடுதாசித் தொழிலைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யலாம். நமது தேசத்தில் கடுதாசி செய்ய வேண்டிய மூலப்பொருள்கள், இருக்கின்றன. ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் இந்தியர்களை வேலையில் பழக்கிவிடவும், அன்ய நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைக்கவேண்டும். அவர்களை வேலைக் கெடுத்துக் கொள்ளும் போது, அவர்கள் இந்தியர்களை வேலையில் பழக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி மிஸ்டர் சர்மா பேசினார்.

சென்னை ட்ரேட்ஸ் அஸோஸியேஷன் ப்ரதிநிதியாகிய மிஸ்டர் ஜே. ஓ. ராபின்ஸன் என்பவர் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசுகையில், இந்தத் தீர்மானம் அனுபவத்துக்கு ஒத்ததாக இல்லை யென்றும், யுத்தம் முடிந்தபிறகு இந்தியாவிலும் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களிலும் கைத்தொழில்களை வ்ருத்தி செய்யத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கு மென்றும், இந்தியாவில் கைத் தொழில் ஸ்தாபித்து நடத்துவதற்கு ஏற்ற அம்சங்கள் இன்னின்ன இருக்கின்றன வென்பதை இங்க்லண்டிலுள்ள கைத் தொழிலாளிகளுக்கு எடுத்துக் காட்ட வேண்டு மென்றும், இது விஷயமாய் கவர்ன் மெண்டார் உதவி செய்ய வேண்டு மென்றும், இந்தியாவிலுள்ள சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கத்தார் இந்தியாவில் கைத் தொழில் ஸ்தாபிப்பதைப் பற்றி இங்க்லண்டிலுள்ள கைத்தொழில் கம்பெனிகளுக்குத் தெரிவித்தால், அந்தக் கம்பெனிகள் தங்களுடைய நிபுணர்களை இந்தியாவுக்கு அனுப்பி இந்தியாவில் தொழில்சாலைகளை ஸ்தாபிக்கக் கூடுமென்றும், இந்தியாவிலுள்ளவர்களுக்குக் கைத்தொழில் விஷயங்களைக் கற்பிப்பதற்காக நிபுணர்களை நியமிப்பது சரியல்லவென்றும் சொன்னார்.

சென்னை சேம்பர் அப் காம்பார்ஸின் ப்ரதிநிதியாகிய ஆனரபிள் மிஸ்டர் கோர்டன் ப்ரேஸரும் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசினார். அவர் சொன்னதாவது, சிறிய தொழில்சாலையை ஸ்தாபித்து லாபகரமாக நடத்துவது முடியாது. அப்படி நடத்தினாலும், செய்யப்படும் ஸாமான்களை அதிகமாகச் செய்து, அவைகளின் அயன் விலையைக் குறைக்க முயற்சி செய்வார்கள். இதற்காக தொழில்சாலையைப் பெரியதாக நடத்தி, அதற்கு கவர்ன்மெண்டுப் பணத்தை அதிகமாய்ச் செலவழிக்க நேரிடும். இன்னும் சிறிய தொழில்சாலைகளில் ஸ்வல்பமாக சரக்குகள் செய்தால் அவைகளைத் தக்கபடி விலைப்படுத்துவதும் கஷ்டம்.

இந்தியர்களைத் தொழில்களில் பயிற்சி செய்விக்க நிபுணர்களை வரவழைக்க வேண்டியதில்லை. தென்னிந்தியாவிலேயே அநேகம் பெரிய தொழில்சாலைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளில் பயிற்சியடைய படிப்புள்ள இந்தியர்கள் போய்ச் சேர்ந்து கொள்வதில்லை. கல்வியறிவுள்ள இந்திய வாலிபர்கள் தொழிற்சாலைகளில் சேர்ந்து முதலில் கூலியாட்கள் செய்யும் வேலைகளைச்செய்து பழகி பிறகு படிப்படியாய் உயர்ந்த வேலைகளைச் செய்ய ஸம்மதித்தால், தொழில் படிப்பு அதிகரிக்கு மென்று சொல்லலாம். இப்படி மிஸ்டர் ப்ரேஸர் பேசினார்.

ஆனாலும் கவர்ன்மெண்டார் இந்தத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார்கள், கவர்ன்மெண்டுக்கா

கப் பேசின ஆனரபில் மிஸ்டர் டாடண்டர், நிபுணர்கள் அகப்படுவது ச்ரமமாயிருக்கிறதென்றும், கவர்ன்மெண்டார் சில வர்ஷங்களுக்கு முன்னால் க்ரோம் முறையால் பதனிடுதல், மீன்தொழில், ஸோப்செய்தல் ஆகிய கைத்தொழில்களை ஸ்தாபிக்க ஸாத்யப்பட்டதற்குக்காரணம் நிபுணர்களை வரவழைத்ததல்லவென்றும், இந்தியாவிலிருந்து சிலபேர்களை அன்யதேசங்களுக்குத் தொழில் கற்க அனுப்பினதே இதற்குக்காரணம் என்றும், முன்பு அன்யதேசங்களுக்கு தொழில் கற்கப் போன மிஸ்டர் சாட்டர்ட்டன், ஸர் ப்ரிடரிக் நிக்கல்ஸன் ஆகிய இவர்களைப்போல் அநேக மாணவர்கள் அன்யதேசங்களுக்குப் போக அகப்படுவார்களானால், நிபுணர்களை வரவழைக்க வேண்டியிராதென்றும், இந்தியாவின் கைகதொழில் ரொம்ப நல்ல நிலைமையை அடையுமென்றும் சொன்னார். நிபுணர் வரவழைப்பது விஷயமாய் அவர் சொன்னதாவது : ஒரு தொழில்சாலையை ஸ்தாபிக்கத் தகுந்தவர் தொழில் நிபுணரல்ல. மேலும் ஒரு தொழிலை அபிவ்ருத்தி செய்ய முதலில் நிபுணரை வரவழைக்க வேண்டியது மில்லை. தற்காலத்து கைத்தொழில்களில் அநேக தொழில் முறைகள் கலந்திருக்கின்றன வாதலால், அவைகளுக்கு ஒரு தொழில் நிபுணர் போதாது. அநேக தொழில் நிபுணர்கள் வேண்டியிருக்கும். ஒரு தொழிலை ஸ்தாபிப்பதில் ஆரம்பத்திலேயே நிபுணரை வரவழைக்க வேண்டியிராது. முதலிலேயே அவரை வரவழைப்பது வீண் பணச்செலவே. முதல்முதலில் செய்ய வேண்டியது என்ன வென்றால், அநதத் தொழிலை ஸ்தாபிப்பதால் என்ன பலா பலன்கள் உண்டாகும், அதற்கு என்ன ஸாதகங்கள் இருக்கின்றன வென்பவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். பிறகு தொழிலில், நிபுணர் தேவையாயிராத பாகங்களை ஏற்படுத்தவேண்டும். இவ்வளவெல்லாம் செய்தபிறகு நிபுணரை வரவழைத்து நியமித்தால் வேலை நன்றாய் நடைபெறக்கூடும். கவர்ன்மெண்டார் ஏற்கனவே சில நிபுணர்களை நியமித்திருக்கிறார்கள். வொர்க்ஷாப்புகளிலும், தொழில் சாலைகளிலும் தொழில் கற்கவரும் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக சில ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். ரொம்ப சீக்ரத்தில் அநேக தொழில்களுக்கு சிறு தொழில்சாலைகள் ஸ்தாபித்து நடத்த கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள். இப்படி மிஸ்டர் டாடண்டர் பேசினார்.

ஆனரபிள் டாக்டர் நாயர் இதுவிஷயமாய் பேசுகையில், கவர்ன்மெண்டார் இந்தியர்களைத் தொழில்களில் பயிற்சி செய்விக்கும் நோக்கத்துடன் தொழில்சாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமேயொழிய, வ்யாபாரம் செய்வதற்காக தொழில்சாலைகள் ஸ்தாபிக்கக்கூடாதென்று சொன்னார், ஏனென்றால் வ்யாபாரம் செய்யும் நோக்கத்துடன் தொழில்சாலையை ஸ்தாபித்தால் தொழில்சாலையில் செய்த பொருள்களை விற்கும்போது வ்யாபாரிகளோடு போட்டி போடவேண்டிவரும். இதனால் வ்யாபாரிகள் இந்த ஏற்பாட்டை பலமாய் ஆக்ஷேபிப்பார்கள். மாணவர்களைப் பயிற்சி செய்யும் நோக்கத்துடன் தொழில்சாலை ஏற்படுத்தினால் இந்தக்கஷ்டம் நேரிடாது. இங்க்லண்டில் தொழில்கல்விப் பாடசாலைகளில் செய்யும் பொருள்களை அப்போதைக்கப்போது விற்காமல் வர்ஷத்துக் கொருதடவை ஏலம்போடுகிறார்கள். இதனால் வ்யாபாரிகள் ஆக்ஷேபம் செய்வதற்கு இடமேற்படாது.

மேலும் இந்திய மாணவர்கள் இங்க்லண்டில் போய்ப்படிக்கலா மென்றால், அங்குள்ள வ்யாபாரிகள் தொழில் முறையை சரியாய்க் கற்றுக்கொடுக்க உடன்படுவதில்லை யென்று தெரிகிறது- இந்தியாவிலுள்ள இங்க்லிஷ் தொழில் சாலைக்காரர்கள் இந்தியாவுக்கு வ்யாபாரம் செய்ய வந்திருப்பவர்களே யொழிய, ஜனோபகாரமாய் இங்கு வந்திருப்பவர்களல்லா. அவர்களிடப

தொழில் கற்கவரும் இந்தியர்கள் தொழில் முறைகளைக் கற்றுக்கொண்ட பிறகு, அவர்களுக்குப் போட்டியாய் தொழில் சாலைகள் ஏற்படுத்த கூடுமாகையால், அந்த இங்கிலீஷ் வ்யாபாரிகள் இந்தியர்களுக்கு தொழில்முறைகளைக் கற்றுக் கொடுக்க உடன்படுவது கிடையாது. ஆகையால் இந்தியர்களுக்குத் தொழில் கல்வி கற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் கவர்ன்மெண்டார் தொழில்சாலைகள் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யமாகும்.

## RATS.

BY R. P. SRINIVASA AIYAR.

## எலிகள்.

நம்முடைய சத்ரு ஜந்துக்களில் எலிகள் முக்யமானவையென்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய வீடுகளில் நாம் பழங்கள், பக்ஷணங்கள் ஏதாவது வைத்திருந்தால், அவை எப்படியோ எலிகளுக்குத் தெரிந்துவிடுகின்றன. அதற்குப் பிறகு அவ்வஸ்துக்கள் நம்முடையவையல்ல வென்று நாம் எண்ணவேண்டியதுதான். ஆகையால் நாம் எப்பொழுது எலிகளைக் கண்டாலும் அவைகளை உடனே கொன்றுவிட வேண்டுமென்று எண்ணங்கொள்ளுகிறோம்.

எலிகளின் திருட்டுக் குணங்களினால் நாம் அவைகளை வெறுக்கும்படி நேரிடுகிறது. இருந்தாலும் அவைகள் நம்முடைய நன்மையையே கோரிக்கொண்டு நமக்கு ஊழியஞ் செய்யும் வேலைக்காரர்களென்று நாம் எண்ண வேண்டியதாயிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு ரூபாய் இருபதுவரையில் சம்பளம் கொடுத்து ஒரு வேலைக்காரனை வைத்துக்கொண்டாலும், எலிகள் நம்வீட்டைச் சுத்தமாக செய்வதுபோல் அவனால் செய்யமுடியாது. ஒரு காக்கை எங்கே யிருந்தாவது ஒரு மாம்ஸத் துண்டையாவது அல்லது அழுகின வாழைப் பழம் ஒன்றையாவது திருடிக்கொண்டு வந்து நம் வீட்டுக் கூரையின்மேல் உட்கார்ந்து பாதி தின்றுவிட்டு பாக்கியை அங்கேயே போட்டுவிட்டுப் போகிறது. கொஞ்சநாளைக்குள் அது அழுகிப்போய் மிகவும் கெட்ட நாற்றத்தை உண்டாக்கிவிடுகிறது. இதனால் அவ்வீட்டிலும் அக்கம் பக்கத்து வீடுகளிலும் குடியிருக்கும் ஜனங்கள் வ்யாதியடைய ஹேதுவாகிறது. ஆனால் அவ்வண்ணம் உண்டாகாமலிருக்கும்படி உடனே அவ்வஸ்துவைத் தின்று மனிதர்களுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாமலிருக்கும்படி செய்வது எலிகளுடைய வேலை. நமக்குத் தெரியாமல் நம் வீடுகளில் அழுகிப்போய்க் கிடக்கும் வஸ்துக்களைத் தின்று நம்வீட்டைச் சுத்தமாய் வைத்துக் கொள்வதற்காகவே எலிகள் ச்ருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனவென்று நாம் சொல்லலாம்.

எலிகளில் அநேகவிதங்களுண்டு. வீடுகளின் கூரைகளில் குடியிருந்துகொண்டு இரவில் சுவர்களின் வழியாய்க் கீழே யிறங்கி வீட்டில் வைத்திருக்கும் வஸ்துக்களைத் திருடித் தின்னும் ஜாதி இத்தேசத்தில் முக்யமானது. வீட்டின் தரையில் கீழே குடைந்துகொண்டு அந்த த்வாரங்களில் குடியிருப்பது வேறொரு ஜாதி. இதே மாதிரி பல வீடுகளையும் ஸம்பந்தப் படுத்தி ஒன்றுக்கொன்று ரெயில்வே டன்னல் மாதிரி அடியில் த்வாரம் செய்யும் பெருச்சாளி வேறொரு ஜாதி. இவைகள் ஒரு வீட்டுக்கடியில் குடியிருந்தால் அவ்வீட்டின் தரை வெகு சீக்ரத்தில் இடிந்து மேடு பள்ளமாகிவிடுகிறது. இவைகள் உண்டாக்கும் டன்னல்கள் சில ஸமயத்தில் ஒரு பர்லாங்கு தூரம் வரையில் செல்லுகின்றன. சுண்டெலி, மூஞ்சூறு முதலிய மற்றவகைகளுமுண்டு. இவைகளில் சுமார் நூற்றைம்பது ஜாதிவரையி லிருக்கின்றன வென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

ஆகாரம்.—எலிகள் அநேகமாய் எல்லா தாவர, ஜீவித வஸ்துக்களையும் தின்னும் குணமுடையன. சரியாய்ப்பார்த்தால் மற்ற ஜீவப்ராணிக

ளுக்கு ஆகாரமாகக் கூடிய வஸ்துக்களில் எலிகள் தின்னக் கூடாத வஸ்துக்களுண்டா என்று சொல்வதுதான் மிகவும் கஷ்டம்.

மாம்ஸம், பழம், தான்யம் முதலியவைகள் நன்றாய் முதிர்ந்து பக்வமான ஸ்திதியிலிருந்தாலும் சரி, நன்றாய் வளராவிட்டாலும் சரி, அல்லது அழுகிப்போனாலும் சரி, அவைகளை எலி வேண்டாமென்று சொல்லும் வழக்கம் கிடையாது. அவைகளுக்குத் தகுந்த ஆகாரம் எவ்விடத்தில் ஏராளமாய் கிடைக்கும் என்று அறியும் சக்தி அவைகளுக்கு மிகவும் அதிகம். நாம் ஒரு ஆகாரவஸ்துவை எவ்வளவு ரகஸ்யமாய் ஒரு இடத்தில் வைத்திருந்தாலும், எலிகள் அவ்வஸ்துவின் வாஸனையினால் அது இருக்கும் இடத்தை அறிந்துகொள்ளுகின்றன. ஆகாரம் ஒரு இடத்தில் ஏராளமாய் இருக்கிறது என்று ஒரு எலிக்குத்தெரிந்தால், அது தான்மாத்ரம் அந்தத்தின்னவேண்டுமென்று எண்ணம் கொள்ளுகிறதில்லை.

உடனே அது தன் ஸ்நேகிதர்களுக்கும் கூட்டாளிகளுக்கும் அவ்விஷயத்தைப்பற்றித் தெரிவித்து அவைகளையெல்லாம அழைத்துக் கொண்டு விருந்துக்கு வருகிறது. தாங்கள் செய்யும் காரியம் திருட்டுத்தனமாயிருந்தபோதிலும் அக்காரியத்தை ரகஸ்யமாய் செய்ய வேண்டுமென்னும எண்ணம் அவைகளுக்குக் கிடையாது. ஆகாரத்தை வயிறுநிரப்பத் தின்றவுடன் அவைகளுக்கெல்லாம் உத்ஸாகம் ஜாஸ்தியாயுண்டாகி வெகு சீக்ரத்தில் அவைகளுக்குள் சண்டை இரைச்சலெல்லா முண்டாகின்றன.

ஆகாரத்துண்டு ஒன்று ஒரு எலிக்குக் கிடைத்தால், அது முதலில் அதை நாக்கினால் நக்கி நல்ல ருசியுள்ளதா வென்று பார்க்கிறது. பிறகு தான் தின்ன ஆரம்பிக்கிறது. முதலில் ஒரு கவளத்தைக் கடித்து, அதை நன்றாய் மென்று வயிற்றுக்குள் செலுத்தின பிறகு தான் அடுத்த கவளத்தைக் கடிக்கும். இவ்வழக்கம் நம்மவருக்குள் அநேகருக்கு இல்லாமையினால், அவர்கள அஜீர்ணம் முதலிய வ்யாதிகளினால் கஷ்டப்படுகிறார்கள்.

எலி ஆகாரத்தை மெல்லும் போது அதன் உதடுகள் வெகு வேகமாய் மேலும் கீழும் போகின்றன. ஆகாரத்தோடு தண்ணீரும் எலிக்கு மிகவும் அவச்யமாயிருக்கிறது. உடனேயில்லாவிட்டாலும் கொஞ்ச நேரத்துக்குள்ளாவது ஏராளமாய்த் தண்ணீர் குடிக்க வேண்டும். எலி நாயைப்போல் தண்ணீரை நக்கிக் குடிக்குமே யொழிய, பசுவைப்போல் உறிஞ்சிக் குடிக்காது.

எலிகள் மாம்ஸ பக்ஷணிகளா யிருக்கின்றன. அதாவது ஒரு எலி மற்றொரு எலியைத் தின்றுவிடும். ஒரு எலிக்கு ஏதாவது காயமுண்டானால் அதற்கு பலஹீன முண்டாகிறது. அப்பொழுது மற்ற எலிகள் அதைத் தின்று காயப்பட்ட எலிக்கு இனிமேல் இவ்வுலகத்தில் ஸங்கடதுக்கங்களொன்று மில்லாமல் செய்து விடுகின்றன. இவ்வழக்கமும் ஒருவிதத்தில் உலகத்துக்கு நன்மையென்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் மற்ற எல்லா ப்ராணிகளைப்போலவே எலிகளுக்கும், தேகத்தில் காயமுண்டானாலும், அல்லது வேறு எவ்விதத்திலாவது வ்யாதியுண்டானாலும் தனியாய்த்தன்னிருப்பிடத்தில் போய் இறக்கவேண்டு மென்னும் எண்ண முண்டாகிறது. ஆகையால் அது தன் வளைக்குள் போய் அங்கே இறந்து போகிறது.

பிறகு, அதன் தேகம் அழுகிப்போய் மிகவும் கெட்ட நாற்றத்தை யுண்டாக்கும். அதன் இருப்பிடத்தை வேறொரு எலி தான் கண்டுபிடிக்கக் கூடுமேயொழிய நம்மால் முடியாது. ஆகையால் செத்த எலியின் நாற்றம் நமக்குக் கெடுதல் செய்யாவண்ணம மற்ற எலிகள் அதைத் தின்று நம் வீட்டைச் சுத்தம் செய்கின்றன.

ஒரு எலி ஏதாவது கொஞ்சம் விஷத்தைத் தின்று அதனால் இறந்துவிட்டால் மற்ற எலிகள் அதைத் தின்றுத் தாங்களும் இறக்கின்றன. இவ்விதமாக ஒரு எலியைக் கொண்டு அதன் கூட்டாளிகளெல்லாவற்றையும் கொல்லலாம். ஆனால் நாம் குடியிருக்கும் வீடுகளில் இவ்விதமாய் எலிகளைக் கொல்லுவது ச்லாக்யமான வழியல்ல. ஏனென்றால் எலிகள் வளைக்குள் இறந்துவிட்டால், அவைகள் அங்கேயே அழுகிப் போய் நமக்கு மிகவும் கெடுதலை யுண்டாக்கும்.

எலிக்குஞ்சுகளுக்கு ஏதாவது அபாயமுண்டாகுமென்று தாயெலி அறிந்தால், அது தனனால் கூடியமட்டில் அவ்வபாயத்தினின்று அவைகளைக் காக்க முயற்சி செய்யும். அது ஸாத்யபபடாவிட்டால், தானே அவைகளைத தின்று அவ்வபாயத்தினின்றும் அவைகளைக் காப்பாற்றும். ச்ருஷ்டியின் அமைப்பில் இதுவும் ஒரு விசித்ரமே.

நாம் நம் வீடுகளில் கம்பிக்கூடுகளை வைத்து எலிகளைப் பிடிக்கிறோமல்லவா? ஒரே தடவையில் இரண்டு மூன்று எலிகள் கூட்டுக்குள் சில ஸமயம் அகப்பட்டுகொள்ளுகின்றன. ஒருவிதமான ஆகாரமும கிடைக்காமல் அவைகள் கூட்டுக்குள் இரண்டு மூன்றுநா ளிருந்தால் அவைகள ஒன்றுக்கொன்று சண்டைபோட்டுக்கொண்டு, அவைகளுக்குள் பலமுள்ள எலி மறறவைகளைத் தின்றுவிடுகிறது. எலிகளின் ஸங்க்யை அபரிமிதமாக உலகத்தில் ஆகாவண்ணம கடவுள இவ்வழக்கத்தையும் அவைகளுக்குக் கொடுத்திருக்கிறாரென்றே சொல்லவேண்டும்.

**வாஸ ஸ்தலம்.**—ஸாதாரணமாய் எலிகள் நம் வீட்டுக் கூரைகளிலும தரையினடியிலும் குடியிருக்கும். வயல் வெளிகளில் தண்ணீரில்லாவிட்டால் அங்கே வளைகளை யுண்டாக்கி அங்கேயும் குடியிருக்கும். ஐப்பசி கார்த்திகை மாஸங்களில் வயல்களில தண்ணீ ரதிகமாயிருப்பதனால, எலிகளுககு அங்கே குடியிருப்பது ஸௌகர்யமாயிருக்கிறதில்லை. அப்பொழுது நம் வீடுகளில் நம்மைக் கேட்காமலே நம் விருந்தாளிகளாக வந்து விடுகின்றன.

இம்மாதங்களில் நம் வீட்டிலிருக்கும் ஆகார வஸ்துக்களை நாம் வெகு ஜாக்ரதையாய் வைத்துக்கொண்டிருந்தா லொழிய, அவைகளில் பாதிக்குமேல் எலிக்குப் பங்குண்டு. மார்கழி மாதத்தில் வயல்களில் தண்ணீர்வற்றி பயிர் முதிர்ந்திருக்கும் ஸமயத்தில், எலிகள் நம்வீட்டைவிட்டு வயல்களுக்குப் போய் தாங்கள் குடியிருப்பதற்கு வளைகளைத் தோண்டிக்கொண்டு அதற்குப் பிறகு ஐந்தாறு மாஸத்திற்கு வேண்டிய ஆகாரங்களை சேகரிக்கத் தொடங்குகின்றன. நெல்முதலிய தான்யங்களை குடியானவன் அறுப்பதற்கு முன் அவைகள் அறுத்து வளைக்குள் சேர்த்துக்கொள்ளுகின்றன. அங்கே ஆனி, ஆடி மாஸம் வரையில ஸௌக்யமா யிருக்கின்றன.

பிறகு குடியானவர்கள் வயல்களில் தண்ணீரைப் பாய்ச்சினவுடன் அவ் வளைகளெல்லாம் ஜலங் கொண்டு விடுகின்றன. தாங்கள் வெகு காலமாய் ஸுகமாகக் குடியிருந்தவீடு வெள்ளங் கொண்டவுடன் எலிகள் அக் குடியானவர்களை ஒரு புறம் வைதுக் கொண்டும, ஒரு புறம் வாழ்த்திக் கொண்டும் வேறிடம் போகப் புறப்படுகின்றன. தங்களை வீட்டை விட்டுத் துரத்துவதற்காக குடியானவனை நிந்தித்துக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் அடுத்த வருஷம் தங்களுக்கு ஆகாரத்துக்குத் தான்யங்களைப் பயிர் செய்ய குடியானவன் இவ்வளவு கஷ்டப்படுகிறா னென்று அவனுக்கு நன்றி பாராட்டிக் கொண்டு அவன் வீட்டுக்கே வநது சேருகின்றன. மற்றும் சில எலிகள் அக்குடியானவனுடைய களஞ்சியத்தில் சிறு பூச்சிகள் முதலியன இல்லாமலிருக்கும்படி சுத்தம் செய்து அவ்வேலைக்குக் கூலியாக அக்களஞ்சியத்தி லிருக்கும் நெல்லைத தின்னுகின்றன! வேறு சில எலிகள் அவனுடைய மாட்டுக்

கொட்டில், குதிரை லாயம் முதலிய விடங்களுக்குப்போய் அந்த ப்ராணிகளுக்கு வைக்கப்படும் கொள்ளு பருத்திக்கொட்டை முதலியவைகளைத் திருடித் தின்னுகின்றன. அவைகளின் சாணிலத்திகளோடு ஜீர்ணமாகாமல் வெளிவந்திருக்கும் தானியங்களையும் பொறுக்கித் தின்னுகின்றன.

எலிகளுக்கு அதிகமாய்க் குளிர் தாங்குகிறதில்லை. ஆகையால் குளிர்காலங்களில் வைக்கோல் போர் முதலிய கொஞ்சம் வெதுவெதுப்பான விடங்களில் பதுங்கிகொண்டிருக்கும். இதனால் தான் தை மாசி மாதங்களில் இரவில் முன்னேரத்தில் மாத்ரம் நம் வீடுகளில் எலி உபத்ரவம் கொஞ்சமிருந்தாலுமிருக்குமேயொழிய, பின்னேரத்தில் அதிகமாயிருக்கிறதில்லை. ஏனென்றால் இம்மாதங்களில் பின்னிரவில் குளிர் அதிகமாயிருக்கும். அப்பொழுது குளிரடக்கமாய் எங்கே இடமகப்பட்டாலும் அங்கேயே படுத்துக்கொள்ளும். ஒரு ஸமயம் நம்முடைய படுக்கையிலேயே போர்வைக்குள் பதுங்கிக்கிடப்பதுமுண்டு. கொஞ்சம் தைரியமுள்ள எலிகள் நம் தேக உஷ்ணத்தை அனுபவிப்பதற்காக நம்மேலேயே படுத்துக்கொள்ளுவதுமுண்டு !

எலிகளுக்குத் தகுந்த ஆகாரம் ஓரிடத்தில் அகப்படாவிட்டால், அவைகள் ஒரே கூட்டமாய் அவ்விடத்தை விட்டு வேறோரிடத்துக்குப் போய்விடும். தாங்கள் குடியிருக்குமிடம் ஜலங்கொண்டுபோனாலும் அல்லது அதிககுளிராயிருந்தாலும், அப்பொழுதும் வேற்றூருக்கு ஒரே கூட்டமாய் ப்ரயாணமாய்விடும். அல்லது மனிதனுடைய உபத்ரவம் மிகவும் அதிகமாய் விட்டால், அப்பொழுதும் வெளியூருக்குப் போகும் வழக்கமுண்டு. எப்பொழுதும் எலிக்கூட்டம் ஓரூரிலிருந்து வேற்றூருக்குப்போக வேண்டுமானால் அவைகள் இரவில் பயணம் போவதுதான் வழக்கம்.

இப்பொழுது ஐரோப்பாவில் கறுப்பெலியென்றும், செம்பட்டை எலியென்றும் இரண்டு ஜாதி எலிகளிருக்கின்றன. அவைகளில் கறுப்பெலி தான் ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஆதியில் ஸ்வயேச்சையாய் ஆண்டுகொண்டிருந்தது. ஆசியா கண்டத்தை ஸ்வதேசமாகவுடைய செம்பட்டை எலிகள் ஐரோப்பாவை ஸுமார் ஆயிர வருஷங்களுக்கு முன் படையெடுக்க ஆரம்பித்தன.

இரு ஜாதி எலிகளுக்கும் அகோரயுத்தம் நடந்து அநேக வருஷங்களுக்குப்பின் கறுப்பெலிகள் தோல்வியடைந்து விட்டன. துப்பாக்கி, கத்தி முதலிய ஆயுதங்களை உபயோகப்படுத்த எலிகளுக்குத் தெரியாமையினால், தேக பலமும் பல் பலமும் உள்ள எலிகள்தான் யுத்தத்தில் ஜயிக்கின்றன. ஆகையால் இப்பொழுது கறுப்பெலிகள் அநேகமாய் நசித்துப்போய் சிற்சில இடங்களில் மாத்ரம் வஸித்துக்கொண்டிருக்கின்றன. செம்பட்டை எலிகளே அக்கண்டம் முழுவதையும் ஆண்டுகொண்டிருக்கின்றன.

ஆர். பி. ஸ்ரீநிவாஸய்யர்.

## DEFAULT IN REPAYMENT.

## தவணை தப்பிக் கடன் செலுத்துவது.

கோவாபரெடிவ் ஸங்கங்கள்ர்ல் ஜனங்களுக்கு ரொம்ப நன்மை ஏற்படக்கூடுமென்றாலும், அந்த ஸங்கங்களை கோவாபரெடிவ் கொள்கைகளை அனுஸரித்து நடத்திவந்து, மெம்பர்களும் தங்களுடைய கடமைகளை சரிவரச் செய்துவந்தாலொழிய அதிக நன்மைகளேற்படுமென்பதற்கில்லை. கோவாபரேஷனின் முக்யகொள்கைகளுள் ஒன்று ஒவ்வொரு மெம்பரும் தவணை தவறாமல் குறிப்பிட்ட காலத்தில் கடனைத் திருப்பிச செலுத்த வேண்டுமென்பது. எந்த ஸங்கத்திலாவது மெம்பர்கள் திருப்பி செலுத்தவேண்டிய கடன் தொகை ரொம்ப அதிகமாயிருந்தால், அந்த ஸங்கம் சரியாய் நடந்துவரவில்லையென்று சொல்லலாம். அந்த ஸங்கத்தால் ஜனங்களுடைய பொருளா

தார நிலைமை உயருமென்று சொல்வதற்கில்லை. ஆகையால் ஒவ்வொரு ஸங்கத்திலும உள்ள எல்லா மெம்பர்களும் தங்கள் ஸங்கத்தையும் அதன் மூலமாகத் தங்களுடைய நிலைமையையும் உயர்த்துவதற்காக ரொம்பவும் ச்ரமப்படவேண்டும்.

சிலர், கடனைத்திருப்பி செலுத்தாமலிருப்பதால் யாதொரு கெடுதலுமில்லையென்றும், கடன் எவ்வளவுகாலம்திருப்பிச்செலுத்தப்படாமலிருக்கிறதோ அவ்வளவுகாலம அதற்கு வட்டி வந்து கொண்டிருக்குமென்றும், குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தாத கடன்களுக்கு அபராதவட்டி செலுத்துவதால், அதிக வட்டியும் கிடைக்கு மென்றும், ஆகையால் தவணைதப்பிச் செலுத்துவதால் பாதகம் ஒன்றுமில்லை யென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. கடன் நிலுவையாயிருக்கிறதென்றால் குறித்த தவணையில் செலுத்தவில்லையென்று ஏற்படுகிறது. குறித்த தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லையென்றால், மெம்பர்கள் தங்கள் வாக்குதத்தத்தை நிறைவேற்றவில்லையென்றும், அவர்கள்சொன்ன சொல் தவறிவிட்டார்களென்றும ஏற்படும்.

எந்த வ்யாபாரத்திலும், அதிலும் முக்யமாய் பாங்கி லேவாதேவி வ்யாபாரத்தில், நாணயம் தவறினால் அந்த வ்யாபாரம் கடைத்தேறாதென்பது யாவரும் அறிந்த விஷயம். நிற்க, கோவாப ரேடிவ் ஸங்கமென்பது கடன் கொடுக்க ஏற்பட்ட ஒரு ஸாதனமே தவிர வேறில்லை. கோவாபரேடிவ் பாங்கிக்கும், க்ராம லேவாதேவிக் காரனுக்கும் வித்யாஸ மென்ன வென்றால், கோவாபரேடிவ் பாங்கியில் வட்டி நயம் ; லேவாதேவிக் காரனிடத்திலோ வட்டி விகிதம் ரொம்ப கடுமை. கோவாப ரேடிவ் ஸங்கத்தில் ஏற்படும் லாபத்தை அதன் மெம்பர்களே பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள். லேவாதேவிக் காரனுக்குக் கிடைக்கும் வட்டித் தொகையோ அவனுக்கே போய்ச் சேருகிறது. கோவாபரேடிவ் ஸங்கமானது அதிலுள்ள மெம்பர்களின் ஸௌகர்யத்தை கவனிக்க ஏற்பட்டுள்ளது. லேவாதேவிக்காரன் தனது ஸௌகர்யத்தைப் பார்ப்பானே யொழிய, தன்னிடம் கடன் வாங்க வருபவர்களினுடைய ஸௌகர்யத்தைப் பார்க்கமாட்டான். இரண்டுபேருக்கும் இவ்வளவு வித்யாஸ மிருந்தபோதிலும், கடன் கொடுத்து வட்டி ஸம்பாதிப்பதில் ஒற்றுமையிருக்கிறது.

ஒரு க்ராமவாஸி லேவாதேவிக்காரனிடமிருந்து கடன் வாங்கிக் குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தாமலிருந்து, மறுபடியும் லேவாதேவிக்காரனிடம் போய் பழைய கடன் இன்னும் செலுத்தாம லிருக்கும்போதே புதிதாய்க் கடன் கேட்டால், லேவாதேவிக்காரன் கடன் கொடுப்பானா ? பழைய கடனுக்கு வட்டிக்கு வட்டிபோட்டு அஸலுக்கும்வட்டிக்கும் புதிய கடன் பத்ரம் எழுதிவாங்கிக்கொள்வானே யொழிய, கடனைத் திருப்பிச் செலுத்த வழியில்லாத க்ராமவாஸிக்கு மறுபடியும் கடன் கொடுக்க உடன்படுவான் என்பது துர்லபம்.

அதே மாதிரி ஒரு மெம்பர் தான் ஸங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய கடனை வெகுகாலம் திருப்பிச் செலுத்தாமலிருந்து புதிதாய் ஒரு கடன் கேட்டால், ஸங்கம் எப்படிக் கொடுக்கலாம் ? அவர் ஸங்கத்தில் திரும்பியும் கடன் கேட்டுக் கிடைக்காவிட்டால் மறுபடியும லேவாதேவிக்காரனிடம் போகிறார். ஸங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைத் திருப்பிக்கொடுக்கமுடியாத அவருக்கு லேவாதேவிக்காரன் கடன் கொடுப்பா னென்பது ஸந்தேகம். இதனால், அந்த மெம்பர் பணத்துக்குக் கஷ்டப்பட நேரிடும்.

கோவாபரேடிவ் ஸங்கமென்பது லேவாதேவி நடத்துவதற்கேற்பட்ட ஒரு இடமாகும. அதில் பணம் வந்துபோய்க்கொண்டிருந்தால்தான் ஸங்கம் சரிவர நடக்கமுடியும். கொடுக்கல் வாங்

கல் நின்றுவிட்டால் பாங்கியை மூடிவிடவேண்டியதுதான். மெம்பர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய கடன்களை சரியானகாலத்தில் திருப்பிக் கொடுக்காவிட்டால் ஸங்கத்தின்கொடுக்கல் வாங்கல் குறைகிறது. இதனால் ஸங்கத்தின் அபிவ்ருத்திக்குத் தடையேற்படுகிறது. ஆகையால் கடன்களைச் செலுத்தாமலிருக்கும் மெம்பர்கள் ஸங்கங்களுக்கு சத்ருக்கள் போலாகிறார்கள். ஒவ்வொரு மெம்பரும் கடன்வாங்கும் விஷயத்தில் 4 முக்யமான விஷயங்களை கவனிக்கவேண்டும்.

(1) முக்யமான செலவுகளுக்கு குறைந்தது எவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவு பணந் தான் கடன் வாங்கவேண்டும்.

(2) எந்த கார்யத்துக்காகக்கடன் வாங்கப்பட்டதோ அந்தக்கார்யத்துக்குத்தான் அந்த பணத்தைச் செலவழிக்கவேண்டும்.

(3) சிக்கனவழக்கத்தைக் கைப்பற்றவேண்டும். எவ்வளவு ஸ்வல்ப தொகையாயினும் சரி மாஸாமாஸம் பிச்சம் பிடிக்க முயலவேண்டும். பலதுளிகள் சேர்ந்து பெருவெள்ளமாகும்.

(4) கையில் பணம் கிடைத்தவுடன் அதை கடனுக்காகச் செலுத்திவிடவேண்டுமேயொழிய வீட்டில் வைத்துக்கொள்ளக்கூடாது. வீட்டிலுள்ள பணம் செலவழிந்து போய்விடும். அல்லது திருட்டுப்போய்விடலாம். பாங்கியில் போட்டால் கடனுவது அடையும், அல்லது வ்ருத்தியாகும்.

## WHAT TO DRINK AND WHEN TO DRINK IT.

## பானம் பருகுவதும் அதற்கேற்ற ஸமயமும்.

தாக சாந்திக்காகவும் மற்ற காரணங்களுக்காகவும் ஒவ்வொருவரும் இன்ன பான வகைகள் பருகலாமென்பதைப் பற்றியும், எப்போது குடிக்கலாமென்பதைப் பற்றியும் பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறார்கள். சிலர் சாப்பாட்டு மத்தியில் தீர்த்தமே குடிக்கக்கூடாதென்றும், அப்படிக் குடித்தால் உணவு சரியாக ஜீர்ணமாகாதென்றும் சொல்லுகிறார்கள். சிலர் சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் ஜலமாவது வேறு பானமாவது குடிக்கக்கூடாதென்றும், சாப்பிட்ட இரண்டு மூன்று நாழிகைக்குப் பிறகே ஜலம் குடிக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். சிலர் தாகம் ஏற்பட்டவுடன் குடிக்காமலிருப்பது சரியல்லவென்கிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி ஒரு இங்க்லீஷ் கனவான் சில விஷயங்களை எழுதியிருக்கிறார். அவைகளை இங்கே எழுதுகிறோம்.

ஸாதசரீரிகளாகிய ஜனங்கள் எப்போது தீர்த்தம் குடிப்பது, எவ்வளவு தீர்த்தம் குடிப்பதென்பதை தாகமெடுப்பதால் அறிந்து கொள்ளலாம். ஆனால் தாகம் எடுப்பதால் ஜலம் குடிக்க வேண்டு மென்பதுமாத்ரம் தெரிகிறதே ஒழிய ஜலத்தைத்தவிர மற்ற பானவகைகள் குடிக்கலாமா, குடிக்கக் கூடாதா வென்பதை அறிந்து கொள்வது முடியாது.

தற்காலம் அநேகர் இயற்கைக்கு ஏற்ற விதிகளை அனுஸரியாமல் தங்கள் மனோபாவப்படி ஜலம் குடித்து வருகிறார்கள். நமது முன்னோர்கள் வெகு காலமாக இயற்கைக்கு விரோதமில்லாமல் நடந்து வந்து, அதனால் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு தங்களுடைய ஆகாராதி நியமங்களை ஒழுங்கு படுத்தியிருப்பதால் அவர்களுடைய ஆகாராதி ஒழுங்குகளை அலக்ஷ்யம் செய்வது சரியல்ல. கூடியமட்டும் அவர்களுடைய வழக்கங்களையே அனுஸரித்து வர வேண்டும்.

நாம் குடிக்கும் ஜலமானது கூடியமட்டும் ஆகாரத்தோடு ஸம்பந்தபட்டதாயிருக்க வேண்டும். நாம் சாப்பிடும் ஒவ்வொரு நேரத்திலும் ஜலமானது ஏதாவது ஒரு ரூபத்தில் ஆகாரத்தோடு சேர்ந்து தேகத்துக்குள் போகிறது. இங்க்லீஷ்காரர்களும் மற்ற மேல் நாட்டார்க

ளும் தினம் நான்கு தடவை சாப்பிடுகிறார்கள். நமது தேசத்து ஜனங்களில் தற்கால நாகரீகத்தால் மாறுபடாத, 'கர்நாடக' ரென்று சொல்லப்படும் அநேகர் இரண்டு வேளையே சாப்பிடுகிறார்கள். நாகரீகமாய் ஜீவனம் செய்யும் சில இந்தியர்கள் மேல் நாட்டாரைப் போல் 4-அல்லது 5-தடவை போஜனம் செய்கிறார்கள். 'நாகரீகமான' இந்தியர்கள் காலையில் ஒரு சிற்றுண்டியும், 10-அல்லது 11-மணிக்கு காலை போஜனமும், 2-அல்லது மூன்று மணிக்கு ஒரு சிற்றுண்டியும், ஸாயந்திரம் 5-மணிக்கு டீயும், இரவில் இராச் சாப்பாடும் சாப்பிடுகிறார்கள். மேல் நாட்டாரும் காலை, நடுப்பகல், பிற்பகல், இரவு என்று நான்கு வேளைகளில் போஜனம் செய்கிறார்கள்.

இப்படி சாப்பிடும் ஒவ்வொரு ஸமயத்திலும், ஏதாவது ஒருவகை பானம் சாப்பிடுவது வழக்கமாயிருக்கிறது. சாப்பாட்டுக்கு மத்தியிலும் தாகமெடுத்த போதும ஜலம் குடிப்பதுண்டு. தாகமெடுக்காத போது ஜலமல்லாத வேறு பானவகைகளைத் குடிப்பது ரொம்ப கெடுதலானது.

அநேகர் சாப்பிடும்போது பானம் பருகுவது கூடாதென்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் உமிழ் நீரிலும், காஸ்ட்ரிக் ஜூஸ் என்று சொல்லப்படும் உணவை ஜீர்ணம் செய்வதற்கு உதவுகிற பாசக நீரிலும் ஜலம் கலந்து அவைகளின் வேகம் குறைந்துபோய் ஜீர்ணம் தடைபட்டுப்போகு மென்றும், தாழ்ந்த மிருகங்கள் தீனி தின்னும்போது ஜலம் குடிப்பதில்லையாகையால், அதுபோல நாமும் ஜலம் குடிக்காம லிருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சாப்பாடு விஷயத்தில் நாம் ரொம்ப சீர்திருத்தம் பெற்று அது விஷயத்தில நாமும் மிருகங்களும் ரொம்பவும் வித்யாஸப்படுவதால் அவைகளின் வழக்கங்களை ஒரு உதாரணமாகக் கொள்வது சரியல்ல. இன்னும் சாப்பிடும்போது மிதமாக பானங்கள் குடிப்பதால் ஆகாரம் சரியாக ஜீர்ணமாகிற தென்பது அநேகருடைய அனுபவமாயிருந்து வருகிறது. ஆகையால் தான் மேல்நாட்டாரில் அநேகர் காலைப்போஜனத்தோடு தேயிலை, காப்பி, பால் முதலியவைகளையும், நடுப்பகல் சிற்றுண்டியோடு காரமில்லாத ஒய்ன், ஸோடா முதலியவைகள், சுத்தஜலம் ஆகிய இவைகளையும், பிற்பகலில் ரொட்டியோடு தேயிலைக் கஷாயமும், இரவில் மேற்சொன்ன பான வகைகளோடு ஸூப்பும் குடிக்கிறார்கள்.

ஆகாராதிகள் ரொம்ப கெட்டியாயிருந்து ஜல ஸம்பந்தமில்லாமலிருந்தால் அவைகளை தக்கபடி மென்று தின்பது கஷ்டம். இக்காலத்தில் ஜனங்களுக்குப் பற்கள் கெட்டுப்போயிருப்பதால் ரொம்ப் கெட்டியான பதார்த்தங்களை அப்படியே மென்று தின்பது முடியாது. மேலும் நாகரீக முதிர்ச்சியால் நமது வாயிலுள்ள உமிழ்நீர் சுக்கும் கருவிகள் சுருங்கிப்போய் அதிக உமிழ்நீர் சுரப்பதில்லையென்று சொல்லலாம். ஆகையால் ஆகாரத்தை நன்றாய் மென்று தின்ன ஆகாரம் சற்று திரவம் கலந்ததாகவாவது இருக்கவேண்டும். அல்லது இடையிடையே பானவகைகள் குடிக்கவேண்டும். ஆனால் சாப்பிடும்போதும், அதற்குப்பிறகு உடனேயும் மிதமாகததான் பானவகைகள் குடிக்கலாமே யொழிய ஏராளமாய் பானவகைகள் குடிப்பது சரியல்ல. ஏராளமாய்க் குடித்தால் முன் சொன்ன பாசகநீர் என்பதில் ஜலம் அதிகமாகக் கலந்து ஜீர்ணம் தடைபட்டுப் போகும். ஜீர்ணம் சரியாக ஆகாவிட்டால் சாப்பிட்டு இரண்டுமணியான பிறகு ஒரு கோப்பை தண்ணீர் குடித்தால் ஆகாரம் ஜீர்ணமாகிவிடும்.

மற்றெல்லா பானங்களைவிட சுத்த ஜலந்தான் சிறந்தது. அது தாகத்தை சாந்தி செய்வதோடு ஆகாரமாகவும் ஆகிறது. நமது தேகத்தில் 5-ல் 4-பாகம் ஜலமாகும். தேகத்திலுள்ள இந்த ஜலத்தை ஸதாவெளிப்படுத்திப் புது ஜலம்

சேர்த்துக்கொண்டேயிருக்கவேண்டும். ஜலத்தை தேகத்தின் எந்த இடத்திலும் தங்கியிருக்கும்படி விடக்கூடாது. ஜலம் ஸதா தேகத்தில் ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும். ஜலத்தில் தாது ஸம்பந்தமான உப்புக்கள் இருப்பதால் தேக வளர்ச்சிக்கு ஸாதகமாகிறது. ஜலம் தகுந்த அளவில் சேர்ந்திருப்பதால் தான் தேகத்திலுள்ள நுண்ணிய ஜீவ அறைகள் தங்கள் தங்கள் வேலைகளை ஸரிவரச்செய்ய முடிகின்றது. தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்கள் ஜலத்துடன்கலந்து வெளியே போய்விடுகின்றன. அநேகர் ரொம்ப கொஞ்சமாக ஜலம்குடிக்கிறார்கள். சிலர் தாகமெடுத்தால் சுத்த ஜலம் குடிக்காமல் ரொம்ப காரமுள்ள சாராயம் முதலிய பானங்களைக் குடித்து தேகத்துக்கு கெடுதியுண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். அது சரியல்ல. அதிக ஜலம் குடித்துவிட்டால் அந்த அதிக ஜலத்தை வெளிப்படுத்த தேகத்தில் வேண்டிய உபாயங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் குறைவாய்க் குடித்தாலோ தேகத்திலுள்ள கழிவு பதார்த்தங்களை சுத்தம்செய்ய முடியாமல் போகிறது. வேண்டிய அளவுஜலம் குடித்துவந்தால் மிதமீறிய ஆகாரம் சாப்பிடுவதால் ஏற்படும் கெடுதிகளை நீக்கிவிடலாம். தினந்தோறும் காலையிலும் ராத்ரிப் படுத்துக்கொள்ளப் போகும் போதும் ஒரு டம்ளர் சுடுஜலம் குடித்துவந்தால் தேகத்திலுள்ள அநேக வ்யாதிகள் ஸுலபமாய் நீங்கிவிடும்.

## ADVICE TO STUDENTS.

## மாணுக்கருக்கு நீதிபோதனை.

மாணுக்கர்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை சரியான காலத்தில் ஒழுங்காகச்செய்துவந்து, தங்களுடைய பாடங்களை சரியான காலங்களில் படித்துவந்தால் தேகசௌக்யம் கெடாமலிருப்பதோடு படிப்பும் வ்ருத்தியடையும்.

மாணுக்கர்கள் எப்போதும் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேண்டும். கிழக்கு வெளுத்த பிறகு தூங்குவது சரியல்ல: காலையில் தானுகவே தூக்கத்தை விட்டு எழுந்திருக்க முடியாவிட்டால், வீட்டிலுள்ளவர்களை எழுப்பும்படி சொல்லவேண்டும். பெற்றோரோடும், மற்ற பந்துக்களோடும் வஸிக்காமல், தனியாக அயலூர்களில் வஸித்து வாசித்துக்கொண்டிருப்பவர்கள் காலையில் எழுந்திருக்கும் வழக்கம் ஏற்படுவதற்காக ஒரு 'அலாரம்' உள்ள கடியாரம் வைத்துக்கொள்வது நல்லது. சில நாள் விடியற்காலையில் எழுந்திருக்கப் பழகிவிட்டால், பிறகு கடியாரம் எழுப்பாமலே தானுக விழித்துக்கொள்ளலாம்.

தூங்கிவிழித்துக்கொண்டபிறகு படுக்கையில் படுத்துக்கொண்டிருக்கக்கூடாது. தூக்கமில்லாதபோதும் படுக்கையில் படுத்துப்புரண்டுகொண்டிருந்தால் சோம்பல் வ்ருத்தியாகும். படுக்கையைவிட்டு எழுந்தபிறகு ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருப்பதும், வீண்வார்த்தை பேசிக்கொண்டிருப்பதும், வாசிப்பதும் நல்லதல்ல. எழுந்தவுடன் மலஜலோபாதைகளைக் கழிக்கவேண்டும். மலச்சிக்கல் ஏற்பட்டு சரியான காலத்தில் மல ப்ரவர்த்தியாகாமலிருந்தால் பெற்றோர்களையாவது வைத்யர்களையாவது கேட்டுத் தக்க பரிஹாரம் தேடவேண்டும். தினந்தோறும் சரியான காலத்தில் மலப்ரவர்த்தியாவது தேகஸுகத்துக்கு ரொம்ப ஸாதகமாகும்.

பிறகு ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது தேகப்யாஸம் செய்யவேண்டியது ஆவச்யமாகும். தேகப்பயிற்சி செய்வதில் ஒழுங்காயும் காலந்தவறாமலும் செய்யவேண்டியது அவச்யமாகும். ஒருநாள் அதிகநேரம் செய்வதும், இன்னொருநாள் ஸ்வல்பநேரம் தேகப்பயிற்சி செய்வதும், இன்னொருநாள் தேகப்பயிற்சி செய்யாமலேயிருப்பதும் சரியல்ல. ஒவ்வொருநாளும் தேகப்பயிற்சிசெய்யுங் காலமும் ஒரேமாதிரியாயிருக்கவேண்டும். தினந்தோறும் காலையில் கால்மணி நேரம் விடாமல் செய்து வந்தால் போதுமானது.

ஸாதாரண "டம்பெல்," க்ரிப் டம்பெல்" முதலியவைகளைக் கொண்டு தேகப்பயிற்சி செய்யலாம். அவைகளை வாங்க சக்தியில்லாவிட்டால் தண்டால், பஸ்கி, கரலாபோடுதல் முதலிய ஸ்வதேச தேகாப்யாஸங்களைச் செய்து வரலாம்.

அதற்குப் பிறகுப் பற்களைத் துலக்கவேண்டும். பல்துலக்க அநேகர் பொடிகளும் குச்சிகளும் உபயோகிக்கிறார்கள். ஸாதாரண கரியையும் உப்பையும் பொடிசெய்து உபயோகிப்பது நல்லது. அல்லது சாக் பொடி, படிக்காரம், கற்பூரம் ஆகிய இவைகளைப் பொடிசெய்து கலந்தும் உபயோகிக்கலாம். கடைகளில் விற்கும் பல்பொடிகளை உபயோகிப்பது அவச்யமல்ல, கூடுமானால் வேல், கருவேல், இவைகளின் குச்சிகள் ஆலம்விழுது இவைகளைத் தேய்க்க உபயோகிப்பது நல்லது. இவைகள் ப்ரஷ்ஷாவதோடு பற்களையும் சுத்தம் செய்கின்றன. பல்லும் கெட்டிப்படுகின்றது.

பல் விளக்கியானதும் ஸ்நானம் செய்ய முடியாவிட்டால், முகத்தையும் கைகால்களையும் குளிர்ந்த ஜலத்தால் கழுவி சுத்தம்செய்யவேண்டும். ஆனால் தினம் காலையில் ஸ்நானம் செய்வதுதான் நல்லது. ஸ்நானம் செய்ய குளிர்ந்த ஜலமே ச்லாக்யமானது. ஸ்நானம் செய்கையில் முதலில் தலையில் ஜலத்தை விட்டுக்கொள்ள வேண்டும். மாணவர்கள் அதிகமாகப் படிப்பதாலும், பாடங்களைப்பற்றி அதிகமாக சிந்தனை செய்வதாலும், தேகத்திலுள்ள ரக்தமானது தலைக்கேறி மூளையில் அதிகமாகத் தங்கியிருக்கும். குளிர்ந்த ஜலத்தை முதலில் தலையில் ஊற்றிக்கொள்வதால் மூளையிலுள்ள ரக்தத்தில் அதிகமாயுள்ளது தேகத்திற்குத் திரும்பி வந்துவிடும். ஸ்நானம் செய்யும்போது காக்கை முழுகுவதுபோல் முழுகாமல், தேகத்தை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம்செய்யவேண்டியது அவச்யம். ஸ்நானம் செய்தபிறகு உலர்ந்த துணியால் தேகத்தையும் தலையையும் துடைத்து நன்றாய்க் காய்ந்த வஸ்த்ரத்தால் தேகத்தைப் போர்த்திக் கொள்ளவேண்டும்.

எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்வதாயிருந்தால், அதற்கும் காலை நேரமே ஏற்றது. அப்போது குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யாமல் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். வாரத்துக்கு ஒருதடவைக்குக்குறையாமல் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்.

எண்ணெய் தேய்த்துக்கொண்ட தினத்தில் தேகம் சோர்வடைந்திருக்குமாதலால், விடுமுறை நாட்களில் அப்யங்கனம் செய்துகொள்வதுதான் மாணவர்களுக்கு ஸௌகர்யமானது.

ஸ்நானமான பிறகு அவரவர்கள் தங்கள் தங்கள் ஜாதி யாசாரத்துக்குத் தக்கபடி நெற்றியில் விபூதியோ, நாமமோ, சந்தனமோ இட்டுக் கொள்ளவேண்டும். ஒருவர் ஸ்நானம்செய்தபிறகு நெற்றியில் ஒன்றும் இட்டுக் கொள்ளாவிட்டால், அவர் சாவு ஸம்பந்தமான அசுசியுள்ளவரென்று பலர் எண்ண இடமேற்படும். அல்லது ஆசார விஷயத்தில் அச்ரத்தையுள்ளவரென்றாவது பிறர் எண்ண ஹேதுவாகும்.

ப்ராமணர்கள் காலையிலும் மாலையிலும் தினந்தோறும் ஸந்த்யாவந்தனம் செய்யவேண்டியது அவச்யமாகும். மாத்யான்னிகம் செய்யும் நேரம் நடுப்பகலாகையால் பாடசாலைகளில் வாசிப்பவர்களும் உத்யோகம் செய்பவர்களும் அந்த நேரத்தில் அதைச் செய்வதென்பது முடியாது. ஆனால் அந்தக் கர்மாவை விடுவது சரியல்லவாகையால், காலை போஜனத்துக்குமுன் அதைச் செய்துவிடவேண்டும். ஸந்த்யாவந்தனம் செய்ய அதிகாரமில்லாத ஜாதியார் ஸ்நானம் செய்தபிறகு தங்கள் பெரியோர்களின் ஆசாரப்படி கடவுளை வணங்கவேண்டியது அவச்யமாகும்.

மேற்சொன்ன இந்த வேலைகளுக்கு ஸுமார் ஒருமணி ஸாவகாசம் செல்லும். ஆகவே ஒரு மாணவர் காலையில் 5-மணிக்குப் படுக்கையை

விட்டு எழுந்திருந்தால் 6-மணிக்குள் எல்லா வேலைகளையும் முடித்துவிடலாம்.

இவைகளுக்குப் பிறகு மாணுக்கர்கள் வாசிக்க ஆரம்பிக்கலாம். ஆனால் சிலருக்கு ஸ்வல்ப ஆகாரம் சாப்பிடுவது அவச்யமாயிருக்கும், ஏனெனில் அவர்கள் பள்ளிக்கூடம் போகுமுன் ஸுமார் 9-மணிகோ அதற்கு சற்றுப் பிறகோ சாப்பிட நேரிடுவதாலும், காலை 6-மணி முதல் அந்நேரம் வரையில் குடலில் ஒன்றுமில்லாமலிருக்குமாதலாலும், அவர்களுடைய படிப்புக்குத் தடையேற்படலாம். ஆனால் யாருக்கு 9-அல்லது 9½-மணிவரையில் சாப்பிடாமலிருக்க முடியுமோ, அவா ஒன்றும் சாப்பிடாமலிருப்பதே உத்தமம்.

அல்ப ஆகாரம் சாப்பிடவேண்டியிருந்தால் சுத்தமாயும் ஜலம் கலக்காமலுமிருக்கும் பாலைக் குடிப்பது நல்லது. பெரிய பட்டணங்களில் சுத்தமான பால் கிடைப்பது அரிதாகையால், கிடைத்ததை நன்றாய்க் காய்ச்சிவிட்டுக் குடிக்கலாம். இதற்கு பதிலாக கோதுமை, ராகி, அரிசி இவைகளால் பால்கஞ்சி செய்தும் சாப்பிடலாம். காப்பி குடிக்கும் வழக்கம் தற்கால நாகரிகங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. ஆனால் மாணவர்கள் இதைக் குடிக்கவேண்டிய அவசயங்கிடையாது. காப்பி குடிப்பதால் தேகமும் மூளையும் சுறுசுறுப்பாக இருக்குமெனறு சொல்வது ஸகஜம். ஆனால் இரவில் தூங்கிவிட்டுக் காலையில் ஸ்நானம் செய்துவிட்டாலேயே தேகத்தில் சுறுசுறுப்பு ஏற்பட்டுவிடுவதால், காப்பி குடிப்பது அனுவச்யமே. தினந்தோறும் காப்பி குடிப்பதால் ஜீரணசக்தி குறைந்துபோய் பிற்காலத்தில் நரம்புதளர்ச்சியும் நரமபு ஸமபநதமான வ்யாதிகளும உண்டாக ஹேதுவாகுமாம். மேலும் காப்பி குடிப்பதால ஏழையான இநதியர்களுக்கு அனுவசயமான செலவும் ஏற்படுகிறது.

இதறகுப்பிறகு மாணவர்கள் வாசிக்க ஆரம்பிக்கவேண்டும். வாசிக்கும்போது வேறுவிஷயங்களைப்பற்றிய ஞாபகமில்லாமல், படிக்கவேண்டிய பாடத்தில் மனத்தைச் செலுத்தவேண்டும். மனஸை ஒரு நிலைப்படுத்தி வாசிப்பதால், விஷயங்கள் நன்றாய் மனஸில் படியும். புஸ்தகத்தை எதிரில் திறந்து வைத்துப் பார்த்துக்கொண்டு பாடத்தை கவனிக்காமல் வேறு விஷயத்தை சிநதித்துக்கொண்டிருப்பது காலததை வீணுக்குவதாகும். பாடத்தில் கவனம் செலுத்த முயற்சி செய்தும் முடியாவிட்டால், சிறிது நேரம் புஸ்தகத்தை மூடி உலாத்திவிட்டு பிறகு வாசிக்க ஆரமபிக்கவேண்டும்.

பள்ளிக்கூடம் உள்ள நாட்களில் 9½ அல்லது 9 மணிக்கு சாப்பிடுவது நல்லது. விடுமுறை நாள்களில் இவ்வளவு சீக்ரமாக சாப்பிடவேண்டியதில்லை. பள்ளிக்கூட நாள்களில வீட்டிலுள்ளவர்கள் தினந்தோறும் காலையில் சீக்ரமாக சமையல்செய்து போடவேண்டியிருப்பதால், விடுமுறை நாள்களிலாவது அவர்கள் அவஸரப்படாமல் சற்று நேரங்கழித்து சமையல் செய்யும்படி விடுவது நல்லது. அந்தநாட்களில் மாணவர்கள் 10½ அல்லது 11-மணிக்கு சாப்பிடலாம்.

சாப்பிட்டவுடன் தேகத்துக்கு ச்ரமம கொடுக்கக்கூடாது. சற்று இளைப்பாறவேண்டியது அவச்யமாகும. பாடசாலை சற்று தூரமாயிருந்தால் நடக்கத்தான் வேண்டிவரும். இருந்தாலும் சறறு முன்னுடியே சாப்பிட்டிருநதால் கால்மணி நேரமாவது இளைப்பாறியிருநது பாடசாலைக்கு நடநதுபோகலாம்.

## THE WAR AND THE PAPER TRADE.

## யுத்தமும் கடுதாசி வ்யாபாரமும்.

யுத்தத்தினுல் பற்பல தொழில்களுக்கும வ்யாபாரஙகளுககும் கஷ்டம் நேர்நதிருப்பது போலவே கடுதாசி செய்யும் தொழிலுக்கும் ச்ரமம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் கல்வியின் அபிவருத்தியால் கடுதாசியின் உபயோகமு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஸுமார்

7-வர்ஷங்களுக்கு முன்னல் நாம் அன்ய தேசங்களிலிருநது கிட்டத்தட்ட 1-கோடி ரூபாய் மதிப்புள்ள கடுதாசி தருவித்து வந்தோம். ஆனல் சென்ற 1914-ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 31உ-யோடு முடிவான 1-வர்ஷத்தில் $1\frac{1}{2}$-கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள கடுதாசி, கடுதாசி அட்டைகள், முதலியன வர வழைததிருக்கிறோம. இந்தியாவில் தற்போது கடுதாசி செய்ய 5-பெரிய மில்லுகள் இருக்கினறன. இவைகளைத தவிர மட்டமான கடுதாசி செய்யும மிலலுகளும் இரண்டு இருக்கின்றன. இவைகளிலிருந்து கிடைக்கும ஸுமார் 75-லக்ஷம ரூபாய் மதிப்புள்ள கடுதாசியும நமது தேசத்திலேயே செலவழிநது போகிறது. ஆகவே நமது தேசத்துக்கு வர்ஷந் தோறும ஸுமார் $2\frac{1}{4}$-கோடி ரூபாயக்குக் கடுதாசி வேண்டியிருக்கிறது.

வெளி நாடுகளிலிருநது இறக்குமதி யாகும் கடுதாசியில் பாதிக்கு மேல் இங்கிலண்டிலிருநதும், கால் பாகம ஆஸ்ட்ரியா-ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய தேசங்களிலிருந்தும, மற்ற கால் பாகம் பெல்ஜியம், நார்வே, ஸ்வீடன், ஹாலண்டு முதலிய தேசங்களிலிருநதும் வந்து கொண்டிருநதன. யுத்ததகினல் எதிரி தேசங்களாகிய ஜெர்மனி, ஆஸ்ட்ரியா தேசங்களிலிருந்து கடுதாசி வருவது நின்று போயிறறு. இதே காரணத்தால் மற்ற தேசங்களிலிருந்து வரும் கடுதாசியின் மொத்தமும் குறைந்து போயிற்று. இங்கிலணடில கடுதாசி செய்வதற்கு வேண்டிய மரக்கூழும, புல வகைகளும் போதுமான அளவு ஸ்வீடன நார்வே முதலிய வெளி தேசங்களிலிருநது வருவது நின்று போனதால, அஙகே கடுதாசியின் விலை உயர்ந்து போய்விட்டது.

மேலும் இந்தியாவில் உள்ள கடுதாசி மில்லுகளுக்கு வேண்டிய கடுதாசிக் கூழும் அன்ய தேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்தது; யுத்தம் ஆரம்பிக்கவும், அதன் விலையும் உயர்ந்து போய்விட்டது. இந்தியாவில் கிடைக்கிற கடுதாசி செய்ய உதவும் புல் வகைகளின் விலையும உயர்ந்துவிட்டது. இத்யாதி காரணங்களால் யுத்தம் ஆரம்பித்தவுடனே இந்தியாவில் கடுதாசியின் விலை அதிகரிக்கலாயிற்று. கடுதாசிக்கு விலை சொல்லும்போது ஸாதாரணமாய், அதன் நிறையை அறிநது இவ்வளவு நிறைக்கு இவ்வளவு விலையென்று சொல்வது வழக்கம். இந்தப் பத்ரிகை அச்சடித்திருக்கும் கடுதாசியின் விலையானது யுத்தத்துக்கு முன் ராத்தல் 2-அணு முதல் $2\frac{1}{4}$-அணு வரையில் விற்றுக்கொண்டிருந்தது. யுத்தம ஆரம்பித்ததும் இதன் விலை $3\frac{1}{2}$-அணு ஆக உயாந்துவிட்டது.

இந்திய கவர்ன்மெண்டுகள் வெகுவாய் இந்திய மில்லுகளிலிருந்தே கடுதாசி வாங்கிவருகின்றன. பூனவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மில்லில் செய்யப்படும கடுதாசியில் அநேகமாய் எல்லாவற்றையும் பம்பாய் கவர்ன்மெண்டாரே வாங்கிவருகிறார்களாம். மற்ற மில்லுகள் மேற்சொன்ன மில்லைவிட அதிக கடுதாசி செய்கின்றனவென்றாலும், எல்லா மில்லுகளும் சேர்ந்து, மொத்தம் இந்தியாவுக்கு வேண்டியிருக்கும் கடுதாசியில் மூன்றில் ஒரு பாகந்தான் செய்கின்றன. இதில் பெரும்பாகம் கவர்ன்மெண்டுகளுக்குப் போய் விடுகின்றன. பாக்கியுள்ள ஸ்வல்ப கடுதாசிதான் பொது ஜனங்களுக்குக் கிடைக்கும். பொது ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய கடுதாசிக்கு அந்ய நாடுகளையே எதிர்பார்க்கவேண்டியதாகிறது.

இங்க்லண்டில் கடுதாசியின் விலை உயர்ந்து போய்விட்டதால், அங்கே அநேக முக்யமான பத்ரிகைகள் யுத்தம் ஆரம்பித்தவுடன் பக்கம் குன்றந்து வெளிவரலாயின. சிலவாரப் பத்ரிகைகள் மாஸப் பத்ரிகைகளாகவும், மாஸப் பதரிகைகள் 3-மாஸத்து ஒரு முறை வெளியாகும் பத்ரிகைகளாகவும் வெளிவரலாயின. ஆனல் இந்தியாவில் கடுதாசி விலை அதிகமாகியும் கூட பத்ரி

கைகளி பக்கம் குறையாமல் ஒரே சீராய் ப்ரசுரமாயின. ஸமீபத்தில் ஸ்வீடன் கவர்ன்மெண்டார் தங்கள் தேசத்திலிருந்து கடுதாசி செய்ய உதவும் மரக் கூழை இங்க்லண்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று உத்தரவு போட்டுவிட்டதால், இங்க்லண்டில் கடுதாசியின் விலை ரொம்பவும் அதிகமாகிவிட்டது. இதனால் அங்கே சில பத்ரிகைகள் நின்று போயின. இந்தியாவிலும் கடுதாசியின் விலை 3¼ அணாவாக இருந்தது 4½ அணாவாக ஏறிற்று.

யுத்தத்தில் ஸாமான்களையும் ஸைன்யங்களையும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக அநேகம் கப்பல்கள் வேண்டியிருப்பதால், தற்போது இங்க்லண்டில் வ்யாபாரத்துக்கு வேண்டிய அளவு கப்பல்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. மேலும் யுத்தம் நடப்பதற்கு பணம் வேண்டியிருப்பதால், அநாவச்யமான செலவுகளை ஜனங்கள் குறைக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் எண்ணி அநாவச்யமான ஸாமான்களைக் கப்பல்களில் கொண்டுவராமல் தடுத்து அவச்யமான சரக்குகளை மட்டும இறக்குமதி செய்ய அநுமதி கொடுக்கிறார்கள். தற்போது கவர்ன்மெண்டார் சுருட்டு, புகையிலை, கடுதாசி முதலியவைகளை வ்யாபாரிகள் தங்களிஷ்டப்படி இறக்குமதி செய்யாதபடி தடுத்து அவைகளை இறக்குமதி செய்ய லைஸென்ஸ் வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதில் கடுதாசி, கடுதாசி செய்வதற்கு வேண்டிய கூழ், இவைகளில் நூற்றுக்கு 40-பாகத்தைக் குறைத்து விடப் போகிறதாகத் தெரிகிறது. இந்த ஸமாசாரம் சிலநாள்களுக்குமுன்னால் இந்தியாவுக்குத் தெரியவரவே, இங்கே ராதல் 4½-அணாவாக இருந்த கடுதாசி தற்போது (24-தேதி) 6-அணாவாக உயர்ந்திருக்கிறது. மேலே சொன்னபடி இந்திய மில்லுகள் கவர்ன்மெண்டுக்குக் கடுதாசி செய்துகொடுத்து வருவதால் ஜனங்களுக்கு இந்தியாவில் செய்த கடுதாசி கிடைப்பது கஷ்டம். மேலும் மார்க்கெட்டில் கடுதாசி கொஞ்சமாயிருப்பதாலும், அன்ய தேசங்களிலிருந்து கடுதாசி வருவது கஷ்டமாகையாலும் விலை இன்னும் அதிகரிக்கும் போலிருக்கிறது.

இங்க்லண்டில் முன் சொன்னபடி கடுதாசி க்ராக்கி ஏற்பட்டிருப்பதோடு, இன்னும் ஒருகஷ்டம் ஏற்படுமென்று தெரிகிறது. முன்பு எவ்வளவு கடுதாசியும் கடுதாசிக்கூழும் இறக்குமதியாயிற்றோ அதில் 100-க்கு 60-பாகந்தான் இறக்குமதி செய்யலாமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு போடப்போகிறார்களாம். மேலும் கடுதாசி மில்லுகளோடு கடுதாசி செய்துகொடுக்கச் செய்திருக்கும் காண்ட்ராக்டுகளெல்லாம் சட்டப்படி செல்லாதென்று உத்தரவு போடப்போகிறார்கள்.

இதனால் பத்ரிகைகளுக்கு கடுதாசி விஷயத்தில் ச்ரமம நேரிடும். இந்தக் கஷ்டத்தை உத்தேசித்து பத்ரிகை அச்சிடுவதில் சில மாறுபாடுகள் செய்யப்போகிறார்கள். இதுவரையில் அவர்கள் செய்துவந்த தென்னவென்றால் சந்தாதாரர்களுக்குவேண்டிய மொத்த பத்ரிகைகளோடு இன்னும் அதிகமாக பத்ரிகைகள் அச்சிட்டு, கடைகளிலும் தெருக்களிலும் விற்றுவந்தார்கள். மொத்தம் அச்சடித்த பத்ரிகைகளில் 5-ல் ஒரு பாகம் விற்பனையாகாமல் திரும்பி வந்துவிடும். அதைக் கடைக்காரர்களுக்கு வீண் கடுதாசியாக விற்றுவந்தார்கள். இப்போது எவ்வளவு ப்ரதிகள் விலைப்போகுமோ அவ்வளவு ப்ரதிகளே அச்சடிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இதனால் தற்போது செலவாகும் 5-ல் ஒருபாகம் காகிதத்தை மிச்சம்பிடிக்கலாம், இன்னும் கடுதாசிக் கஷ்டத்தைக் குறைக்க பத்ரிகையின் பக்கங்களை 5-ல் ஒருபாகம குறைத்து விடப்போகிறார்கள். இதனால் முன் சொன்ன 100-க்கு 40-பங்கு குறைவு சரிப்பட்டுப்போகும்.

## REGULATING LAND REVENUE SETTLEMENTS.

## நிலத்தீர்வை ஸெட்டில்மெண்டுகளை ஒழுங்குபடுத்துவது.

கவர்ன்மெண்டார் நிலத்தீர்வையை முப்பது வாஷத்துக்கொருதடவை மாற்றி வருகிறார்கள். அவ்விதம் மாற்றுவதை கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி செய்யாமல் சட்ட ஸபையின் அனுமதி பெறாமற்செய்ய வேண்டுமென்று சட்ட ஸபை மெம்பர்களில் அநேகர் வற்புறுத்தி வருகிறார்கள். இப்போது ஆனரபிள் ராவ் பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் சென்னை சட்டஸபையில் இதைப்பற்றி ஒருமசோதாகொண்டுவர உத்தேசித்திருக்கிறார். அந்த மசோதாவும், அதைக் கொண்டுவருவதற்குக் காரணங்களும் அதன் நோக்கமும் பின் வருமாறு.

இம்மாகாணத்திலே நிலத்தீர்வை விதித்திருப்பதை திருத்தியமைக்கும்பொழுது அதை சட்டபூர்வமாய் ஒழுங்கு படுத்தவேண்டு மென்பது அவச்யமாதலால், கீழே கண்டவாறு சட்டம் செய்யப்படுகிறது.

1. இந்தச் சட்டமானது "லாண்டு ரெவினியூ ரிவிஷன் ஆக்டு" எனப்படும்.

2. இம்மாகாணத்தின் எந்த ஜில்லாவிலும், எந்த ஜில்லாவின் எப்பாகத்திலும் சட்டஸபையின் அநுமதியில்லாமல் நிலத்தீர்வையை மறு ஸெட்டில்மெண்ட் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்வதும், தீர்வைவிகிதங்களைத் திருத்தியமைப்பதும் கூடாது.

### நோக்கங்களும் காரணங்களும்.

நிலத்தீர்வையானது கவர்னமெண்டுக்கு ப்ரஜைகள் கொடுக்கும் ஒரு வரியாக இருந்தாலும் சரி, அல்லது நிலஸ்வானுக்கு நிலத்தை ஸாகுபடிக்கு எடுத்துக் கொண்டவன் கொடுக்கும் ஒரு வாடகையாக, இருந்தாலும் சரி அந்தத் தீர்வையை மாற்றுவதை ஒழுங்கு படுத்த ஒரு மசோதா ஏற்பட வேண்டியது அவச்யம்.

எந்த நாகரீகம் வாய்ந்த தேசத்திலும் பாவிக்கப்படுவதுபோல நிலத்தீர்வையை வரி யென்றால், அதை விதிப்பதையும், அதை உயர்த்துவதையும் மற்ற எல்லா வரிகளையும் போல சட்ட ஸபையால் ஒழுங்கு படுத்த வேண்டும்.

நிலத்தீர்வையைத் திருத்தி விதிப்பதனால் கிடைக்கக்கூடிய அதிக வருமானமானது மாகாணத்தின் செலவுகளுக்கு அவச்யமாயிருந்தாலும், அவச்ய மில்லா விட்டாலும், 30-வருஷத்திற்கு ஒருமுறை நிலத் தீர்வையைத் திருத்தி விதிப்பது இப்பொழுது அனுபவத்திலிருந்து வருகிறது. இவ்விதம் நிலத் தீர்வையைத் திருத்தி உயர்த்துவதனால் அனாவச்யமான செலவுகள் செய்யும்படி இடமுண்டாகிறதென்று சொல்வது தப்பாகாது. ஸெட்டில்மெண்டில் அதிக வருமானம் கிடைக்கும்பொழுது வேறு எந்தவரியையாவது, கவர்ன்மெண்டார் தள்ளிக் கொடுப்பதாகத் தெரியவில்லை. கவர்ன்மெண்டாரோ ஸாதாரண ஜனங்களைப்போல் தங்களுடைய வருமானத்திற்கு ஏற்றபடி செலவை ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல் கூடாது. அப்படிக் கில்லாமல் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், திறமையாக நிர்வாகம் நடத்துவதற்கு எவ்வளவு தொகை அவச்ய மெனபதை முதலில் நிர்ணயித்துக் கொண்டு, எல்லா ஜனங்களிடமிருந்தும் ஏற்றபடி வரியை விதித்து வாங்கவேண்டும்.

3. நிலத்தீர்வையை குத்தகைக்காரர் நிலஸ்வானுக்கு கொடுக்கும் வாடகையாகப் பாவித்தாலும், மேலே கண்டவாறு சட்டபூர்வமாய் அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது அவச்யமாகிறது. நிலங்களைத் தங்களுடைய ஆஸ்தி யென்றும், பிராசுதார்களை வாடகைக்குச் சாகுபடி செய்வோரென்றும் பாதயங்கொண்டாடும கவர்ன்மெண்டு உலகத்திலே வேறொன்று உண்டோ என்பது ஸந்தேகம். முன்பு ஈஸ்ட் இந்தியா கம்

பெனியானது வ்யாபாரக் கம்பெனியாயிருந்து அதிக லாபம் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் எவ்வளவு வருமானம் அடையக்கூடுமோ அவ்வளவு வருமானத்தையும் அடைவதற்காக நிலங்களை தங்களுடைய ஆஸ்தியென்று பாவித்துக் கொண்டாடியதனால், அக்கம்பெனிக்குப் பின் அதன் வார்ஸாக வந்த கவர்ன்மெண்டாரும் நிலங்களைத் தங்களுடைய ஆஸ்தியென்று எண்ணுகிறார்கள் போலும். கவர்ன்மெண்டாரையே மிராசுதார்களாக வைத்துக்கொண்டபோதிலும், நிலத்தீர்வையை உயர்த்தும் விஷயத்தில் அவர்களுடைய அதிகாரத்தை சட்டபூர்வமாய் ஒழுங்குபடுத்தவேண்டும். மிராசுதாருடைய ஸ்வபாவம் என்னவென்றால், நிலங்களை சாகுபடி செய்வோரிடம் எவ்வளவு பணம் பெறலாமோ அவ்வளவு பணத்தைப் பெறவேண்டு மென்பதேயாகும். சாகுபடி செய்வோரின் ஸுகத்தையாவது க்ஷேமலாபத்தையாவது மிராசுதார் கவனித்தறிவது அவரது ஸௌகர்யத்துக் கேற்றதல்ல.

இந்த ஸ்வபாவமானது ஒரு இயற்கை ப்ரமாணமாகும். நிலஸ்வான் ஸாதாரண மனிதனாக விருந்தாலுஞ்சரி, அல்லது விசாலமான கொள்கைகளையுடைய கவர்ன்மெண்டாக விருந்தாலுஞ்சரி, அவர்களுக்கு இந்த ஸ்வபாவம் இருக்குமென்றுதான் கொள்ளவேண்டும். இந்த விஷயத்தை ஒப்புக் கொண்டவர்களாய்த்தான் கவர்ன்மெண்டாரும் சாச்வத ஸெட்டில்மெண்டுள்ள ப்ரதேசங்களில் நிலஸ்வானுக்கும் ஸாகுபடி செய்பவனுக்கும் உள்ள ஸம்பந்தம் இப்படியிருக்க வேண்டுமென்பதை ஒழுங்கு படுத்த "எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட்" என்றுசட்டம் செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார விஷயத்திலேர வென்றால், அவர்கள் ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை சரியாய் உணர்ந்திருப்பவர்களாதலால், வரியைஉயர்த்தும் ஸ்வபாவமானது ஒருகட்டுக்குள் அடங்கியிருக்குமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் கவர்ன்மெண்டார்செய்திருக்கும் மறுஸெட்டில்மெண்டுகளையும், அவைகள் விஷயமாய் ஜனங்களும், அவர்களுடைய ப்ரதிநிதிகளும் ந்யாயமாய் ஆக்ஷேபித்ததை எப்படி கவர்ன்மெண்டார் கவனித்தார்களென்பதையும் பார்த்தால், கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய க்ஷேமத்தை அதிகம் கவனிக்காமல், வரி அதிகமாய்க் கிடைப்பதையே அதிகமாக கவனித்து வருகிறார்களென்று எண்ணவேண்டியிருக்கிறது. இப்படி நேரிடுவதற்குக் காரணமென்னவென்றால், ராஜாங்கத்தை நிர்வகிக்கும் உத்யோகஸ்தர்கள் மாறிக்கொண்டேயிருப்பதால் கவர்ன்மெண்டார் குடிகளுக்குச் செய்ய வேண்டிய கடமை யின்ன தென்பதைப்பற்றிய அபிப்ராயமும் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கிறது. ஆகையினால்தான் நிலத் தீர்வையை மாற்றும் ஒவ்வொரு ஸமயத்திலும் சட்டஸபையின் அனுமதியைப் பெறவேண்டியது அவச்யமாகிறது.

4. கவர்ன்மெண்டாருக்கும் பூஸ்திதியை அனுபவிப்பர், அல்லது சாகுபடி செய்வோர் ஆகிய இவர்களுக்கும் இடையில் புதிதாக ஒருவர் ஏற்பட்டுப் பலனடைந்து வருகிறார்களென்பதாக கவர்ன்மெண்டின் நிர்வாகத்தில் பொறுப்புள்ள உத்யோகஸ்தர்கள் பலமுறை வருத்தப்பட்டு சொல்லி யிருக்கிறார்கள். நிலததை உண்மையில் சாகுபடி செய்வோருக்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமான வருமானத்தை விட்டு வருவதனால், இடையே ஒருவர் அந்தப்பலனை யனுபவித்து வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. ஆகவே அவ்விதம் கிடைக்கும் அதிகவருமானத்தை நிலத்தீர்வை மூலமாகத் தாங்களே அடைவதில கவர்னமெண்டாருக்குச் ஸந்தோஷமுண்டென்று சொல்வது தப்பாகாது. இதற்காக நிலத்தீர்வையை உயர்த்த வேண்டுமென்று ஒரு கலெக்டர் சிபார்சு செய்தார். இதைக் கவர்ன்மெண்டார் மறுதளிக்கவில்லை, ஏனென்றால் மேலே கண்டவாறுள்ள

அதிக வருமானமர்னது நிலத்தை யனுபவிப்போ ருக்கு கிடைக்குமானுல் அவ்வருமானம் சாரா யக் கடைகளுக்குப் போய்விடுமென்று கவர்ன் மெண்டார் சொல்லுகிறார்கள்.

இந்தக் கொள்கையை ஏற்று அதன்படி நடந் தால், நிலஸ்வான்கள் அன்றாடங்காய்ச்சி ஜீவ னம் செய்யும் குடிகளாக ஆகிவிடுவார்கள். ஸர்க் கார் வரும்படியை அதிகப்படுத்த அதிக ஆவ லுள்ள கவர்ன்மெண்ட் மெம்பர்களும், ஸெட்டில் மெண்ட் உத்யோகஸ்தர்களும், ஜில்லா கலெக்டர் களும் அநேக ஜனங்களுடைய க்ஷேமலாபத்தை பாதிக்கும் இந்த விஷயத்தை தங்களுடைய மனோபாவப்படி தீர்மானிக்காமல் தடுப்பதற்காக, நிலத்தீர்வையை மறுஸெட்டில்மெண்டு செய்வது, இது விஷயமாய் முடிவான தீர்மானத்துக்கு வருவது ஆகிய இரண்டையும் சட்ட பூர்வ மாய் ஒழுங்குபடுத்துவது ரொம்பவும் முக்ய மாகும்.

5. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் அவச்யமான தென்பதைக் காட்டுவதற்காக ஆனரபிள் மிஸ்டர் போப்ஸ் சொல்லிய தென்ன வென்றால், "உரி மைகளை நிச்சயமாய்த் திட்டப்படுத்தி உறுதிசெய் யாதுபோனால், குடிகள் மெதுவாய் அவர்களுக் குத் தெரியாமலே க்ஷீணதிசை யடைந்துவிடு வார்கள். ஜமீன்தார் வெள்ளப்பெருக்குள்ள ஆற் றுக்கு ஸாமனமானவர்கள். குடிகளோ அந்நதி களின் கரைகள்போலாவார்கள். எளியவரைக் காத்து ரக்ஷிக்கவேண்டுமென்பதை உத்தேசிக் கும் பொழுதும் ராஜீய விஷயத்தையும் பொருளாதார விஷயத்தையும் யோசித்துப்பார்க் கும்பொழுதும் கவர்ன்மெண்டார் இது விஷய மாய் ஒன்றும் செய்யாமல் சும்மா இருக்கமுடி யாது".

இனி, மிராசுதார்களை அதிகமான தீர்வை கொடுக்கவேண்டுமென்று எப்பொழுதும் கவர்ன் மெண்டார் கேட்டுக்கொண்டே வரும்பொழுது, ஜனப்ரதிநிதிகளும் அதைக்கண்டு சும்மாவி ருக்க முடியாதென்று நான் நினைக்கிறேன். ஜமீன் தார்களையும் அவர்களுக்கு உட்பட்ட குடிகளை யும்பற்றி கனம் மிஸ்டர் போர்பஸ் பேசியிருப்ப தானது கவர்ன்மெண்டார், ரயத்துவாரி மிராசு தார்கள் ஆகிய இவர்களுக்குள்ளும் இன்னும் அதிகப் பொருத்த முள்ளதாகும்.

6. தஞ்சாவூரிலுள்ள ஜனங்களின் பொருளா தார நிலைமையைக் குறித்து விசாரணை செய்ய வேண்டுமென்று சென்ற சட்டஸபை மீட்டிங்கில் நான் தீர்மானங் கொண்டு வந்தபோது, அதைப் பற்றி நடந்த விவாதத்தைக் கவனித்தால், நிலத் தீர்வை விஷயமாய் கவர்ன்மெண்டார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைக்கு ஒரு வரையறை இருக்கவேண்டு மென்பது வெளியாகும். கவர்ன் மெண்டார் தங்களுடைய வருமானத்தைக் கவ னித்து இத் தீர்மானத்தை லேசாய்ப் பாவித்து விட்டார்கள்.

7. இந்தியா கவர்ன்மெண்டோடு மாகாண கவர்ன்மெண்டுகள் ஸெட்டில்மெண்டு செய்து கொள்ளும் விஷயமாய்த் தலையிட வேண்டுமென் பது இம் மசோதாவின் நோக்க மல்ல. நிலத்தீர் வையைத் திருத்தி யமைக்கும் பொழுது, அதை சட்ட பூர்வமாய் ஒழுங்கு படுத்த வேண்டு மென் பதே இம்மசோதாவின் உத்தேசமாகும்.

8. நிலத்தீர்வையைத் திருத்தி யமைக்கும் காலத்தைப்பற்றியாவது, அதை நூற்றுக்கு எவ் வளவு உயர்த்துவதென்பதைப்பற்றியாவது,இன் னும் அதைபற்றிய இதரவிஷயங்களைப்பற்றியா வது இநத மசோதா ஒரு நிபந்தனையும் ஏற்ப டுத்தவில்லை. நிலத்தீர்வை விஷயமாய் நிர்வாக கவர்ன்மெண்டார் என்ன நடவடிக்கைகள் எடுத் துக்கொண்டபோதிலும் அவைகளை, சட்டஸபை யின் அங்கீகாரத்தையும் அனுமதியையும் ஒட் டியே செய்யவேண்டு மென்பதுதான் இம்மசோ தாவின் நோக்கமாகும்.

## REVIEW OF THE PRESS.

## பத்ரிகை ஆராய்ச்சி.

### THE MEDICINAL USES OF BRAN.

### தவிட்டின் ஔஷத உபயோகங்கள்.

ஸாதாரணமாய் நெல்லைக்குத்தி அரிசி யெடுக்கும்போது, உமித் தவிடு என்றும், தீட்டரிசித் தவிடு என்றும் இரண்டு வகையான தவிடுகள் கிடைக்கின்றன. இவைகளைத்தவிர நுட்பமான தவிடு இன்னும் அரிசியில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அரிசியை உலை நீரில் கொட்டுமுன் அதைக் கழுவும்போது இந்த நுட்பமான தவிட்டிலும் ஒரு பாகம் அரிசியை விட்டு நீங்கி விடுகிறது. ஆயினும் சிறிது நுட்பமான தவிடு இன்னும் அரிசியில் ஒட்டிக்கொண்டிருக்கும். ஆனால் அரிசி குத்தும் யந்திரத்தில் நெல்லைக் குத்தினால் அரிசியில் கொஞ்சங்கூட தவிடு இருக்காது. இவ்விதம் தவிடு முழுவதையும் எடுத்து விட்ட அரிசியும் அதைச்சமைத்த சாதமும் பார்வைக்கு லக்ஷணமாயிருப்பதால் அநேகர் நன்றாய்த்தீட்டிய அரிசியையே உபயோகிக்க ப்ரியப்படுகிறார்கள். ஆனால் அந்த அரிசியை உபயோகிப்பது ரொம்ப கெடுதலாயிருப்பதோடு, ரொம்ப உபயோகமுள்ள ஒரு பதார்த்தத்தை அதாவது தவிட்டை வீணில் உபயோகிக்காமல் விட்டுவிடுகிறோமென்று 'வைத்தியகலாநிதி'யில ஒரு நிருபர் சொல்லுகிறார். அவர் சொல்லும் காரணமாவது:

தேஹத்திற்கு வேண்டிய வலுவைத் தரக்கூடியது தவிடு. இது தேஹத்திற்குக் கெடுதி யுண்டாக்கும் நுண்ணுயிர்களைச் சேரவிடாமல தடுத்துவிடும சக்தியை யுடையது; அவ்வித நுண்ணுயிர்களைக் கொல்லும் சக்தியும் இதற்குண்டு. யந்திரங்களில் குத்தியெடுத்த அரிசியையாவது, அல்லது வெகு வெண்மையாகத் தீட்டிய அரிசியையாவது சில நாள் உபயோகிக்காமல் வைத்திருந்தால், அதில பூச்சிகள் உண்டாய் அது கெட்டுப் போகிறது. நன்றாகத் தீட்டாத அரிசியையாகிலும், அல்லது நன்கு பளபளப்பாகத் தீட்டிய அரிசியோடு, தவிட்டைக் கலந்தாகிலும் சில நாள் வைத்திருந்தோமானால, அதில் அவ்வளவு சீக்கிரத்தில் பூச்சிகள் பிடிப்பதில்லை யென்பதை நாம அநுபவத்தில ப்ரத்யக்ஷமாகப் பார்த்து வருகிறோம. ஸ்வதேச வைத்யர்களில் சிலர், ரணங்களைக் கழுவி நிர்மலமாக வைப்பதற்காக அரிசி கழுவிய நீரைக் காய்ச்சி உபயோகிப்பதாகவும், ரணங்களின் மேல் தவிட்டைத் தூவுவதாகவும் தெரிய வருகிறது. அவர்கள் அவ்விதம செயவதற்குக் காரணம், தவிட்டுக்கு க்ருமிஹாரமான சக்தி யுண்டென்பதை அவர்கள் ஒருவாறு அறிந்திருக்கவேண்டு மென்பதேயாம்.

சென்னை மாகாணத்தின் வடபாகத்திலுள்ள சில ஜில்லாக்களில் வெகு வெள்ளையாகத் தீட்டிய அரிசியை உபயோகிப்பதால் பெரி பெரி யென்னும் வ்யாதி உண்டாவதாகவும், தவிட்டை வேண்டியவளவு உபயோகிப்பதாலும், அல்லது தவிட்டிலிருந்து தயார் செய்த ஒருவித ஔஷதத்தை உபயோகிப்பதாலும், அதிகமாகத் தீட்டி வெண்மையாக்காத அரிசியைச் சமையல் செய்து உண்பதாலும், இந்த வ்யாதி நிவ்ருத்தியாவதாகவும் தெரிகிறது. புழுங்கலரிசியை உபயோகிப்பவருக்கு இந்த வ்யாதி வருகிறதில்லையென்று தெரியவருகிறது. புழுங்கலரிசியில் தவிடாகப் பிரியக் கூடிய சில அம்சங்கள், நெல்லைப் புழுக்கும்போது அரிசியோடு வெகு வலுவாகப் பற்றிக் கொண்டு விடுவதாலும், அந்த நெல்லைக் குத்தும்போது மேலுள்ள உமி எளிதில் அரிசியிலிருந்து நீங்கி விடும்படி அவ்வளவு பக்வமாயிருப்பதாலும, புழுங்கலரிசியில் தவிடு அவ்வளவு அதிகமாகப் பிரிந்து விடுவதில்லை. ஆகவே அந்த அரிசியும் பெரி பெரி வ்யாதியைத் தடுப்பதற்கோ, ஸ்வஸ்தம் செய்வதற்கோ உபயோகப் படுகிறதென்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

மிகவும் சுத்தமாகத் தீட்டிய அரிசியைக் கோழிகளுக்கு ஆஹாரமாகப் போட்டு வந்தால், அவைகளுக்கு நரம்பு ஸம்பந்தமான வ்யாதிகள் (nervous affections) ஸம்பவித்து அவை மரித்து விடுகின்றன வென்றும், வ்யாதி அதிகரிக்காததற்கு முன்னமே தவிடு கலந்த அரிசியையோ, அல்லது நன்றாகக் குத்தாத அரிசியையோ உணவாகப் போட்டு வந்தால் அவற்றிற்கு உண்டான வ்யாதி ஸ்வஸ்தமாய், அவை பிழைத்து விடுகின்றன வென்றும பரிசோதனைகளால் சிலர் நிச்சயித்திருக்கிறார்கள்.

தவிடு நீக்கிய அரிசியை உபயோகிப்பதால் உண்டாகும் கெடுதி, இதனுடன் வெவ்வேறு காய்கறி முதலிய வ்யஞ்ஜனங்களைக் கூட்டிப் புசிப்பதால் ஒரு

வாறு குறைவடையும். இதர வ்யஞ்ஜனங்களைக் விசேஷமாகச் சேர்த்து உபயோகிக்கச் சக்தியில்லாத ஏழை ஜனங்கள் இவ்வித அரிசியை உபயோகித்து வருவார்களாகையால், அவர்கள் இதனால் மேற்சொன்ன கெடுதிகளுக்கு உள்ளாகவேண்டி நேரிடுகிறது.

தான்யங்களின்—முக்யமாய் இங்கு அரிசியின், மேல் தோலான உமியை மெதுவாக உடைத்து நீக்கிய பிறகு, குத்தப்படும்போது அரிசியின்மேற் ஒட்டிக்கொண்டிருக்கும் பசையுள்ள சில பொடிகள் அரிசியிலிருந்து வெளிப்படுகின்றன ; இந்த பாகமும் சரியான தவிடாகக் கருதப்படுகிறது. சரீரத்தின் போஷணைக்கு இன்றியமையாத அல்ப்யூமின் என்னும் (ஸம்ஸ்கிருதத்தில அதுவே ஓஜோதாது வென்று கூறப்படுவதாய் அறிகிறோம்.) தாதுவை வ்ருத்தி செய்வதற்கான ஸத்வம் இத்தவிட்டில் விசேஷமாய் அடங்கியிருப்பதாய் சாஸத்ரவல்லோர் பரிசோதித்து அறிந்திருக்கிறார்கள். ஆகவேதான் தவிடு நீங்கிய அரிசி தேக போஷணைக்கு அவ்வளவாய் ஏற்றதல்லவென்று கூறப்படுகிறது. இக்காரணத்தினாலேயே நாய்கள் தவிட்டு ரொட்டியை மட்டும் தின்று வலிவுடன் ஜீவித்திருக்கக்கூடுமென்று நிச்சயித்து, மேனாட்டார் அநேகர், நாய்களுக்கு விசேஷமாய் தவிட்டுப பணியாரங்களையே ஊட்டமாகக் கொடுத்துவருகிறார்கள் என்றும் நாம் கேள்வியுறுகிறோம். உமி மாத்ரம் நீங்கிய அரிசியைக குத்தாமலே, தவிட்டோடு சமையல்செய்து புஜித்தால், அது மலத்தை நன்றாக வெளிப்படுத்துமென்றும், ஆகவே அஜீர்ணரோகத்தில் அவ்வாறு செய்வது உத்தமமென்றும் மேனாட்டு வைத்ய பண்டிதாகளும் அபிப்பிராயபபடுகிறார்கள.

## FEMALE EDUCATION.

## பெண்கல்வி.

எவ்விதமான கல்வியைப பெண்களுக்குக் கற்றுக் கொடுப்பதென்பதைபபற்றி 'வித்யாபானு' பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது.

காலத்தின் நிலைமையை அனுஸரித்து பெண் கல்வி இரண்டு விதமாயிருக்க வேண்டுமென்று அந்தப பத்ரிகை சொல்லுகிறது. எல்லாப பெண்களுக்கும ஏற்றதான பொதுக் கல்வி ஒன்று. உத்யோகங்களை அபேக்ஷிக்கும் பெண்களுக்கேற்றகல்வி இரண்டாவது.

பெரிதுக் கல்வியானது ஆண் பிள்ளைகளின் படிப்பைப் போலிராமல் பெண்களுக் கேற்றவிதமாயிருக்கவேண்டும். தற்கால ஹிந்துக்களின் தேசாசாரப்படி பெண்கள் 5-வயது முதல் 11-அல்லது 12-வயது வரையில்தான் பள்ளிககூடங்களில் வாசிக்கிறார்களாகையாலும், இந்த தேசாசாரத்தை அசட்டை செய்யக கூடாதாகையாலும், இந்த ஸ்வல்பகாலத்தில் அவர்களுக்கு எவை முக்யமோ அந்த விஷயங்களை மாத்ரம் கற்பிக்கவேண்டும்.

எல்லாப் பெண்களுக்கும் எழுத வாசிக்கத் தெரிய வேண்டியது அவச்யம். தேசபாஷைப புஸ்தகத்தில் எந்த விஷயத்தையும் வாசிக்கத் தெரியவேண்டும். ஸாதாரண விஷயங்களை எழுதத் தெரியவேண்டும் கணக்கு விஷயத்தில் வீட்டுவேலைக்கு வேண்டிய அளவு எல்லாப் பெண்களுக்கும் தெரிந்தால் போதுமானது மேல் பரீக்ஷைகளுக்குவேண்டிய கணக்குகளுக்கெல்லாம் அடிப்படையிலேயே அஸ்திவாரம் போடுவதாகச் சொல்லி, அவர்களில் அநேகம் பேர்களுக்கு, ஜீவ்யகாலத்தில் வேண்டாத கணக்குகளையெல்லாம், பையன்களுக்குச் சொல்லிக் கொடுப்பது போல, சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. ஸாகாதார விஷயங்களை கட்டாயம் கற்பிக்கவேண்டும்.

தேக தத்வசாஸ்த்ரம் ஸ்த்ரீகளுக்குப படங்கள் மூலமாகவும், பூதககண்ணாடிகள் மூலமாகவும் அவச்யம் கற்பிக்கப் படவேண்டும். ஏனெனில் ப்ரஸவத்துக்கும் குழந்தை பராமரிப்புக்கும இந்த சாஸ்த்ரப்பயிற்சி மிகவும் அவசயமானது. சித்ரம் எழுதுவது (கோலம்போடுவது), தையல்வேலை ஆகிய இவைகளும் அவச்யமான பாடங்களாகும் இல்லாண்மை அடுத்த முக்யமான விஷயமாகும். இவ்வளவு விஷயங்களையும் பெண்களுக்கு அவர்கள் பாடசாலைக்குப போகிற ஆறேழு வர்ஷங்களிலே கற்றுக்கொடுத்து விடலாமென்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

முதல மூன்று வர்ஷம் எழுதப்படிக்கவும், கணக்குபபோடவும், கோலம் போடவும் கற்றுக்கொடுக்க வேண்டும. பிறகு வர்ஷாவர்ஷம் ஒன்றிரண்டு பாடங்களைச் சேர்த்து வரலாம். எல்லா வகுப்பிலும் தேகப் பயிற்சியும் ஏதாவது கைத்தொழிலும் ஸங்கீதமும் கட்டாயம் ப்ரதிதினமும் கற்றுக்கொடுக்கவேண்டும். குடும்ப வைத்யம் ஸவல்பம் கற்பித்தல் அவச்யம். ஸம்ஸ்க்ருதம், இங்க்லீஷ் முதலியவைகளை, பெண்கள் 12-வயஸுக்குமேல் பள்ளிக்கூடத்தில் படிப்பார்களானால் அப்பொழுது ஒருகால் சொல்லிககொடுக்கலாம்.

இவ்வளவும் எல்லாப்பெண்களுக்கும் கற்பிக்கவேண்டிய ப்ரதமப்படிப்பாகும். பெண்கள் உபாத்யாயர்வேலை, வைத்யவேலை, தபாலிலாகாவேலை முதலிய வேலைகளுக்குப்போக பிரியப்பட்டால், அவர்களுக்கு செகண்டரி பாடசாலைகளிலும் காலேஜுகளிலும் அந்த உத்யோகங்களுக்கேற்ற படிப்பைக் கற்றுக்கொடுக்கலாம். இவ்விதம் எழுதிவிட்டு "வித்யாபானு" சமையல்வேலையை கற்பிப்பதைப்பற்றிப் பின் வருமாறு எழுதுகிறது.

"க்ருக க்ருத்யங்களுக்கு வேண்டிய[சமயல்தொழில் முதலியவைகளைத் தாய்மாரே வீட்டிற் பழக்கவேண்டும். ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது. ஆகையால் வீட்டு வேலைகளில் பால்யம் முதல்கொண்டே தாய்மார்கள் பழக்கிவைப்பது பெண்களுக்கு மிகவும் அநுகூலமாகும். வீட்டு வேலைகளில் ஒன்றிலும் பழகாமல் ஸதா பள்ளிக்கூடத்துப் படிப்பிலேயே தங்கள் காலத்தைச் செலவிடும் பெண்கள் பிற்காலத்தில் பெருங் கஷ்டப்படுகிறார்கள். கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியது பெண்களுக்கு இன்றியமையாதது. ப்ரஸவம் முதலான கஷ்டங்களை இயற்கையிலேயே தெய்வம் அவர்களுக்கு அமைத்திருப்பதாலும், குழந்தைகள் விஷயத்தில் பல கஷ்டங்களை அவர்களே அநுபவிக்கவேண்டியிருப்பதாலும், அவற்றை அவர்கள் மனஞ்சலியாது தாங்குவதற்கு பால்யம் முதலே வேலையில் பழக்கப்படவேண்டும். அவ்வாறு செய்யாமல் சில தாய்மார்கள் தங்கள் பெண்களைச் செல்வமாய் வளர்த்துவிடுகிறார்கள். அதன் கஷ்டம் பின் தான் அவர்களுக்குத் தெரியும். ஆகையால் பெண்கள் வாழ்நாளுக்குதவும்படியான கல்வியே உத்தமக் கல்வியாம்."

## SELECTION OF BOOKS.

### புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்.

தற்காலம் அச்சடிக்கும் தொழில் அபிவ்ருத்தியடைந்து அநேக புஸ்தகங்கள் பிரசுரமாகி வருகின்றன. இவைகளில் சில நல்லவையாகவும் சில தீயவையாகவும் இருக்கின்றன.

நமது வாழ்நாள் ஸ்வல்பமாயிருப்பதாலும், கற்கவேண்டிய நூல்கள் அதிகமாயிருப்பதாலும், இன்ன நூல்கள் உபயோகமுள்ளவை, இன்ன நூல்கள் தீங்குள்ளவையெனத் தெரிந்து தீங்குள்ளவைகளைத் தள்ளிவிட்டு நல்ல நூல்களையே வாசிக்கவேண்டும். இது விஷயமாய "விவேகசிந்தாமணி" பத்திரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது.

புஸ்தகங்களை உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

அவற்றில் சுத்த அப்ரயோசனமும், அருவருப்பும், தொட்டோர், கேட்டோர், பார்த்தோர் மனங்களில் நித்யமான கெடுதியை பிறப்பிக்கத் தக்கதுமான அதம நூல்கள் உலகத்துக்குக் கேடாய உற்பத்தியாயிருக்கின்றன என்பதற்கு ஸந்தேகமில்லை.

ஒரு பெரியவர் குறித்தபடி, இவ்வுலகத்தில் தீமைக்கிடமாகிய, விஷ வாப்பங்களும், காய்கனிகளும், பொது மாதரும் கண்ணுக்கு அதிக பகட்டாய்த்தோன்றுவதுபோல் அதம புஸ்தகங்களும் உத்தம நூல்களைப் பார்க்கிலும் ஸாதாரணமாய் அதிக சொற்சிறப்புற்றவைகளாய், நாவுக்கு நயத்தையும், செவிக்கு இன்பத்தையும் கொடுக்கிறவைகளாயிருக்கின்றன.

மத்திம புஸ்தகங்கள் விஷத்துளிகள் கலந்த நிறைபால் குடம்போலும், மண்ணோடு விரவின அரிசிபோலும் நல்விஷயங்களும் தீயவிஷயங்களும் அமைந்தனவாயிருக்கின்றன. மூன்றாம் வகையாகிய உத்தமபுஸ்தகங்கள் தொகையில் குறைவாயிருப்பினும் அவற்றில் நமது ஜீவிதகாலமுழுவதும் கற்றுணரத்தக்க போதனைகள் உண்டு. மனிதர் வாசித்தறியவேண்டிய ஸகல விஷயங்களிலும் ஆத்ம விஷயமே அத்யந்த முக்யமானது. இப்படிப்பட்ட உத்தம புஸ்தகங்களையே தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும்.

"புஸ்தகங்கள் இவ்வளவு திரளாயிருக்க, அவைகளில் நல்லதின்னது, தீயதின்னது என்று பகுத்தறிவதெப்படி என்று சிலர் கேட்கலாம். அறிவது அதிக ப்ரயாஸமல்ல. எப்படியென்றால், ஒரு புஸ்தகத்தின் லக்ஷணத்தை, அதைச் செய்தவருடைய தன்மை, நோக்கம் முதலியவைகளை கவனிப்பதனாலும், அவர் செய்திருக்கும் மற்ற நூல்களின் பொது லக்ஷணத்தைக் கொண்டும், அப்புஸ்தகத்தின் பிரிவுகள் பொருள் அட்டவணைகளை நோக்குவதினாலும், இவைகளினால் விளங்காவிடில் அப்புஸ்தகங்களில் ஒரு பாகத்தை திட்டமாய வாசிப்பதனாலும் அறியலாம். ஒரு சுருக்கவழி என்னவென்றால் அப்புஸ்தகங்களைப்பற்றி, நம்மைவிட அறிவாளிகளும் யோக்யருமானவர்களுடைய அபிப்ராயத்தை அறிவதே. நல்ல மரங்களும் நச்சு மரங்களும் மிகுதியாயினும், உலகத்தில் ப்ரத்யக்ஷமாய்த் தெரிந்

திருக்கிறதுபோல, ஸத்குணரான வித்வான்களுக்கு நூல்களுடைய குணதோஷங்கள் களங்கமறத் தெரியுமாதலால் அவர்களைக்கேட்டு உலகப்ரஸித்தமான நல்ல புஸ்தகங்களை ஐயமின்றி வாசிக்கலாம்."

"புஸ்தகங்களை இத்தனை திட்பநுட்பமாய்த்தெரிந்து வாசிக்கத்தேவையென்ன?என்று விசாரிக்க ஏதுவுண்டு. அது மிகவும் அவசியந்தான். எப்படியென்றால் நாம் வாசிக்கும் புஸ்தகங்களின் தன்மைக்குத் தக்கதாகவே நாம் அடையும் அறிவும் நமது ஸம்பாஷணைப்போக்கும் எழுத்துப்போக்கும், நமது மனேமுயற்சியும், நமது குணக்குறிகளும் நடபடிகளும், அவற்றால் விளைக்கும் இம்மை மறுமை அனுபவங்களும் ஒருவாறு இருக்கும்.

"விசேஷமாய் பால்யத்தில் வாசிக்கும் புஸ்தகங்களைக் குறித்து கவனமாயிருப்பது அவசியம். ஏனென்றால், அவைகளால் உண்டாகும் அபிப்ராயங்கள் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றபடி மனதில் பலமாய்ப்பதிந்து ஜீவகால முழுவதும் மனதோடேகூட வளர்ந்து ஸ்திரப்படும். தகாத தன்மையுடைய ஒரே புஸ்தகத்தை வாசிப்பதால் நமது குணங்குறிகள் இம்மையிலும் நித்ய கெடுதியடையக்கூடும். ஆகையால் சொல்லில்,பொருளில் சிறந்தபுஸ்தகங்களையே தெரிந்து வாசித்தால் எவ்வளவோ அவச்யம்!"

## PUNISHMENT IN SCHOOLS.

### பாடசாலைகளில் தண்டனை.

'பெண்கல்வி'ப் பத்திரிகையின் ஸமீப ஸஞ்சிகையொன்றில் ஒரு நிருபர், பள்ளிக்கூடங்களில் தண்டனையைக் குறைப்பதற்கேற்றவையான சில உபாயங்களைத் தெரிவிக்கிறார். அவையாவன:

1. நீர் விழிப்பாய் இரும். நீர் விழிப்பாயிருந்தால் சிறுவர்கள் குற்றஞ் செய்ய இடமிராது. குற்றஞ் செய்த பிறகு தண்டிப்பதைக்காட்டிலும் குற்றம் வராமலே தடுப்பது விவேகம்.

2. மாணாக்கருக்குப் பாடசாலைக் காலத்தில் பூர்ண வேலையை கொடும். துஷ்டத்தனத்துக்கு அப்போது அவகாசமிராது. வேலையில்லாச் சோம்பேறிகளே வெகு துஷ்டர்களாவார்கள்.

3. உம்முடைய போதனையை உல்லாஸகரமாக்கி அதைக் கேட்பதில் சிறுவர்கட்கு விருப்பை யுண்டுபண்ணும். அப்போது குறும்புகள்செய்ய மாணாக்கர்யத்தனப்படார். குறும்புகள் இல்லாதவிடத்து தண்டனையேது?

4. நீங்கள் செய்யவேண்டியது இன்னதென்று பிள்ளைகளுக்குத் தெரியும்படி சொல்லும். அநேகக் குற்றங்கள் விளைவதற்குக் காரணம் தமது கடமை இன்னதென்று அவர்கள் அறியாமலிருப்பதே.

4. பிள்ளைகளை எல்லாம் உமது பக்கமாய் வசப்படுத்தும். அநேகர் உம்முடைய பக்ஷமிருந்தால் எவனும் உமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்ய அஞ்சுவான். அப்போது தண்டனையை உபயோகியாமல் நல்ல பிள்ளைகளைக்கொண்டே துஷ்டனைத் திருத்துவிக்கலாம்.

6. பிள்ளைகளை மரியாதையாய் நடத்தும் அப்போது தண்டனை அவமானமென்றெண்ணி பையன்கள் குற்றங்கள் செய்ய அஞ்சுவார்கள்.

7. மாணாக்கருடைய வீட்டுக்குப்போய் தாய்தந்தையரோடு ஸ்நேகங்கொண்டு பிள்ளைகள் விஷயமாய் சிரத்தை பாராட்டி வருவீரானால், பெற்றோரும் உம் பக்கம் சேர்ந்து உமது கரம சிக்ஷைக்கு அனுகூலமாய்த் தம்மக்களை நடத்திவருவார்கள். பிள்ளைகளுக்கும் உமமிடத்தில் பெருந்தாக்ஷண்யம் தோன்றி உமக்குக் கோபம் வருங்கார்யத்தைச் செய்ய அஞ்சுவார்கள்.

8. கோப மும்முரத்திலேயே தண்டிக்கப்புகாதேயும். சற்று ஸாவதானப்பட்டால் தண்டனை வேண்டாமென்றாவது அல்லது அதைக் குறைக்க வேண்டுமென்றாவது தோன்றும், கோபம் ஓர் பைத்யம்.

9. மற்ற உபாயங்கள் கைகூடாவிட்டாலல்லது தண்டனையை உபயோகிக்காதேயும். சதுர்வித உபாயங்களுள் தண்டம் கடைசியதென்று நீர 'பஞ்சதந்திர'த்தில் வாசித்ததில்லையா?

10. தண்டிப்பது அவசயமென்று தீர்மானித்த பிறகும் கூடியமட்டில் குறைந்த தண்டனையைக் கொடும். கையில் பிரம்பு வைத்திருந்தால் பிரம்படிதான் சரியென்று தோன்றுவதுண்டு ஆகையால் அதை அப்புறமே வைத்திருக்கவேண்டும்.

11. வாஸ்தவமான துன்மார்க்கங்களுக்காகத் தண்டிக்கலாமேயொழிய, சிறுவர்கட்கு இயற்கையான சில்லரைச் சேஷ்டைகளுக்கெல்லாம் தண்டிக்கக் கூடாது.

12. துன்மார்க்கத்தை முளையிலேயே அற்பதண்டனையால் அப்போதைக்கப்போது கிள்ளிப்போடும். முற்றவைப்பதனால் பெருந்தண்டனைகளாகிய கோடரிகள் வேண்டியிருக்கும்.

13. தண்டனைவருவது நிச்சயமென்று பிள்ளைகள் அறியட்டும். அறிந்தால் பிள்ளைகள் குற்றஞ்செய்யார். நெருப்பு சுடுமென்பது நிச்சயமாகையால் நெருப்பை யாருந் தொடுகிறதில்லை. குற்றஞ் செய்யுந்தோறும் தண்டித்துவரவேண்டும்.

# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

### An Educational Conference.

ஒரு வித்யா கான்பரென்ஸ் —க்ராண்ட்-இன்-எய்ட் கோடு சட்டம், வித்யா சட்டம் ஆகிய இவைகள் ஸம்பந்தமான சிலவிஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஒரு கான்பரென்ஸ் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதில் உத்யோகஸ்தர்களேயன்றி உத்யோகஸ்தர்களல்லாத வித்யாபிமானிகளும் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தக் கான்பரென்ஸ் மார்ச்சுமீ 10உ யன்று கூடும். இதில் பின்வரும் விஷயங்களைப்பற்றி கவனிப்பார்கள்

(1) பப்ளிக் மானேஜ்மெண்டின்கீழுள்ள அதாவது கவர்ன்மெண்ட், முனிஸிபாலிடி, லோகல்போர்டுகள் ஆகிய இவைகளின் மேற்பார்வையிலுள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் இப்போதுள்ள சம்பள விகிதங்களை மாற்றவேண்டுமோ? அப்படியானால், எவ்விதம், எவ்வளவுதூரம் மாற்றவேண்டும்.

(2) மேற்சொன்ன பாடசாலைகளுள் இன்பண்ட் வகுப்பு முதல் நான்கு வகுப்புகள் மாத்ரம் உள்ள பள்ளிக்கூடங்களில் வஸூலான சம்பளத்தை தலைமை உபாத்யாயர்கள் எடுத்துக்கொள்ளும் ஏற்பாட்டை அப்படியே விட்டுவிடுவதா, நிபந்தனைக்குள்ளாக்குவதா, அல்லது ஒழித்துவிடுவதா?

(3) பொதுஸ்தாபனங்களின் மேற்பார்வையிலுள்ள பள்ளிக்கூடங்களில் பயிற்சியடைந்த உபாத்யாயர்களுக்கு காபிடேஷன் அலவன்ஸ் கொடுத்துவரும் ஏற்பாடு பயிற்சியடைந்த உபாத்யாயர்களை எவ்வளவுதூரம் உபாத்யாயர்களாக வருவதற்குத் தூண்டுகிறது? இதற்கு பதிலாக பயிற்சியடைந்த உபாத்யாயர்களின் சம்பளத்தை உயர்த்துவது நல்லதா?

(4) உபாத்யாயர்களுக்கு காபிடேஷன் க்ராண்டுகளும் அலவன்ஸூம் கொடுக்கும் ஏற்பாடு அப்படியே இருக்கலாமென்றால், அவைகளை வகுப்புகள் வாரியாகக் கொடுத்து வரலாமா? அப்படியானால் எவ்விதம் பங்கிட்டுக்கொடுப்பது?

(5) எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து ஸெகண்டரி ஸ்கூலுக்குப் பிள்ளைகள் போவதைப்பற்றிய 99-வது மதராஸ் வித்யாவிதியை மாற்ற வேண்டுமா? அல்லது அதை எடுத்து விடவேண்டுமோ?

(6) தற்போது ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு க்ராண்டு கொடுத்து வருவதற்குள்ள ஏற்பாட்டைத் திருத்த வேண்டுமோ? திருத்தவேண்டுமானால், எவ்விதத்தில் என்ன நோக்கத்தை உத்தேசித்து?

(7) கல்வியில் முன்னேற்றமடையாத வகுப்பார்களின் ஜாபிதாவைப்பற்றியும் பப்ளிக் மானேஜ்மெண்டின்கீழ் நடத்தப்பட்டு வரும் எலிமெண்டரி ஸ்கூல்களிலும் செகெண்டரி ஸ்கூல்களிலும் வந்து சேரும் இந்த வகுப்பு பிள்ளைகளின் சம்பளத் தொகையை குறைப்பதைப்பற்றியும், சம்பளம் இல்லாமல் சேர்த்துக் கொள்ளும்விஷயமாக ஏற்பட்டிருக்கும் விதிகளைப் பற்றியும், அவ்வித மாணாக்கர்களின் விஷயமாய் கொடுக்கப்பட வேண்டிய காபிடேஷன் அலவன்ஸ், அல்லது உதவிப்பணம் இவைகள் ஸம்பந்தமான விதிகளைப் பற்றியும் கவனித்தல்.

### School Hygiene.

பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம்.—ஸமீபத்தில் ஐக்யமாகாணங்களில் நடந்த வித்யாகான்பரென்ஸில் டாக்டர் டி ஆர் ரஞ்ஜித்ஸிங் என்பவர் பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம் என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசினார். அவர் சொன்னதின் ஸாராம்சம் பின்வருமாறு. பள்ளிக்கூடங்களில் வஸிக்காமல், வீடுகளில் வஸித்துக்கொண்டு பள்ளிக்கூடங்களுக்கு வந்து வாசிக்கும் மாணாக்கர்களுடைய தேகஸ்திதியை வைத்யர்களைக் கொண்டு க்ரமமாக பரீக்ஷை செய்யவேண்டும். இவ்விதம் செய்யாவிட்டால், கண், காது, முதலியவை ஸம்பந்தமான வ்யாதிகள் வ்ருத்தியடைந்து மாணாக்கர்களுக்கு ரொம்ப கெடுதியை உண்டாக்கும் (2) மாணாக்கர்களுக்கு ஆகாரம், தேகாப்யாஸம் முதலியவைகளைப் பற்றிய ஸுகாதார விதிகளையும், வ்யாதிவராமல் தடுக்க எடுத்துக்கொள்ள வேண்டிய உபாயங்களையும் கற்பிக்க வேண்டும் (3) பள்ளிக்கூடங்களில் மாணாக்கர்கள் வஸிக்கும் அறைகள், க்ளாஸுகள், பள்ளிக்கூடம், காலேஜுகளைச் சேர்ந்த ஹோட்டல்களின் சமையலறைகள், சாக்கடைகள் முதலியவைகளை க்ரமமாய் சோதித்து ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமோ என்பதை கவனிக்கவேண்டும். (4) ஹோட்டல்களில் உபயோகிக்கும் ஆகார ஸாமான்கள் ஸரியானவையா என்பதைப் பார்க்கவேண்டும். (5) பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படும் தேகப்பயிற்சி ஏற்பாடு த்ருப்திகரமானதா என்பதை வைத்யர்களைக்கொண்டு நிர்ணயிக்கவேண்டும்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Hindu Feasts and Festivities.

இந்து புண்ய கதைகள்.—இது சென்னை ஆர்க்கேயலாஜிகல் டிபார்ட்மெண்ட் மானேஜர் மிஸ்டர் பி. வி. ஜகதீசய்யா இயற்றியது. இதில் விநாயக சதுர்த்தி முதலிய வ்ரதங்கள, ஏகாதசி முதலிய புண்ய தினங்கள ஆகிய இவைகளின் மகாத்மியம், வரலாறு முதலியவைகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் இதில் கலியின் தர்மங்களைப்பற்றியும் ஸ்த்ரீ புருஷர்களின் ஒழுக்கத்தைப் பற்றியும் ஹிந்துக்கள் அறிய வேண்டிய அநேக விஷயங்களைப் பற்றியும் விரிவான வ்யாஸங்கள் இருக்கின்றன. நமது மதாசாரங்களைப்பற்றி அறிய விரும்பும் ஒவ்வொரு ஹிந்துவும் இந்தப் புஸ்தகத்தை வாங்கி வாசிக்க வேண்டியது அவச்யமாகும். இதன் விலை அணா 8. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டி செட்டித் தெருவு மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Tamil and Higher Education.

தமிழ் மொழியும் உயர்தரக் கல்வியும்.—இப்பெயர் கொண்ட ஒரு துண்டுப் பத்ரிகையை அறப்புக்கோட்டை ரேஞ்சு பாடசாலை ஸப அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் வி. முத்துஸாமி அய்யர் நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். அதில் அவர், காலேஜுகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ் பாஷை புறக்கணிக்கப்படுகிறதென்றும், மாணவர்களுக்குத் தாய்ப்பாஷையில் விஷயங்களைக் கற்பிப்பதால் அவர்கள் விஷயங்களை நன்றாய் க்ரஹிப்பார்களாதலால், இங்க்லீஷ் பாஷைப்பாடம், (சிலகாலம் வரை) சாஸ்த்ர பாடங்கள் ஆகிய இவைகளைத் தவிர மற்ற பாடங்களை தமிழிலேயே கற்பிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்.

இந்த ஏற்பாட்டால் நன்மை உண்டாகுமென்றும், இதை ஆக்ஷேபிப்பதற்கு தக்க ஆதாரங்களில்லையென்றும் பல ந்யாயங்களால் அவர் விளக்கிக் காட்டுகிறார்.

### Therayar Karisilai etc.,

தேரையர் கரிசிலை-300 ; கல் நண்டு[சூத்திரம்-12 ; யூகிமுனி கரிசிலை-36.—இந்த மூன்று நூல்களும் அடங்கிய ஒரு புஸ்தகம் சென்னை கோமளீச்வரன் பேட்டை அம்பா விலாஸ புஸ்தக சாலையாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த நூல்கள் சித்தர்கள் எழுதியவை யாதலால், இவை நம் நாட்டு வைத்யர்களுக்கு ரொம்பவும் ப்ரயோஜன முள்ளவையாயிருக்கும். இவைகளில் பஸ்மங்கள, த்ராவகங்கள், தைலங்கள், மாத்திரைகள் முதலிய பல மருந்துகள் செய்வதற்கு முறைகள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த நூலின் விலை அணா 12.

### The Life of Abraham Lincoln.

ஏப்ரஹாம் லிங்கன் சரித்திரம்.—இது கும்பகோணம் டௌன் ஹைஸ்கூலில் உபாத்தியாயராயிருந்து காலஞ்சென்ற கே. வெங்கடராமய்யர் இயற்றியது.

ஏப்ரஹாம் லிங்கன் என்பவர் அமெரிக்க ஐக்யநாடுகளின் குடியரசுக்கு 16-வது ப்ரெஸிடெண்டாவார். அவர் ஸாமன்யபதவியிலிருந்து படிப்படியாக உயர்ந்து கடைசியில் ப்ரெஸிடெண்ட்பதவியை அடைந்தார். அவர் அடிமை வ்யாபாரத்தையும், இன்னும் தீமைக்கிடமான கொள்கைகளையும் வெறுத்தவராதலால், அமெரிக்கா ஐக்கிய நாடுகளுள் அடிமை வ்யாபாரத்துக்குச் சார்பான சில நாடுகள் இவர்மேல் வெறுப்புக்காட்டின. இதனால் அங்கே உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டு சில வர்ஷம் நடந்தது. அந்த காலத்தில் மிஸ்டர் லிங்கன் வெகு ஸாமார்த்யமாய் அரசாட்சியை நடத்தினதோடு யுத்தத்திலும் ஜயமடைந்தார். இந்தப்புஸ்தகத்தில் அவருடைய குணாதிசயங்களைப்பற்றியும், அவர்செய்த வேலைகளைப் பற்றியும் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 12 வேண்டுவோர் கும்பகோணம் ஹிந்து எடுகேஷனல் ட்ரேடிங் கம்பெனிக்கு எழுதப்பெற்றுக்கொள்ளலாம்.

### Naladiyar

நாலடியார்.—இது மாணவர்கள் படிக்கத்தகாத இடக்கரான செய்யுள்கள நீங்க மற்ற செய்யுள்களும், அவற்றிற்கு அரும்பதவுரையும் கொண்டது. வேலூரிலுள்ள வூர்ஹீஸ்காலேஜ் பண்டிதராகிய மிஸ்டர். பி. கே. ஸ்ரீநிவாஸாச்சார்யார் பதிப்பித்தது. உரை தெளிவாக இருக்கிறது. மாணவர்கள் வாசிக்க ஏற்றது. இதன்விலை, அணா 8. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3,4, கொண்டி செட்டிததெருவு, மதராஸ், என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

# SCIENCE AND INVENTION.

# சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

## Death by Lightning.

இடியும் மின்னலும் தாக்கிச் சாவது.—இடியும் மின்னலும் தாக்கிச சாகிறவர்களுக்கு இடி தாக்கினவுடனே ப்ரஜ்ஞை தபபிபபோகிறதென்றும், அவர்களுக்கு இடி தாக்கினதால் யாதொரு கஷ்டமும் ஏற்படுகிறதில்லையென்றும் ஒரு இங்க்லிஷ் வித்வான் சொல்லுகிறார். ஏனென்றால் இடி தாக்கினவுடன் உணர்ச்சியானது இல்லாமல்போய்விடுகிறது. உணர்சசிக்கு இருப்பிடம் மூளையாகும். சப்த, ஸ்பர்சம் முதலிய உணர்ச்சிகளை தேகத்திலுள்ள நரம்புகள் க்ரஹித்து மூளைக்குக் கொண்டுபோனால்தான், அந்த உணர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற அறிவு மனிதனுக்கு ஏற்படுகிறது இப்படி நரம்புகள் வெளியிலிருந்து விஷயங்களை க்ரஹித்து அவ்விஷயங்களின் உணர்ச்சியை மூளைக்குக் கொண்டுபோக கொஞ்சநேரம் செல்லும். நரம்புகள் விஷயங்களின் உணர்ச்சியை மூளைக்குக் கொண்டுபோக ஏற்படும் ஸாவகாசத்தைப்பற்றிஒருவர் ஆராய்சசி செய்ததில் அவைகள் ஒரு செக்கண்டுக்கு 100-அடி வீதம் வேகத்துடன் விஷயங்களை மூளைக்குக் கொண்டுபோகின்றனவென்று தெரியவந்திருக்கிறது. விஷயங்களை க்ரஹிப்பதற்குமுன் மூளையானது ஒருவித ஒழுங்குக்கு வரவேண்டியிருக்கிறது. இதற்கு ஒரு செக்கண்டில் பத்தில் ஒரு பாகம் வேண்டியிருககிறதாம். மின்னலும் இடியும் உண்டாவதற்குக் காரணமாகிய மின்ஸாரமானது இன்னும் ரொம்பவேகமாகப போகக் கூடியதாம். மின்ஸார சக்தியானது பூமிக்கும சந்த்ரனுக்கும் எவ்வளவுதூரம் உண்டோ அவ்வளவு தூரத்தையும் ஒரு செக்கண்டில் கடந்துபோக முடியும். மின்னல் தாக்கிய ஒருவனுடைய தேகத்தில் மின்ஸாரமானது அதிவேகமாய்ப் பாயுமாதலால், அதற்குள் அவன் ப்ரஜ்ஞை தப்பிப்போய், வலி ஏற்படுவதும், ஏற்படாததும் அவனுககுத் தெரியாமல் அவன் இறந்துவிடுவானும்.

## Venus.

சுக்ரன்.—செவ்வாய் என்னும் க்ரகத்தில் ஜனங்கள் இருப்பதாகவும், அவர்கள் அந்த க்ரகத்திலுள்ள ஜலக் குறைவுக்காக பற்பல கால்வாய்கள் வெட்டியிருப்பதாகவும சில வானசாஸ்த்ரிகள் வாதித்துவருகிறார்கள். தற்போது ஒரு இங்கலீஷ் இஞ்ஜினியர் சுக்ரன் என்னும் க்ரகத்தைப்பற்றிப பரிசீலனைசெய்துபார்த்து, இந்த க்ரகத்திலும் ஜனங்கள் இருக்கக்கூடுமென்று சொல்லுகிறார். சுக்ரனானது எப்போதும் ஒரு பாதி உருண்டை பாகத்தை ஸூர்யன் பக்கமாகத் திருப்பிக்கொண்டிருக்கிறதாம். ஆகையால் மற்ற பக்கமானது ஸதாகாலமும் ஸூர்ய வெளிச்சமில்லாமல் -இருட்டாயிருக்கவேண்டும். இந்த க்ரஹத்தில் ஜலம் உண்டென்றால் ஸூர்யன் படாத இந்தப் பாகத்தில் ஜலமெல்லாம், எபபோதும் பனிக்கட்டியாக உறைந்துபோயிருக்கும். மற்ற பாகமானது எப்போதும், ஸூர்யன் ப்ரகாசிக்கக்கூடியதாயிருப்பதால் அந்த பாகம் ரொம்ப உஷ்ணமாயிருக்கும். இந்த க்ரஹத்தில் ஜனங்கள் வஸிக்கக்கூடுமானால் அவர்கள் பனிக்கட்டியுள்ள இருட்டான பரதேசத்தை அடுத்தாற்போலுள்ள வெளிச்சமுள்ள பாதேசத்தின் ஒரு பாகத்தில்தான வஸிக்கக்கூடும. அவர்கள் தங்களுக்குவேண்டிய ஜலத்துக்கு இருட்டான ப்ரதேசத்திலுள்ள பனிக்கட்டியை உருக்கி அந்த ஜலத்தை குழாய்கள் மூலமாகக கொண்டுவந்து உபயோகிக்க வேண்டுமாம். திறந்த கால்வாய்களில் வெகுதூரம் கொண்டுபோனால் ஜலம் சீக்ரம் ஆவியாகப்போய்க் குறைந்துவிடும்.

## Dogs and Diseases.

நாய்களும் வ்யாதிகளும். — அமெரிக்காவிலுள்ள ஒரு நிபுணர் நாய்களால் அநேக வ்யாதிகள் மனிதர்களுக்குள் பரவுகின்றன வென்று சொல்லுகிறார். ஏனென்றால் நாய்களின் ஸுகாதார நிலைமையானது தற்கால ஜன ஸுகாதார நிலைமைக்கு ஏற்றவாறு இல்லை. ஆகையால் வ்யாதிகள் பரவாமலிருக்கவும், அதனால் மனிதர்கள் இறந்துபோகாம லிருக்கவும் அதிகபபடியாயுள்ள நாய்களைக் கொன்றுவிடுவது நல்லது என்று அவர் சொல்லுகிறார். மேலும், நாதனில்லாமல் திரியும் நாயகளையும், நாதனிருக்கும வீட்டில் ஸுகாதாரக்கொள்கைகளுக்கு ஏற்றவிதமாக பாதுகாக்கப்படாத நாயகளையும் கொன்றுவிட வேண்டுமாம். இப்படிக் கொன்றுவிட்டால் மனிதர்களின்சாவு விகிதம் குறைவுபடுவதோடு, தேசத்தின் மொத்தவரும்படியும் அதிகமாகுமாம். நாயகளை வைத்திருபபவர்கள் நாய்களோடு அதிகமாய்க் கொஞ்சி விளையாடக்கூடாது. குழந்தைகளின் முகத்தையும் தேகத்தையும் நாய்நக்கும்படி விடக்கூடாது. முக்யமாய நாய்களை குழந்தைகளின் மிட்டாய்களை நககும்படி விடக்கூடாது.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Malaria

மலேரியா.—விவஸாயத்துக்கும் மலேரியாவுக்கும் நெருங்கின ஸம்பந்த மிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு விவஸாயம் அபிவ்ருத்தி யடைகிறதோ அவ்வளவுக்கு மலேரியா குறைவென்று டாக்டர் பெண்ட்லி என்பவர் கூறுகிறார். பங்காளத்தில் விவஸாயம் சீர் கேடடைந்த போதெல்லாம் அங்கே மலேரியா என்னும் விஷம ஜ்வரம் ரொம்ப அதிகமாயிருந்ததென்று அவர் சொல்லுகிறார். வங்காள கவர்ன்மெண்டின் ரிபோர்ட்டுகளால் மலேரியா உள்ள ப்ரதேசங்களில விவஸாயம் க்ஷீணித்திருக்கிறதென்று தெரிய வருகிறதாம். வங்காளத்தில் எந்த விடத்தில் ஜலம் யதேஷ்டமாயிருக்கிறதோ அங்கே வ்யவஸாயமும் நல்ல ஸ்திதியிலிருப்பதால், அங்கே மலேரியா குறைவாயிருக்கிறதாம். எங்கே ஜலம் குறைந்து போய் விவஸாயத்துக்குத் தடை யேற்படுகிறதோ அங்கே மலேரியா அதிகமாயிருக்கிறதாம்.

மலேரியா ஜ்வரம் கண்டால இன்ன செய்ய வேண்டு மென்பதைப்பற்றி ஒரு டாக்டர் பின வருமாறு சொல்லுகிறார். மலேரியா ஜ்வரம் கண்டவுடனேயே மருந்து சாப்பிட வேண்டியது அவச்யமாகும். மருந்து சாப்பிடு முன் பேதிக்கு மருந்து சாப்பிட்டுவிட்டு, இரவில் படுக்கப் போகும்போது பத்து க்ரெய்ன க்வினைன் உட்கொள்ள வேண்டும். இப்படியாக ஒரு வாரம வரையில தினந்தோறும் இரவில க்வினைன மருந்து சாபபிட வேண்டும. அதற்குபபிறகு ஒரு வாரம அல்லது பதது நாள வரையில ஒன்று விட்டொரு நாள் மருநது சாபபிடவேணடும. வ்யாதிதோன்றினவுடன் இவ்விதம 2-வாரம மருந்து சாப்பிட்டுவிட்டால வ்யாதி ஸ்வஸ்தமாகிவிடும்.

மலேரியாவுளள பரதேசத்திலிருநது வேறு இடஙகளுககுபபோயவிட்டால அந்த 2 வாரததிற்குமேல் மருந்து சாபபிடவேண்டியதிலலை. மலேரியாவந்து காலேந்து தடவைமுறைககாய்ச்சலடித்தும மருநது சாப்பிடாமலிருந்துவிட்டால், அதாவது, மலேரியா தோன்றிய பதது நாள்கள் வரையில மருநதுசாபபிடாமலிருந்துவிட்டால அதை ஸவஸதம செய்வது கஷ்டம். இப்படிபபட்ட ஸந்தர்ப்பஙகளில அநேகவாரஙகள மருந்து சாப்பிட்டுக் கொண்டுவரவேண்டியிருக்கும் அல்லது மருந்தை ரத்தத்தில் த்ரவரூபமாய் செலுத்தவேண்டியிருக்கும். இதற்கு இஞ்ஜெக்ட்செய்தல் என்று பெயர்.

### Weak Sight.

பார்வைக் குறைவு.—இது உண்டாவதற்குஅநேக காரணங்கள் இருக்கின்றன.

பட்டினி கிடந்து களைப்பாய் இருக்கும் போது வாசித்தல்; நுட்பமாகப் பார்த்தல்; ப்ரகாசமான வெளிச்சத்தைப் பார்த்தல்; அந்த வெளிச்சத்தில் எழுதுதல்; தைத்தல். ஸந்தியாகாலத்தில் படித்தல்; மங்கலான விளக்கை படிக்க உபயோகித்தல்; வண்டியில் போகும போது வாசித்தல்; ப்ரகாசமான விளக்காயிருந்தாலும் காற்றினால் அசையும் ஸமயத்தில் வாசித்தல்; வெகு நேரம வாசித்தல்; அனுவச்யமாக தூக்கம் விழித்தல்; ரக்தமின்மையினால் தேஹம் மெலிந்திருந்த காலததில் படித்தல், கண் புண்ணடைந்து கஷ்டப்படும் காலத்தில் வெகு யோசனை செய்தல்; அடிக்கடி துக்கத்தைத தருவித்துக கொளளுதல; வேலை வேலையென்று சொல்லி வேளா வேளையில் சாபபிடாமலிருத்தல்; தேஹத்திறகுக் கடினமான வேலை கொடுத்தல்; தீய வழிகளில் புததியைச் செலுத்தி கெட்டுப போதல்; ஆகிய இவைகளே முகயமானவைகள். தாய் தகபபனமார்கள் தாங்கள மேல் சொன்னவைகளை கவனித்து ஜாகரதையாயிருபபதோடு தங்கள் குழந்தைகளையும் கண் விஷயத்தில் ஸரிவர கவனித்துககொள்ள வேண்டும்.—பெண கல்வி.

### Plants that Drive away Mosquitoes.

கொசுக்களைப் போக்கும் சில செடிகள்.—ஆமணக்குச்செடி யிருககுமிடத்தில் கொசுக்கள் அணுகுவதிலலையென்று மிஸ்டர் ஆல்பெர்ட் என்பவர் கூறுகிறார். ஓர் அறையில் ஒரு ஆமணக்கன் தண்டு அல்லது தழை முதலியவை இருந்தாலும் கொசுககளை அவ்விடம வரவிடாமற் செய்யபபோதுமானது. அநேகம் பூச்சிகளும் இசசெடியினிடம் அணுகுவதில்லையாம். லாரிமூர் என்பவரின் கொள்கைப்படி திருநீற்றுபபத்ரியென்னும் மூலிகை யிருக்குமிடத்தில்கூட கொசு முதலிய ஜநதுககள சேருவதில்லையென்று தெரிய வருகிறது.—வைததியகலாநிதி.

# LAW.

# சட்டம்.

## Pupil Versus Master.

மாணுக்கனும் உபாத்யாயரும்.—உபாத்யாயர்கள் மாணுக்கர்களை கெட்ட நடத்தைக்காகவாவது, பள்ளிக்கூட ரூல்களுக்கு விரோதமாக நடந்ததற்காகவாவது எவ்வளவு தூரம் கண்டிக்கலாமென்பதை பற்றி நிர்ணயிக்கக் கூடிய ஒரு கேஸ் இங்க்லண்டில் அப்பீல் விசாரணையில் இருந்துவருகிறது. அந்தக்கேஸின் விவரம் பின்வருமாறு.

ஒரு பையன் ஒரு பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டு, அங்கேயே தங்கியிருந்தான். அவனுடைய ஸகோதரன் ஒருவன் சில நாட்களுக்கெல்லாம ராணுவத்தில் சேர எண்ணியிருந்தான். பையன் தன்னுடைய ஸகோதரனைப் பார்க்கவேண்டுமென்று, அவனுடைய தகப்பனர் அவனை (பையனை) ஒருநாள் லீவு வாங்கிக்கொண்டுவரச் சொன்னர். அப்படியே பையன் தனது உபாத்யாயரிடம் ஒரு பகல் வேளைக்கு லீவு வாங்கிக்கொண்டு அன்றிரவே பள்ளிக்கூடத்துக்கு வருவதாகச் சொல்லி வீட்டுக்குப் போனன். ஆனல் அதற்குள் ஸகோதரன்வேறொரு ஊருக்குப போய்விட்டான். அதன்மேல் பையன் அந்த ஊருக்குப் போய் ஸகோதரனைப் பார்த்துவிட்டு மறுநாள் ஸாயங்திரம் பள்ளிக்கூடத்துக்குப்போய்ச் சேர்ந்தான். உபாத்யாயர் ரொம்ப கண்டிப்பானவர் என்று தோன்றுகிறது. பையன் பள்ளிக்கூட ஒழுங்குகளை மீறி நடந்ததற்காகவும், அவன் தன் வாக்குப்படி நடக்காததற்காகவும், அவனை உபாத்யாயர் பிரம்பாலடித்தது தண்டித்தார் பையனும் அவனுடைய தகப்பனரும் இவ்விதம் தண்டித்தது சரியல்ல வென்றெண்ணி, கோர்ட்டில் ப்ராது கொடுத்தார்கள். உபாத்யாயர் பையனைக் கெட்ட எண்ணத்துடன் அடிக்கவில்லை யென்றும், தண்டனை ரொமப ஜாஸ்தியில்லையென்றும் எல்லாராலும் ஒபபுக்கொள்ளப்பட்டது. ஆனல் ஜூரிகள் உபாத்யாயா செய்தது சரியல்ல வென்று அபிப்ராயப்படவே, ஜட்ஜும் உபாத்யாயருக்கு விரோதமாகத் தீர்பபுகொடுத்தார். அதன்மேல் உபாத்யாயர் அப்பீல் கோர்ட்டுக்கு அப்பீல செய்திருக்கிறார்.

## Debtor Transferring Property.

கடன்பட்டவர் ஸொத்தைப் பராதீனம் செய்வது.—இன்ஸால்வென்ஸி விஷயமாய் நடவடிக்கைகள் ஏற்பட்டாலொழிய, கடன்பட்ட ஒருவர், கடன் கொடுத்தவர்களில் ஒருவருக்கு பூராத்தொகையும் கொடுத்து மற்றவர்களுக்கு பணம் செலுத்தாமலிருக்கலாம். அப்படி ஒரு கடன்காரருக்கு பணம்கொடுபபதால், கடன பட்டவருடைய மற்ற ஸொத்துக்கள், மற்ற கடன்களை அடைபபதற்குப போதுமானதாயில்லாவிட்டாலுங்கூட கடன்பட்டவர் ஒரு கடன்காரருக்குப் பணம் செலுத்தக் கூடாதென்று சொல்வதற்கில்லை.

இன்ஸால்வென்ஸி நடவடிக்கையில்லாத ஒரு கேஸில் வாஸ்தவமான கடனை யடைப்பதற்காக, கடன்பட்டவருக்கு யாதொரு லாபஸௌகர்யமும் இல்லாதபடி ஒரு ஸொத்தை தக்க ப்ரதி ப்ரயோஜனத்துக்கும் கடன் கொடுத்தவர்களில் ஒருவருக்கும் பராதீனம் செய்திருந்தால், அந்தப் பராதீனத்தால் கடன் கொடுத்த இன்னொருவருக்கு நஷ்டமேற்படுமென்பதனுலேயே, அந்தப் பராதீனமானது ட்ரான்ஸ்பர் அப ப்ராபர்ட்டி ஆக்ட் 53-வது ஸெக்ஷனுல் செல்லாதென்பதற்கில்லை.

கடன்பட்ட ஒருவர் தமக்குக் கடன் கொடுத்தவர்களும், ஒருவர்க் கொருவர் நெருங்கின பந்துக்களுமாகிய இரண்டு பேருக்கு ஸொத்துக்களில் சிலவற்றைப் ஒரே தினத்தில் பராதீனம் செய்ததாகக் குறிப்பிட்டுள்ள இரண்டு பத்ரங்களில் ஒன்று பொய்ப் பத்ரமாகவும் மோசக்கருத்துடன் செய்யப்பட்டதாகவும் இருந்தது. இதனுல் அது ட்ரான்ஸ்பர் அப ப்ராபர்ட்டி ஆக்ட் 53-வது ஸெக்ஷன்படி செலலாமல் போய்விட்டது.

இதனுலேயே தக்க ப்ரதிப்ரயோஜனத்தின் மேல் செய்யபபட்ட மற்ற பராதீனத்தின் பத்ரமும் செல்லாதென்று சொல்லுவதறகில்லை. இபபடிபபட்ட ஸந்தர்ப்பங்களில ஒவ்வொரு பத்ரமும் செல்லும் செல்லாதெனபது அதனதனுடைய தன்மையைப் பொருத்தது. 3 லாவீக்லி 207.

## Partial Alienation by a Widow.

விதவை ஸொத்தில் ஒரு பாகத்தைபராதீனம் செய்வது.—ஒரு ஹிந்து விதவை தமது அடுத்த அனந்தரவார்ஸின் ஸம்மதத்தின்மேல தமது ஸொத்தின் ஒரு பாகத்தைப பராதீனஞ்செய்தால், அந்தப் பராதீனமானது செல்லாது. அது விதவை இறந்தபின் ஸொத்துக்கு பாத்யக்காரராக ஏற்படும் அனந்தரவார்ஸைக் கட்டுபபடுத்தாது.

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Titles for South Indian Pundits.

**தென்னாட்டு வித்வான்களுக்குப் பட்டங்கள்**— சென்ற டிஸம்பர் மாதத்தில காசியில் கூடிய பாரத தர்ம மஹா மண்டலத்தில் 6-வது மகாதிவேசன காலத்தில், கமது பாரதிய வித்வான்களும், தர்ம காரிய ப்ரவர்த்தாகளும் லோகோபகாரிகளுமான, அடியிற் கண்ட சில கனவான்களுககு, யோக்யதா பத்ரமும், பட்டங்களும் அளிககப்பட்டன.

(1) சென்னபபட்டணம் ப்ரொபெஸர் எம். ரங்காசசாரியார், எம-ஏ-க்கு "மகோபதேசகர்," "வித்யாரத்நம்" என்றும்,

(2) கும்பகோணம் ப்ரொபெஸா, கே. ஸுந்தர ராமய்யர், எம். ஏ-க்கு "தர்மபூஷண" என்றும,

(3) திருவிசை நல்லூா, மஹா மஹோபாத்யாய ப்ரம்ஹஸ்ரீ ராமஸுப்பா சாஸ்தரிகளுக்கு "சாஸ்த்ர சிரோமணி" என்றும்,

(4) கும்பகோணம, சதுஸ் சாஸ்த்ர கல்பதரு ப்ரம்ஹஸ்ரீ சேஷாச்சாரியாருக்கு "வித்யாதான ஸதாசார" மான பத்ரமும்,

(5) கும்பகோணம் அத்வைத ஸபை பண்டிதர் ப்ரம்ஹ ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரியளுக்கு "மஹோபதேசகர்", "வேதாந்த விபூஷண" என்றும்.

(6) திருச்சிறுபபள்ளி ஸெண்ட் ஜோஸப் காலேஜ் பண்டிதர் டி வி. ஸ்ரீனிவாசாச்சார்யருக்கு—"ஸாஹித்ய ரத்ந" என்றும்,

(7) திருச்சிறுப்பள்ளி வக்கீல் ஏ. வி. கோபாலாச்சாரியார் (எம். ஏ. பி. எல்.) க்கு—"மீமாம்ஸ ரத்ந" என்றும்,

(8) ஸ்ரீரங்கம், தேசபூஷண ஆா. கே. ப்ரஸந்ந வெங்கடேச ராயருக்கு—"வித்யௌஷத தான தர்ம சாலா பாதிஷ்டாதி" மான பத்ரமும்,

(9) திருச்சிறுப்பள்ளி, டி. வி. ஸாமிநாதய்யர் (பி. ஏ. எல். டி.) க்கு—"தர்மகார்ய ஸகாயதா பரோபகார ப்ரவ்ருத்தியாதி" மான பத்ரமும் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

### The Late Rao Bahadur C. Nagoji Row.

**காலஞ் சென்ற ராவ்பகதூர் ஸி. நாகோஜி ராவ்.**— ஸ்கூல் இன்ஸ்பெக்டராக இருந்து பென்ஷன வாங்கிக் கொண்டு விலகின ராவ் பகதூா ஸி. நாகோஜிராவ் பிப்ரவரி மாஸம் 13-ந்தேதியன்று இறந்துபோனதைக் கேட்டு விஸனமடைகிறோம். அவர் 1852-ம் வர்ஷத்தில் ஜனனமானார். அவர் தமது 19-வது வர்ஷத்தில் பி. ஏ. பரீக்ஷையில் தேறி பிறகு வித்யா இலாகாவைச் சேர்ந்து நல்ல க்யாதியுடன் வேலைபார்த்துவந்து கடைசியில் இன்ஸ்பெகடர் அப் ஸ்கூலஸாக ஆனார். அவர் 1906-ம் வர்ஷத்தில் கும்பகோணம் காலேஜ் ப்ரின்ஸிபலாக ஆக்ட் செய்ய நியமிக்கப்பட்டார். அந்த வர்ஷம் அவர் சென்னை யூனிவர்ஸிட்டியின் கான்வகேஷன் அட்ரஸ் ப்ரஸங்கம் செய்தார். 1907-ம் வர்ஷத்தில் அவர் பென்ஷன் வாங்கிக்கொண்டார். அவர் சென்னை யூனிவர்ஸிட்டி ஸெனேட்டில் ஒரு பெல்லோ ஆதாவது மெம்பராக இருநதுவநதார். மிஸ்டர் நாகோஜி ராவ் பள்ளிக்கூடங்களின் கீழ்வகுபபு மாணவர்களுக்கு ஸங்கீதம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அபிப்ராயப்பட்டு அது விஷயமாய் ஊக்கமெடுத்து வந்ததோடு, சில ஸங்கீத புஸ்தகங்களும் பாசுரித்திருக்கிறார் வேலையிலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்ட பிறகு அவர் பொது ஜனவிஷயங்களில் அதிக ஊக்கமெடுத்து வந்தார்.

### The Maharaja of Jodhpur.

**ஜோட்பூர் மஹாராஜா.**—இந்த பிப்ரவரி மாஸம் 25உ வைஸ்ராய லார்ட் ஹார்டிஞ்ஜ், ஜோட்பூரின் அரசாகிய ஸ்ரீ ஸுமர்ஸிங்கை ஸிம்மாஸநததில் ஏற்றி அவருக்கு ராஜ்ய நிர்வாக அதிகாரத்தைக் கொடுத்தார். ஸ்ரீ ஸுமர்ஸிங 1911-ம் வர்ஷததில் பட்டத்துக்கு வந்தார். அபபோது மைனராயிருந்ததால் அவர் தகப்பனாரின் ஸகோதரரும் இடார் ஸமஸ்தானத்து அரசருமாகிய மேஜர் ஜெனரல் மஹாராஜா ஸர் பரதாபஸிங்கும், ஜோட்பூர் ராஜகுடும்பத்தைச் சேர்ந்த வேறு சில ப்ரமுகர்களும் சேர்ந்து ரீஜண்டாக இருந்து அந்த ஸமஸ்தானத்தை நிர்வகித்துவந்தார்கள்.

ஜோட்பூர் ஸமஸ்தானத்து மன்னர்கள் ரஜபுத்ர ஜாதியாரில் ராதோா வகுபபைசசோநதவர்கள் இவர்கள் ஸ்ரீ ராமருடைய வம்சத்தைச் சேர்ந்தவாகளாம். இந்த ஸமஸ்தானம 1818-ம வர்ஷத்தில இங்கலீஷ்காரர்களுடைய ஆதரவின் கீழ்ப்பட்ட ராஜ்யமாயிறறு. இந்த ஸமஸ்தானத்தின் ஜனத்தொகை 20-லக்ஷம் போகும

தற்போது ஸிம்மாஸனமேறிய மகாராஜா 1914-ம் வர்ஷத்தில் லெப்டினென்ட் பதவியை அடைந்தார். இந்த யுத்தத்தில் அவர் ஸா பாதாபஸிங்குடன் போர் முனைக்குப் போயிருந்தார்,

# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Bakthi.

பக்தி.—இயற்கையாகவே ஈச்வரனிடத்தில் பக்தி யேற்படாத அநேகர் ஈச்வரனிடத்தில் பக்தியாயிருக்கும்பொருட்டு நமது முன்னோர்கள், பல ஸாதனங்களை அமைத்திருக்கிறார்கள். இதுவிஷயமாய் "ஆர்ய தர்மம்" சொல்லுவதாவது: இவர்களை உத்தேசித்தே ஆங்காங்கு அநேக தேவாலயங்களும், அவைகளில் சிவன் விஷ்ணு முதலிய தேவதைகளுடைய விக்ரஹ ப்ரதிஷ்டைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒவ்வொருநாளும் தர்சனம் பண்ணினால் க்ரமமாய் அப்யாஸ மேற்படும். அதற்காகவே சாஸ்த்ரங்களிலும் பலவிடங்களில் ஈசவர தர்சனமும், பூஜனமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த மூர்த்திகளைக்கூட தாசனம்பண்ணாத மந்தாதிகாரிகளை யுத்தேசித்து ஆபரணாதிகளைப் போட்டாவது தர்சனம் செய்யும்படி செய்ய வேண்டுமென்றே அவைகளும போடப்படுகின்றன. உத்தமாதிகாரிகளுக்கோ வென்றால் இவையெல்லாம் வேண்டியதில்லை.

பக்தியை நமது சாஸ்த்ரங்களில் 9-விதமாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன ஸ்ரீவிஷ்ணு பரமாத்மாவினுடைய ச்ரவணம, கீர்த்தனம், ஸ்மரணம, பாத ஸேவநம், அர்ச்சனம, வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதநம் என்பவைகளே.

ச்ரவணமாவது பகவானுடைய சரிதம் குணம் முதலியவைகளைக் கேட்பது. கீர்த்தனமாவது, பெரியோர்கள் முகமாய்க் கேட்டதைத் தன் வாயால் சொல்லுவது ஸ்மரணமாவது கேட்ட பகவத் குணத்தை த்யானம் பண்ணிக்கொண்டிருத்தல். பாதஸேவன மென்பது ஆலயத்தை சுத்திசெய்வது முதலிய ஈசவர கைங்கர்யமாகும். பகவானுக்கு ப்ரியமான வேதமந்த்ரங்களாலும், அவருடைய நாமாவினாலும் அவரைப் பூஜித்தல அர்ச்சனமாகும. பகவானை ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்தல் வந்தனமாகும. தாஸ்யமென்பது பகவானுக்கு அடிமையாகி எப்பொழுதும் அவரால் ஏவப்பட்ட வேலைகளைச் செய்வது. ஸக்யமென்பது அர்ஜுனனைப்போல் பகவானிடத்தில் ஸக்யம கொள்வது. ஆத்ம நிவேதனம என்பது நாமென்கிற பேதபுத்தியை விலக்கி எல்லாம் பகவத் ஸ்வரூபமே யன்றி அதைக் காட்டிலும் வேறில்லை என்று எல்லாவற்றையும் பகவத் ஸ்வரூபத்தில் அர்ப்பணம் செய்வதாகும.

### The Bombay Social Service League.

பம்பாய் ஜன ஊழிய ஸங்கம்.—பம்பாயில் ஸோஷல ஸர்விஸ் லீக் என்று ஒரு ஜன ஊழிய ஸங்கம் இருக்கிறது. இது ரொம்ப நன்றாய் நடந்து வருகிறதென்று சொல்லப்படுகிறது. இது கல்வி விஷயமாய் ரொம்ப அக்கரை பாராட்டி வருகிறதாம். கல்வியைப் பரவச் செய்வதற்கு அந்த ஸபையார் சுற்றித்திரியும் புஸ்தகசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஸபைக்கு 6600 புஸ்தகங்களுக்கு மேலிருக்கின்றன. இவைகளில் சிலவற்றைத் தெரிந்தெடுத்து ஒரு பெட்டியில் போட்டு, ஒவ்வொரு ஊர் அல்லது ஊரின் பிரிவாக அனுப்புகிறார்கள். அந்தந்த விடங்களிலுள்ளவர்கள் அவைகளை வாசித்தபிறகு பெட்டியை இன்னொரு இடத்துக்கு அனுப்பிவிடுவார்கள். இப்படிப் பல பெட்டிகள் ஒவ்வொரு இடத்துக்கும் அனுப்பப்படுகின்றன.

இந்த ஸங்கத்தார் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கு புஸ்தகம் முதலியவைகளை வாசித்துக்காட்டுகிறார்கள். சென்ற வாஷத்தில் அவர்கள் இவ்விதம் 272-தடவை வாசித்துக் காட்டினார்களாம். 3300-படிப்பில்லா ஜனங்கள், இப்படி வாசிப்பதைக் கேட்டுப் பயனடைந்தார்களாம்.

இந்த ஸங்கத்தார் ஒரு ஆஸ்பத்ரி வைத்து நடத்தி ஏழைகளுக்கு இலவசமாக மருந்து கொடுத்துவருகிறார்கள். இந்த ஸங்கத்தின் வரும்படி சென்ற வர்ஷத்தில் 9500-ரூபாயாம்.

### Garlanding European Ladies.

ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுதல்.—சென்றமாஸம் பொப்பிலி மகாராஜா ஐரோப்பிய ஸ்த்ரீகளுக்கு மாலை போடவேண்டியதில்லை யென்று சொன்னதைப்பற்றி எழுதினோம். இதைப்பற்றி சென்னை 'டைம்ஸ்' பத்ரிகை எழுதுகையில், ஐரோப்பிய கனவான்களுக்கும மாலைபோட வேண்டியதில்லை யென்றும, ஸ்த்ரீகளுக்கு மாலைபோடுவதால அவர்களுடைய பட்டு உடுப்புகள் வீணாகிவிடுகின்றன வென்றும, புருஷர்களும மாலைபோட்டுக்கொண்டால் பார்ப்பதற்கு விநோதமாக இருக்கிறார்களென்றும், ஸ்த்ரீகளுக்கு ஒரு புஷ்பச்செண்டும், கனவான்களுக்கு சட்டை த்வாரத்தில் வைத்துக்கொள்ள ஒரு புஷ்பமும் கொடுத்தால் போதுமென்றும, உபசரிப்பு விசேஷத்தில் அநேக கனவான்களுக்கும ஸ்த்ரீகளுக்கும மாலைபோட வேண்டியிருக்குமாதலால், இதற்கு அதிக செலவு ஏற்படுமென்றும, இதை நிறுத்திவிடலாமென்றும அபிப்ராயப்படுகிறது.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Fainting.

**மயக்கம் போடுவது.**—மயக்கத்தில் ஞாபகமாக கவனிக்கவேண்டிய முக்ய விஷயம் கீழ் வருமாறு. மயக்கம் வருவதற்குமுன், நல்ல தேகஸ்திதியிலிருக்கும் வாலிபனாவது, நடுப்ராயமுள்ள மனிதனாவது கூட்டத்தில் நெருக்கினதினாலோ, பயத்தினாலோ அல்லது ரத்தம் கொட்டுதலைக்கண்டு மனக்குழப்பத்தாலோ மயக்கங்கொண்டு உணர்ச்சியில்லாமலிருப்பானானால், முகம் வெளுத்துவிடும்; உதடுகள் நீலம் பாய்ந்து கிடக்கும்; நாடி அடங்கி நலிக்கும்; இக்குறிகள் ஏற்படுமானால் மயக்கமாயிருக்கலாம் என்று நம்பலாம்.

மயக்கத்தின் ஆரம்பத்தில் காணக்கூடியன வர வர உடம்பதிகமாக வெளுத்தலும், பலமுறை கொட்டாவி விடுதலுமே. இக்குறிகளைச் சடுதியில் கண்டால், இக்குறிகளுக்கு உள்பட்டவரை கலவரத்தை யுண்டாக்கிய அவ்விடத்திலிருந்து உடனே பிரித்து நல்ல காற்று லாவுமிடத்தில் கொண்டுபோகவேண்டியது. ஒரு விசிறியை எடுத்து வெகு தீவிரமாக அவனுக்கெதிராக விசிறவும். அதே ஸமயத்தில் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கச்செய்து, முகத்தில் குளிர்ந்த ஜலத்தால் தடவவேண்டும். அவ்வாறு செய்வதால் மூர்ச்சையின் முழுவேகமும் பரவாமலிருக்கும்படி தடுக்கலாம். மூர்ச்சையடைந்தவனை காலைக்காட்டிலும் உடம்பும், உடம்பைக்காட்டிலும் தலையும் தாழ்ந்திருக்கும்படிப் படுக்கவைக்க முடியுமானால் அப்படிச் செய்யவும். அப்படிப் படுக்கவைக்க முடியாதானால், மூர்ச்சையடைந்தவன், உட்கார்ந்த நிலையிலிருந்தால், அவன் தலையை, முன்வந்து முழங்கால்வரையுங் குனிந்து தொங்கும்படிச் செய்யவும். இந்த நிலையில் வைத்தால் மூர்ச்சையடைந்த ஆள் எளிதில் தெளிவடைவான். இப்படிச் செய்வதால் மூர்ச்சையடைந்தவனுக்குக் கஷ்டங்கொடுப்பதை எவ்வளவு குறைக்கலாமோ, அவ்வளவு குறைக்கலாம். அசுத்தமான இடத்திலாவது, அழுக்குள்ள தரைமேலாவது அந்த ஆளைப் படுக்க வைப்பதையுந் தடுக்கலாம். முடியுமானால், மயக்கமடைந்தவனை தரைமேல் முதுகு படும்படி நிமிரப்படுக்கவைத்து, நல்ல காற்று அவ்விடத்தில் உலாவும்படிச் செய்யவும்; அல்லது விசிறியைக்கொண்டு விசிறவும்; பின், ஜில்லென்றிருக்கும் நல்ல நீரை பானஞ்செய்யச் செய்யவும். ஸ்மெல்லிங் ஸால்ட் என்னும் உப்பை முகரும்படிச் செய்யலாம். சிறிது கற்பூர நீரையாவது, ப்ராந்தியையாவது உள்ளுக்குக் கொடுக்கலாம்; ஸாதாரணமாக இவை அவச்யமில்லை.—விவேகபோதினி

### Cleaning Glass Vessels.

**கண்ணாடிப் பாத்ரங்களை சுத்தம் செய்தல்.**—எல்லாக கண்ணாடிப் பாத்ரங்களையும் சுத்தம் செய்யும்போது முதலில் ஸோப் கரைத்த ஜலத்தில் கழுவிப் பிறகு சுத்த ஜலத்தில் கழுவவேண்டும். பிறகு சுத்தமான துணியால் துடைத்துப் பளபளப்பாக்க வேண்டும். பால் வைத்திருந்த பாத்ரத்தை சுத்தம் செய்யுமுன் முதலில் அதை ஜலத்தில் சற்று ஊறப்போட வேண்டும்.

### Bamboo Furniture.

**மூங்கில் ஸாமான்.**—நாற்காலி முதலிய மூங்கில் ஸாமான்களை சுத்தம் செய்யவேண்டுமானால் வெதுவெதுப்பான ஜலத்தில் உப்பைக்கரைத்து, அதில் ப்ரஷை நனைத்தெடுத்து அந்த ஸாமான்களை சுத்தம் செய்யவும். ஜலத்தில் உப்புகலந்திருப்பதால் மூங்கில் நிறங்கெடாது. மஞ்சள் நிறமாகாது. பிறகு ஒரு ம்ருதுவான துணியால் ஈரத்தைத்துடைத்து ஸாமானைச் சற்றுக் காற்றாட விடவும்.

### Egg shells.

**முட்டை யோடுகள்.**—வீஸாக்களை சுத்தம் செய்வதற்கு முட்டை யோடுகள் ரொம்ப ச்லாக்யமானவை. ஓடுகளை உடைத்து தூளாக்கி, வீஸாவில் போட்டு, அதில் சுத்தஜலம் விட்டுக் கலக்கி சற்று நேரம் வைத்திருந்து, பிறகு மறுபடியும் கலக்கி ஓட்டையும் ஜலத்தையும் கொட்டி விட்டு, சுத்த ஜலத்தால் வீஸாவை சுத்தம் செய்யவும்.

### Marking Clothes.

**துணிகளுக்கு அடையாளம் போடுதல்.**—துணிகளுக்கு இங்கியால் அடையாளம் போடுமுன் ஸாதாரண பென்ஸிலால் எழுதிப் பிறகு அதன் மேல் இங்கியால் எழுதவும். இங்கியானது துணியில் பரவாது. ஒவ்வொரு தடவையும் எழுதும்போது புது நிப்பை உபயோகப்படுத்த வேண்டும்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Plant Diseases.

**பயிர்களில் தோன்றும் நோய்கள்.**—சென்ற டிஸம்பர்-ஜனவரிமாஸங்களில் சென்னையில் நடந்த பொருட்காட்சியின் விவஸாயப் பகுதியில் பயிர்களுக்கு உண்டாகும் நோய்கள், அவைகளுக்கு பரிகாரங்கள் ஆகிய இவைகள் ஸம்பந்தமாக அநேக பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. இங்கே சில நோய்களுக்குக் குறிப்பிட்டிருந்த பரிஹாரங்களை எழுதுகிறோம்.

(1) சோளத்தில் தோன்றும் கரிப்பூட்டைநோய்: இதுசோளப்பயிர் கதிராகி பால் பிடிக்கும்போது உண்டாகும். இதுவராமல் தடுக்க ஒரு வீஸா ஜலத்தில் ஒரு தோலா மயில்துத்தத்தைக் கரைத்து, அந்த ஜலத்தில் விதைச்சோளத்தை 15-நிமிஷம் முதல் அரைமணி நேரம்வரையில் ஊறவைத்து எடுத்துக் காயவைத்து விதைக்கவேண்டும்.

(2) கரும்பில் செம்புள்ளி கரும்புள்ளி நோய்வராமல் தடுக்க, இவ்விதநோய் சற்றுக்கூட இல்லாத கரும்புகளிலிருந்து விதை எடுத்து நடவேண்டும்.

(3) கம்பில் உண்டாகும் வெறி நோவுக்கும், பாக்கு மரத்தில் உண்டாகும் கொட்டைப்பாக்கு அழுகல் நோய்க்கும், மிளகாய் அழுகல் நோய்க்கும் போர்டோ மிக்ச்சர் எனனும் மருந்தை பின்வருமாறு செய்து உபயோகிக்கவேண்டும்.

ஒரு பாத்திரத்தில் பக்காப் படியால் 12-படிசுத்த ஜலம் ஊற்றி அதில் 2-ராத்தல் மயில் துத்தத்தைச் சேர்த்துக் கரைக்கவும். 2-ராத்தல் சுண்ணாம்புக் கல்லில் சிறிது ஜலம் ஊற்றித்தாளித்து, அதில் 12-பட்டணம்படிஜலம் ஊற்றிக் கரைக்கவும். மயில் துத்த ஜலத்தையும் சுண்ணாம்பு ஜலத்தையும் ஒன்றாய்க் கலந்து நன்றாய்க் கலக்கி விடவும். இந்த ஜலத்தை ஸ்பரேயா எனனும் யந்த்ரத்தாலாவது, பீர்ச்சாங்குழலாலாவது மரங்கள், பயிர்களின் மேல் தெளிக்கவும். மழை காலத்தில் இந்த மருந்தை உபயோகித்தால், மழையில் இது கரைந்து போகுமாகையால், 32-தோலா ரோசனத்தையும் 16-தோலா ஸோடாவையும் $1\frac{1}{2}$-பட்டணம் படி ஜலத்தில் போட்டுக் கொதிக்க வைத்து மேற்சொன்ன போர்டோ மிக்ச்சர் மருந்தில் கலக்கவும். இதனால் மருந்தானது பயிர்களில் நன்றாய் ஒட்டிக்கொள்ளும்.

### Aquatic Seeds in Wet Lands.

**நன்செய் நிலங்களில் வேப்பம் பாசி.**—நன்செய் நிலங்களில் ஒருமுறை வேப்பம் பாசி உண்டாகிவிட்டால் பிறகு அதைத் தொலைப்பது மிகவும் கஷ்டம். இந்தக் களை உண்டாயிருக்கும் நிலங்களில் நெற்பயிர் சரியாய் வளருவதில்லை. இந்தப் பாசியைத் தொலைக்க அநேகவிடங்களில் அநேக முறைகளைக் கையாளுகிறார்கள். அவைகளில் அநேகம் த்ருப்திகரமாயிருப்பதில்லை.

எல்லாவற்றிற்கும் ச்லாக்யமான பக்ஷம் எதுவென்றால் ஆடாதோடை என்னும் காட்டுச் செடியின் தழையை வெட்டிக்கொண்டு வந்து நடுகை செய்வதற்கு முன் நிலத்தில் போட்டு மிதித்துவிடுவதே யென்று 'கிருஷிகன்' எழுதுகிறது. இப்படிச் செய்தால் இந்தப் பாசி யுண்டாகாமலே தடுக்கலாம். ஒருவேளை இப்படி முன்கூட்டிய போடத் தவறிவிட்டால், பயிரின் ஊடே களையெடுக்கும்போது இந்தத் தழைகளைப் போட்டு மிதித்துவிட்டாலும் பாசி ஒடுபட்டுப்போகும். இதைப் பரீக்ஷிக்க யாராவது விரும்பினால் ஒரு தொட்டியில் தண்ணீர்விட்டு இதில் வேப்பம்பாசியைப் போட்டு ஆடாதோடைத் தழையை இடித்து சார்பிழிந்து அந்தப் பாசியில் கலந்தால் அது நிர்மூலமாவது தெரியும். இந்த ஆடாதோடைச் செடியை எல்லாவிடங்களிலும் வேலிகளில் வைத்து உண்டாக்கலாம். வேப்பம் பாசி உண்டாகாத வயல்களிலும இந்தத் தழை நல்ல தழையெருவாக உபயோகப்படும. வயல்களிலுள்ள திடர்களில் இந்தச் செடியை நட்டு வ்ருத்திசெய்யலாம். இந்தச் செடியை கொண்டுவந்து நட்டு வ்ருத்திசெய்வது மிகவும் எளிது. இதன் கிளைகளை வெட்டி நிலத்தில் நட்டு வைத்து கொஞ்சம் தண்ணீர் விட்டால் போதுமானது. மழைகாலத்தில் இப்படி நட்டுவிட்டால் வேறு உதவியின்றி தானாகவே வ்ருத்தியாகிவிடும.

### Protecting Cattle from Flies.

**கால்நடைகளை ஈக்கள் தொந்தரவு செய்யாதபடி பார்த்துக்கொள்வது.**—அமெரிக்கா ஐக்ய நாடுகளின் விவஸாய டிபார்ட்மெண்டார் இதுவிஷயமாய் ஏராளமான பரீக்ஷைகள் செய்து பார்த்திருக்கிறார்கள். சில த்ரவப் பொருள்களை கால்நடைகளின் தேகத்தில் தடவி வைத்தால் அவைகளை ஈக்கள் சிலகாலம் வரையில் தொந்தரவுசெய்வதில்லை. அதோடு அந்த ஈக்கள் கால்நடைகளின் மேலுள்ள ரணங்களில் உட்கார்ந்து முட்டையிடுவதுமில்லை. இந்த த்ரவப்பொருள்களில் முக்யமானவை மட்டமான பெட்ரோலியம் எண்ணெய், பருத்திக்கொட்டை யெண்ணெய், மீன் எண்ணெய் ஆகிய இவைகளாகும்.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operation among Carpenters.

**தச்சர்களுக்குள் கோவாபரேஷன்.**—வடக்கே பாரிலி என்னும் ஊரில் 1913-ம வர்ஷத்தில் தச்சர்களுக்காக ஒரு கோவாபரேடிவ ஸங்கம ஸதாபிக்கப்பட்டது. அது தற்போது ரொம்ப நன்றாய் நடந்துவருகிறதென்று தெரிகிறது. அதற்கு முன்னால் அந்த ஊரில் பணமுள்ள கண்ட்ராக்டர்களும் வ்யாபாரிகளும் தச்சர்களுடன் ஸாமான் செய்து கொடுக்கும்படி ஒப்பந்தம பேசிக் கொள்வது வழக்கமாம். தச்சர்கள் ஸாமான்களை இன்ன காலத்துக்குள் இன்ன விலைக்குச செய்து கொடுக்கவேண்டுமென்று, நிபந்தனை ஏற்பட்டிருக்கும். இதில் தச்சர்களுக்கு வேலைக்குத் தக்க கூலி கிடைப்பதில்லை. ஏதாவது அஸந்தர்ப்பத்தால் ஒப்பந்தப்படி ஸாமான்களைச் செய்து கொடுக்காவிட்டால், கண்ட்ராக்டர்கள் தச்சர்களை ரொம்பவும் ஹிம்ஸித்துவருவார்கள். சிலஸமயங்களில் கண்ட்ராக்டர்கள தச்சர்களை ஜெயிலுக்கு அனுப்புவதாக பயமுறுத்தினதுமுண்டு. இவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக 1913-ம வர்ஷத்தில் 30-தச்சர்கள்கொண்ட ஸங்கம் ஒன்று ஸ்தாபித்தார்கள்.

இந்த ஸங்கத்தில் எல்லா ஜாதித் தச்சர்களும சேரலாம். ஸங்கத்துக்கு வேண்டிய மூலதனத்துக்கு மெம்பர்கள் ஷேர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு ஷேரின் மதிப்பு 50-ரூபாயாகும். மெம்பர்கள் பங்கு ஒன்றுக்கு மாஸம 1-க்கு 1-ரூபாய் வீதம் செலுத்த வேண்டும. தற்போது அதன் பங்கு மூலதனம் 885-ரூபாயாகும. இதன் ஆதாரத்தின்மேல் இந்த ஸங்கம் ஜில்லா கோவாபரேடிவ் பாங்கியிலிருந்தும் மற்ற விடங்களிலிருந்தும் கடன வாங்குகிறது. இந்த ஸங்கத்துக்கு 6-டிரெக்டர்கள் கொண்ட ஒரு மானேஜ்மெண்ட் போர்ட் இருக்கிறது. அந்த ஊரில் கோவாபரேஷனில் ஊக்கம் காட்டிவரும் ஒரு இங்கலீஷ் கனவானும் அவ்வூர் தச்சுவேலை ஸ்கூலின் தலைமை உபாத்யாயரும் அதில் டிரெக்டர்களாயிருக்கிறார்கள். மேற்சொன்ன தச்சு ஸ்கூல் உபாத்யாயர் அதில சேர்ந்திருப்பதால் ஸங்கத்துத் தச்சர்கள் செய்யும் ஸாமான்கள் ரொம்ப கீர்த்தியாயும் வேலைப்பாடுள்ளனவாயுமிருக்குமென்றும், அவர்களுடைய தொழில்முறையில சீர்திருத்தங்கள் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

ஸங்கத்தின் கமிட்டியார் இன்ன ஸாமான்கள் செய்யவேண்டுமென்பதை நிர்ணயித்து, தச்சர்களுக்கு வேலை கொடுத்து வேலைக்குத தகுந்த கூலிகொடுக்கிறார்கள். வேலைக்கு வேண்டிய மரம் முதலிய மூலப்பொருள்களை ஸங்கத்தார் வாங்கிவைத்திருக்கிறார்கள். மரம் அறுத்தல் முதலிய சில்லரை வேலைகளை வெளிவேலையாட்களைக்கொண்டு நடத்திவருகிறார்கள் சென்ற வர்ஷத்தில் மெம்பர்களுக்கு நூற்றுக்கு பத்து வீதம் டிவிடெண்டும், தாங்கள் செய்த வேலைக்குத் தகுந்தபடி ரூபாய்க்கு ஓரணா வீதம் இனாமும் கிடைத்தது. இவ்விதம் நல்லகூலி கிடைப்பதோடு வேலை செய்வதற்கேற்ப இனாம் கிடைப்பதால் தச்சர்கள் அதிக ஊக்கமெடுத்து வேலை செய்கிறார்களாம.

### Co-operation in Bombay.

**பம்பாயில் கோவாபரேஷன்.**—பம்பாயில் இந்திய ஊழிய ஸங்கத்தார் தாழ்ந்த ஜாதிகளுக்குள் அநேக கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். தற்போது அவ்வித ஸங்கங்கள 14 இருக்கின்றன. இவைகளிலுள்ள மொத்த மெம்பர்கள் 468. இவர்கள் ஸங்கங்களில் சேருவதற்கு முன்னால் ரொம்ப வட்டியின் மேல் கடன் வாங்கியிருந்தார்கள் இந்த ஸங்கங்களில் சேர்ந்ததனால் தற்போது இவர்களுக்குள்ள கடன் குறைந்திருப்பதோடு, இவர்கள் செலுத்தும் வட்டியும் ஒன்றுக்குக் காலாகக் குறைந்திருக்கிறது. அநேக மெம்பர்கள் தங்களுடைய ஆயுளை இன்ஷூர் செய்திருக்கிறார்கள்.

அந்த ராஜதானியிலுள்ள கைத்தறி நெசவுக்காரர்களுக்குள் கோவாபரேஷன் அபிவ்ருத்தியடையவில்லை யென்று தெரிகிறது. அவர்கள் கோவாபரேடிவ் முயற்சியில் கலந்துகொள்ள முன்வருவதில்லையாம். தங்கள் தொழிலை வ்யாபார முறையில் நடத்தவாவது கணக்குகள் வைத்துக் கொள்ளவாவது அவர்களுக்குத் தெரியவில்லையாம. இதனால் அவர்களுக்கு நூல் முதலிய மூலப் பொருள்களை கோவாபரேடிவ் முறையில் வாங்கிக் கொடுப்பதற்கும, நெய்த துணிகளை லாபகரமாய விற்பதற்கும ஸங்கங்கள ஸ்தாபிப்பது முடியவில்லையாம். அந்த மாகாணத்தில் மொத்தம் 29-நெசவுக்காரர்கள் ஸங்கம் இருக்கின்றன. இவைகளில் அநேகம கொடுக்கல் வாங்கல் வ்யாபாரத்தோடு நின்றிருக்கின்றன. இவைகளில் சிலதான் ஒழுங்காய் நடைபெறுகின்றன.

# COMMERCE.

# வ்யாபாரம்.

## Paper Manufacture.

கடுதாசி செய்தல்.—சென்னை நாஷனல் பண்ட் ஸபையாரின் ஆதரவில் நடந்த ஒரு மீட்டிங்கில் கடுதாசித் தொழிலைபபற்றி ஒரு உபன்யாஸம் நடந்தபோது, சென்னைக் கைத்தொழில் இலாகா டிரெக்டர் இந்தத் தொழிலைப்பற்றி சில விஷயங்கள் சொன்னார். சில வர்ஷங்களுக்கு முன்னால் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் கடுதாசித தொழிலை நடத்த உத்தேசித்து 4½ லக்ஷம் ரூபாய் செலவுசெய்து புனலூரில் ஒரு கடுதாசி மில் ஸ்தாபித்தார்கள். ஆனால் அது த்ருப்தியாய் நடந்து வராததால், அதை விற்றும் விடும்படி நேரிட்டது. சென்ற வாஷம் கடுதாசித் தொழிலை நடத்திப் பார்க்க வேண்டுமென்று கவாமெண்டார் அபிப்பிராயப்படவே, மிஸ்டர் ட்ரெஸ்லர் புனலூர் பேபர் மில்ஸ் ஸொந்தக்காரரை, அந்த மில்லை ஆராய்ச்சிக்குக் கொடுக்கும்படி கேட்டார். ஆனால் அந்த மில்லை அவர்கள் இந்த மாஸம்தான் டிபாரட் மெண்டின வசம் விட ஒப்புக்கொண்டார்கள்.

அங்கேயுள்ள யந்திரங்கள் பழைய மாதிரியாயிருக்கிறதாம். அவைகளைக்கொண்டு வேலை நடத்தினால் லாபம் கிடைப்பது கஷ்டம். அவைகளில் உயர்ந்த கடுதாசி வகைகள் செய்வது முடியாது.

ஒரு நல்ல கடுதாசித் தொழில்சாலை ஏற்படுத்துவதற்கு 3 லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும் அதற்கு மூங்கில் ஏராளமாய் வேண்டியிருக்கும். இதில் என்ன லாபம வருமென்பது தெரியாவிட்டால், எவரும பணம் போட முனவருவது ச்ரமம். கடுதாசி செய்ய சிறிய தொழில்சாலை ஸ்தாபித்தால் தக்க பலன் ஏற்படாது. இதன வருமபடியைக் கொண்டு, பெரிய தொழில்சாலைகளில் என்னலாபம் வருமென்று கணக்கிடுவது சரியல்ல. கடுதாசி செய்வதில், ஏற்படும செலவில் ஸவல்ப தொகை அனுக்கணக்கில் ஏறினும் குறைந்தாலும் அதற்குத் தகுந்தபடி லாபநஷ்டமேற்படககூடும.

மிஸ்டர் ட்ரெஸ்லர் ஒருபோதும் கடுதாசி செய்ய உடன்படவில்லையாம. ஆனால் தற்போது கடுதாசிக்கு ரொம்ப கிராக்கி ஏற்பட்டிருப்பதால், தற்போதைய நெருக்கடிக்கு ஸாதகமாக ஏதாவது செய்யலாமென்று அவர் எண்ணியிருக்கிறாராம. திருவாங்கூர் கவர்ன்மெண்டார் தீர்வையின்றி 1000 மூங்கில்கள் கொடுக்க ஸம்மதித்திருக்கிறார்கள். சென்னை கவர்ன்மெண்டார் ஒரு இஞ்ஜினியரையும் கடுதாசி செய்பவரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள அனுமதிகொடுத்திருக்கிறார்கள். ஆனால் தற்போது காகிதக்கூழை வெள்ளையாக்க யந்த்ரம கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. தற்போது பத்ரிகைகளுக்கு உபயோகப்படும் கடுதாசி மரக்கூழிலிருந்து செய்யபபடுவதால், அதுவிஷயமாய் தாம் ஏதாவது செய்யக் கூடுமென்று மிஸ்டர் ட்ரெஸ்லர் சொன்னார்.

## A Commercial Museum for Madras.

சென்னைக்கு ஒரு வ்யாபாரப்பொருள் காட்சி.—இந்தியா கவர்ன்மெண்டார் கல்கத்தாவில் வ்யாபாரக் கைத்தொழில் பொருள் காட்சி ஸ்தாபித்திருப்பதை உத்தேசித்து, சென்னையிலும அதன் கிளையாக ஒரு பொருள் காட்சிசாலை ஏற்படுத்தவேண்டுமென்று சென்னை சேமபர் ஆப காமர்ஸ் என்னும் ஸபையார் ஸமீபத்தில் மதராஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொண்டார்கள். சென்னை கவர்ன்மெண்டார் அது விஷயமாய் கவனம் செலுத்தி வருவதாகவும், ஆனால் தற்போது அது விஷயமாய் ஒரு வேலையும் செய்வதற்கில்லை யென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

## Button Industry.

பொத்தான் கைத்தொழில்.—திருவனந்தபுரத்தில் மிஸ்டர் நரஸிம்ம ஐயர் என்பவர் கொட்டாங்கச்சிகளைக் கொண்டு பொத்தான் செய்ய ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிறார். அந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் பொததான்கள் ஆங்கிலேயரால் செய்யப்படும் பொத்தானகளுடன் வயாபாரத்தில் போட்டி போடத் தகுந்ததா யிருபபதாகத் தெரிய வருகிறது.

## Business Enterpise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்—இந்தியாவில் சென்ற டிஸம்பர்மாஸத்தில் அடியிலகண்ட விவரப்படி 8-ஜாயிண்ட் ஸ்டாக் கமபெனிகள ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள் | 7,85,000 |
| 1 | அச்சடிக்கும கம்பெனி | 15,000 |
| 1 | தேயிலைத்தோட்டக்கம்பெனி | 5,00,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | 10,00,000 |
| 8 | | 23,00,000 |

## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Cotton Stalks.

**பருத்திச் செடியின் தாள்கள்.**—பருத்தி பயிரிடும் ப்ரதேசங்களில் பருத்தி செடியின் தாள்கள் வீணாகப் போவதோடு, அவைகளை அப்புறப்படுத்துவதற்கும் செலவு ஏற்படுகிறது. அமெரிக்காவில் ஒரு டன் பருத்தி விளையும் ஒரு ப்ரதேசத்தில் 5-டன் தாள்கள் கிடைக்கின்றனவாம். இவைகளைப் பிடுங்கி எரிப்பதற்கு ஒரு டன் தாளுக்கு 3-ரூபாய் வரையில் செலவாகிறதாம். இந்த உபயோகமற்ற பொருளும் இனி தொழில்களில் உபயோகப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் தாளிலிருந்து கடுதாசி செய்யலாமாம். மரக்கூழிலிருந்து செய்யப்படும் கடுதாசியை விடப் பருத்தித்தாள் கடுதாசி ரொம்ப உறுதியாயும் கீர்த்தியாயு மிருக்கிறதாம. அமெரிக்காவில் இதற்காக ஒரு தொழில் சாலையும் ஸ்தாபித்து வருகிறார்களாம்.

இந்தத் தாளிலிருந்து கிடைக்கும் மரக்கூழிலிருந்து கன் காட்டன் என்னும் வெடிமருந்தும் செய்யலாமாம். இது அபிவ்ருத்தி யடையுமானுல், வெடிமருந்து செய்ய உதவும் பருத்தியை வேறு கார்யங்களுக்கு உபயோகிக்க முடியும்.

பருத்தித்தாள் கூழை ஒரு மருந்து ஜலத்தில் கரைத்தால் ஒரு பசையான பொருள் கிடைக்கிறதாம். இந்தப் பொருளிலிருந்து நூல் நூற்ருல் அது பட்டுப் போலிருக்குமாம். பட்டு இழையை மெல்லியதாகவோ கெட்டியாகவோ நூற்கலாமாம். இந்த நூலைக் கொண்டு துணிகள் செய்து ஆடைகளுக்கு உபயோகிக்கலாமாம் ஆனுல் இந்த செயற்கைப்பட்டானது ரொம்ப காள் நிற்காது. இருந்தாலும் இது ரொம்ப ஸ்வல்ப விலைசகுக் கிடைக்குமாகையால், இந்தக்குறை ஒரு பெரிய விஷயமாகாது.

இந்த பசையான பொருளில் தக்க சாயங்கள் கலந்து ஸாதாரண தோல் அல்லது முதலையின் தோல் இவைகளைப்போன்ற செயற்கைத் தோல்கள் செய்யவும் முடியுமாம.

பருத்தித்தாள் கூழிலிருந்து அநேக ரஸாயனப் பொருள்கள் செய்யவும் கூடுமாம்.

பருத்திக் கூழ் செய்யும் தொழில் வ்ருத்தியடைந்தால் பருத்தி ஸாகுபடிக்கு ரொம்ப அநுகூலமேற்படுமாம். தற்போது அமெரிக்காவில் பருத்தித்தாளை அப்புறப்படுத்த அதை வேரோடு பிடுங்காமல் வேரும் கொஞ்சம தாளையும் விட்டு வெட்டுகிறார்கள். பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகள் அடிக்கட்டையில் தங்கியிருந்து மறுபடியும் பருத்தி ஸாகுபடி செய்யும்போது,வ்ருத்தியாகி பயிரை அழிக்கின்றன. பருத்திச்செடியின் வேரும்கடுதாசிசெய்ய உதவுமாதலால,இனி தாளை அப்புறபபடுத்துபவர்கள், செடியை வேரோடு பிடுங்குவார்கள். அப்போது பூச்சிகளுக்குத் தங்குமிடமும் ஆகாரமுமில்லாமல் போய் வயலைவிட்டு வேறிடத்துக்குப போக நேரிடும். இதனுல் அடுத்துப் பயிர் செய்யப்படும் பயிரில் பூச்சிகள் அதிகமாய் ஏற்படமாட்டா.

### Moya Grass.

**மோயா புல்.**—வடக்கே மத்ய மாகாணங்களில் மோயா புல் என்று ஒரு புல் ஏராளமாய் இருக்கிறது. இது காகிதக்கூழ் செய்ய ஏற்றதென்று சொல்லப்படுகிறது. இந்தப் புல்லிலிருந்து நூற்றுக்கு 39-வீதம் காகிதக் கூழ் கிடைக்குமாம். இதை எளிதில் வெளுப்பாக்கவும் முடியுமாம். அந்த மாகாணங்களிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் மாத்ரம் 15,000 முதல் 20,000 டனவரை புல் கிடைக்குமாம் இதைச் சேகரித்து மில்லுகளுக்கு ஸப்ளை செய்ய டன்னுக்கு 15-ரூபாய்க்கு மேலாகாதாம்.

### Old Papers.

**பழங்கடுதாசிகள்.**—இட்டாலியர்கள் பழங்கடுதாசிகளை போர்முனையில் அடுபபெரிக்க அனுப்புகிறார்களாம். ஆபிஸுகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் பழங்கடுதாசிகளை சேகரித்து ஒரு தொழில் சாலைக்குக் கொண்டுபோய் யந்த்ரங்களில் கொடுத்து சுருட்டி அழுக்கி உருண்டை விறகுகள்போலச் செய்வார்கள். இந்தக் கடுதாசி விறகில் மட்டமான கொழுப்பு, நாப்தலீன், பாரபீன் முதலிய எண்ணெய்ப் பொருள்களைச் செலுத்துவார்கள.

இவைகளை தக்க அளவில் நறுக்கி மூட்டைகளில் போட்டுக்கட்டி போர்முனைக்கு அனுபபுகிறார்களாம். இந்தக கடுதாசிச் சுருளானது 20-நிமிஷம் எரியுமாம். நாலைந்து சுருள்களைக்கொண்டு பட்டணம் படியால் ஒரு படி ஜலத்தை 10-நிமிஷத்தில் கொதிக்கவைக்கலாம். இந்தமாதிரிக் காகிதச் சுருள்களை ஏராளமாக இட்டாலியப போர்முனைக்கு அனுபபிவருகிறார்களாம. இட்டாலியர்கள் யுத்தம் செய்யுமிடத்தில் ரொம்ப குளிராயிருப்பதால் இவைகள் ஸோல்ஜர்களுக்கு ரொம்ப ப்ரயோஜனமுள்ளவைகளாக இருக்கின்றனவாம்.

## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Compound Interest.

தொடர் வட்டி.—ஒரு ஸ்வல்ப தொகையை ஸ்வல்ப வட்டிக்கு விட்டு, வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியை முதலுடன் சேர்த்து அதையும் முன்போலவே தொடர் வட்டிக்கு விட்டுவந்தால், முதலில் போட்ட தொகையானது சில வருஷங்களுக்குள் ஏராளமாய் வளர்ந்து விடும். இப்போது கிறிஸ்து பிறந்து 1916-ம் வருஷம் நடக்கிறது. கிறிஸ்து பிறந்த வருஷத்தில் ஒரு அணாவை நூற்றுக்கு வருஷத்துக்கு 5 வீதம் வட்டிக்கு விட்டு, ஒவ்வொரு வருஷமும் கிடைக்கும் வட்டியை முதலுடன் சேர்த்து வட்டியும் முதலும் வளரும்படி விட்டால், தற்போது அந்தத் தொகை எவ்வளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்குமென்றால், அதை லக்கங்களால் எழுதிவாசிக்கமுடியாது. அந்தப் பணத்தை ஒரே தங்கக்கட்டியாகச் செய்தால் நமது பூமியின் பரிமாணத்தைப்போல 50 லக்ஷம் மடங்கு பெரியதாயிருக்குமாம்.

சில வருஷங்களுக்கு முன் ஒரு ப்ரெஞ்சு ஜனோபகாரி தமது உயிலில் 500 லிவர் என்னும் ப்ரெஞ்சு நாணயத்தை ஜனோபகாரார்த்தமாக விட்டுவிட்டுப்போனார். இந்தப் பணத்தை உபயோகிக்கப் பின்வருமாறு எழுதியிருந்தார். அதாவது இந்த 500 லிவரையும் 5 பாகமாகப் பிரிக்கவேண்டும் ஒரு நூறு லிவரை 100 வருஷத்துக்கு தொடர்வட்டிக்கு விட்டால் அந்தத் தொகை 13,100 லிவராக விருத்தியடைந்திருக்கும். இந்தத் தொகையைக்கொண்டு, பணத்தை வட்டிக்கு விடுவது ந்யாயமென்பதைப் பற்றி வ்யாஸங்கள் எழுதுவோர்களுக்கு பரிசுகள் கொடுக்கவேண்டும்.

இரண்டாவது நூறு லிவரும் 200-வது வருஷக்கடையில் 17,00,000 லிவராக விருத்தி யடைந்திருக்கும். சித்ரக்கலை முதலியவைகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு இனாம் கொடுப்பதற்காக இந்தத் தொகையை சாச்வத பண்டாக வைக்கவேண்டும். மூன்றாவது நூறு லிவரும் மூன்றாவது நூற்றாண்டின் கடைசியில் 22½-கோடி லிவராகும். இதைக்கொண்டு பாங்கிகளும் மியூஸியங்களும் ஸ்தாபிக்க வேண்டும். நான்காவது தொகை நான்காவது நூற்றாண்டின் கடைசியில் 30,000-கோடியாகும். இந்தத் தொகையைக் கொண்டு ப்ரான்ஸில் ஒவ்வொன்றிலும் 1½-லக்ஷம் ஜனங்கள் வஸிக்கக்கூடியதாக 100-பட்டணங்கள் கட்ட வேண்டும். 5-வது தொகை 5-வது நூற்றாண்டின் கடைசியில் 4-லக்ஷம் கோடியாகும். இதைக் கொண்டு பிரிட்டன், ப்ரான்ஸ் இந்த தேசங்களின் ராஜாங்கக் கடன்களை அடைத்து விடலாம். இதுபோக பாக்கிப் பணத்தைக் கொண்டு ஸொத்துகள் வாங்கலாம், பள்ளிக்கூடங்கள், வைத்ய சாலைகள், ஆச்ரமங்கள், முதலியவைகளை நிர்வகிக்கலாம். இன்னும் எத்தனையோ காரியங்களைச் செய்யலாம். அப்படிச் செய்தாலும் இன்னும் பணம் மிச்சமாகும். அந்த உயிலை நிறைவேற்றுபவர்கள் தங்கள் யுக்தம்போல் செலவழித்துக் கொள்ள வேண்டும்.

### Land and Water Motor Car.

நிலத்திலும் நீரிலும் போகக்கூடிய ஒரு மோட்டார்வண்டி.—அமெரிக்காவில் ஒரு கனவான் நிலத்திலும் நீரிலும் போகக்கூடியதாய் ஒரு மோட்டார்வண்டி செய்திருக்கிறார். இதற்கு 'ஆம்பிபியன்' என்று பெயர். இதில் ஸாதாரண மோட்டார்வண்டியின் அங்கங்களெல்லாம் இருப்பதோடு ஜலத்தில் மிதப்பதற்கு வேண்டிய ஸாதனங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது ஸமுத்ரக்கரையிலுள்ள மணலில் மணிக்கு 75-மைல் வீதம் ஓடுமாம். வண்டிக்காரர் ஏரி அல்லது சிறுகடலுக்கு வந்தவுடன் வண்டியை நிறுத்தாமல் ஜலத்தில் விடுகிறார். இது மிதப்புகளின் உதவியால் மிதந்து கொண்டு ஜலத்தில் மணிக்கு 15-மைல்வீதம் போகிறது. இந்த வண்டியில் ஓட்டுபவரைத்தவிர 5-பரயாணிகள் உட்காரலாமாம்.

### Bad Habits.

கெட்ட வழக்கங்கள்.—கை நகங்களைக் கடிப்பது, விரலை வாயில் வைத்துக்கொள்வது, எழுதுகையில் பேனாக்கட்டையைப் பல்லில் இடுக்கிக் கொள்வது, கற்பலகையில் எழுதியதை அழிப்பதற்காக நக்குவது, நயலேகனி கருமையாய் எழுதும்பொருட்டு அதன் நுனியை நாவினால் நனைப்பது, தபால் தலைகளையும் உறைகளின் மூடி விளிம்புகளையும் ஒட்டுவதற்காக அவைகளை நாவினால் தடவி ஈரமாக்குவது முதலிய வழக்கங்கள் குழந்தைத்தனமான வழக்கங்களென்றும், தீமை பயக்கத்தக்கவை யென்றும், ஆதலால் வெறுக்கத்தக்கவையென்றும் நாம் சொல்லாமலே ஏற்படும்.—நல்லாசிரியன்.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Food for Infants and Invalids.

குழந்தைகளுக்கும் மெலிந்தவர்களுக்கும் ஏற்ற உணவு.—மேல் நாடுகளிலிருந்து வரும் கட்டிபபால், மெல்லின்ஸ் ஆகாரம் முதலியவைகளுக்கு பதிலாக ஒரு ஸுலபமான ஆகாரம் தயார்செய்து குழந்தைகளுக்கும மெலிந்தவர்களுக்கும சாப்பிடக் கொடுக்கலாமென்று மிஸ்டர் பி. கே. வெங்கட்டராமய்யா நமக்கு எழுதுகிறார். அவர் சொல்லுவதாவது. "கேழ்வரகு ஸாதாரணமாய், எவ்விடத்திலும், எவர்க்கும், எளிதில், ஏராளமாய், அகப்படக்கூடியது. அதை தேவையான பரமாணம், ஜலத்தில் ஸுமார் ½-மணிநேரமவரைக்கும் ஊற வைத்து, பிறகு அரைத்து, அதனுடைய, வெண்மையான பாலை, மெல்லியவஸ்த்ரத்தினால் வடிகட்டி எடுத்துக்கொண்டு, அதனுடன் கொஞ்சம் நெய, பனம்கற்கண்டு இவைகளைசேர்த்து கொதிக்கவைத்து, கொஞ்சம் கெட்டியாகும்போது இறக்கிவைத்துககொண்டு, பிறகு குழந்தைகளுக்கு கொடுககலாம். தினந்தோறும் அம்மாதிரிசெய்ய அனுகூலப்படாம லிருக்கும்பக்ஷத்தில் ஒரேதடவையில் 1-அல்லது 2-படி கேழ்வரகை நன்றாய் உலர்த்தி, குத்திபபுடைதது, அரைத்து, மெல்லிய வஸ்த்ரத்தினால் வஸ்த்ரகாயம செய்து வைத்துக்கொண்டு, தேவையான அளவு, ஜலத்தில் கரைத்து மேல்சொன்னமாதிரி ஆகாரம் செய்யலாம. எவ்விதத்திலும் பழகிய கேழ்வரகை உபயோகிததால் அதிக நலம். இந்த உணவு ஸாதாரணமாய் 10-நாள் சிசுக்களுக்குக்கூட கொடுக்கலாம. இந்த உணவை குழந்தைகளுக்கும், வயதுமுதிர்ந்தவர்களுககும் கொடுக்க, அதிக வலுவும், ஸமதாதுவும் உண்டாகும். தேகத்திற்கு அஸௌக்யம் கிடையாது. தற்ஸமயம் அநேககனவான்கள்கூட உபயோகித்துககொண்டு வருகிறார்கள். தவிர நானும் அதை உபயோகிததுவருவதுண்டு."

### Hamsadvani.

ஹம்ஸத்வனி.—இந்தராகம் ஸுமார் 100-வருஷங்களுக்குமுன ராமஸ்வாமி தீக்ஷிதரால் கல்பனை செயயபபட்டது. 1735ஸு முதல் 1815-வருஷம் வரையில் ராமஸ்வாமி தீக்ஷிதர் ஜீவதிசையோ டிருந்ததாகத் தெரியவருகிறது. இவர் ஓர் சிறந்த அத்வைதி. அதினாலேயே "ஸோஹம் ப்ரும்மோஸ்மி" என்கிற அத்வைதப்பொருள் த்வனிக்கும்பொருட்டு அத்வைத மந்திரமாகிய "ஹம்ஸோ ஹம்ஸோ" என்னும் ஹம்ஸ மந்த்ரத்தை இந்த ராகத்திற்கு பெயரிட்டாரெனவமையும்.

லக்ஷணம்:—இந்த ஹம்ஸத்வனி ராகம் ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் முறையே ஐந்து ஸ்வரங்களை யுடைய ஔடவராகமென்று சொல்லப்படுகிறது. இதில் மத்யமம (ம) தைவதம் (த) இவ்விரண்டு ஸ்வரங்களும (வர்ஜ்யம) விலக்கப்பட்டிருக்கின்றன. அந்தர காந்தார காகலி நிஷாதங்கள் ராகத்தின் களையை (ராகச் சாயையை) காட்டும் ஸ்வரங்களாம். ஸகரிப-கநிபஸ்-பரி-ஸ்பநிக-பரிகஸ-கநிபகரி-பரிஸநிப-ரிநிகபரி முதலிய "தாட்டுஸ்வரப் பிரயோகங்கள்" இந்த ராகத்தில் மிகவும் ராக ரஞ்சகமானவைகளாக விருக்கின்றன. தற்காலத்தில் வழங்கி வருகிற 75-மேளகர்த்தா ப்ரகாரம் இந்த ராகம் 29-வது மேளகர்த்தாவாகிய தீரசங்கரா பரணத்தில் (ஜன்யம்) பிறந்தது. கால நிபந்தனைக ளில்லாமல் எப்பொழுதும் பாடத்தகுந்தது.—ஸங்கீதப் பிரகாசிகை.

### Children's Food.

குழந்தைகளின் ஆகாரம்.—சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு சரியாகச் சாப்பிடக் கற்றுக்கொடுக்கவேண்டும். குழந்தைகள் ஸாதாரணமாய் சாப்பிட்ட பிறகே ஜலம் குடிப்பது நல்லது. தொண்டை வரண்டிருந்தால்மாத்ரம் கொஞ்சம் ஜலம் சாப்பிடுமுன் குடிக்கலாம். சாபபாட்டு நேரத்தைத் தவிர மறற நேரங்களில் குழந்தைகளுக்கு ஒன்றும் தின்னக் கொடுக்கக் கூடாது. சாபபாட்டு நேரத்துக்கு இடையில் தின்பண்டங்களைத் தின்னக்கொடுபபது தேகஸுகத்துக்கு ரொம்ப கெடுதாக ஏற்படும். குழந்தைகளை ஆகாரத்தைக ஷைகயால் அளைந்து விளையாடாமலிருககும்படிக்கும், சீக்ரம் போதுமான அளவு சாப்பிடும்படிக்கும் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆகாரம ரொமப ஆறிப்போகும்படி குழந்தைகளை மெதுவாய் சாபபிட விடக்கூடாது. குழந்தைகள் சாபபிடும்போது அவைகளை அடித்து வைவது கூடாது. அபபடிச் செய்தால் ஜீர்ணசக்தி குறைந்து போகக்கூடும்.

# INDIANS ABROAD.

# இதர தேசங்களில் இந்தியர்கள்.

## The Situation in South Africa.

**தென்னாப்ரிக்காவில் இந்தியர்களின் நிலைமை.**—தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களின் குறைகளை நிவர்த்திசெய்ய மிஸ்டர் காந்தியும் அவரைச்சேர்ந்த சில கனவான்களும் வெகுகாலம் அதிகாரிகளோடு போராடினதின்மேல், இந்தியர்களின் குறைகளைப்பற்றி விசாரிக்கவும், அதுவிஷயமாய் யோசனைகள் சொல்லவும், தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் ஒரு கமிஷன் நியமித்தார்களென்றும், அதனால் இந்தியர்களின் குறைகளில் பெரும்பாகம் நிவர்த்தியாயிற்றென்றும் அநேகர் பத்ரிகைகளில் வாசித்திருக்கலாம். ஆனால் இந்தியர்களின்நிலைமை இன்னும் கேவலமாகவே இருக்கிறதென்று தெரியவருவதாக "இந்தியன் எமிக்ரண்ட்" பத்ரிகை எழுதுகிறது.

இந்தியர்கள் ஒப்பந்தக்கூலிகளா யில்லாமல் ஸ்வயமாக வேலைசெய்துவந்தால் அவர்கள் தலைக்கு வர்ஷமொன்று 3-பவுன் (45-ரூபாய்) வரி கொடுக்கவேண்டுமென்று முன்பு அங்கே சட்டமிருந்தது. மிஸ்டர் காந்தி எடுத்துக்கொண்ட முயற்சியால் அந்தவரி ரத்தாயிற்று. அது ரத்தாயுங்கூட இந்தியர்களின் நிலைமை முன்னிருந்தபடியே யிருக்கிறதாம். முன்பு இந்தியர்கள் தங்கள் பெயர்களை ரெஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டுமென்றிருந்தது. முதலில் அவர்கள் ரெஜிஸ்டர் செய்துகொள்ள மறுத்தார்கள். ஆயினும் கடைசியில் அவர்கள் தங்கள் பெயர்களை ரெஜிஸ்டர் செய்துகொள்ளவே, ஏஷியாடிக் சட்டத்தில் அப்போதுள்ள இந்தியர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்னும்பாகத்தை மாத்ரம், அது இனி அவச்யமாயிராமையால், அதிகாரிகள் ரத்துசெய்துவிட்டார்கள். ஆனால் அங்குள்ள இந்தியர்களுக்கு குழந்தைகள் பிறக்குமானால் அவைகளின பெயர்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறதாம். இவ்விதம் ஒரு நிருபர் இந்தியன் எமிக்ரண்ட் பத்ரிகைக்கு எழுதுகிறார்.

மேற்சொன்ன 3-பவுன் வரியைப்பற்றி அவர் எழுதுவதாவது: 1875-ம் வர்ஷத்து சட்டத்தின்படி, ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் இல்லாத கூலிகள் அந்ததேசத்திலிருக்கவேண்டுமானால் வர்ஷத்துக்கு 3-பவுன் வரி செலுத்தவேண்டும். வரி செலுத்த இஷ்டப்படாத ஸ்வயேச்சையான இந்தியர்கள் வரிசெலுத்த இஷ்டப்படாவிட்டால் ஒன்று ஒப்பந்தக்கூலிகளாக வேலைசெய்யவேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவுக்குத் திரும்பிவிடவேண்டும். இப்போது 3-பவுன் வரி செலுத்தவேண்டுமென்னும் பாகத்தைமாத்ரம் ரத்துசெய்திருக்கிறார்கள். அதிகாரிகள் இஷ்டப்பட்டால் இந்தியர்களை இந்தியாவுக்கு விரட்டிவிடலாம். அல்லது ஒப்பந்தக் கூலியாக வேலைசெய்யும்படி கட்டாயப்படுத்தலாம். இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்ராயத்துக்கிணங்கி தென்னாப்பிரிக்கா கவர்ன்மெண்டார் மேற்சொன்ன இந்த இரண்டு நிபந்தனைகளையும் அமுலுக்குக்கொண்டுவாராமலிருக்கிறார்கள். ஆனால்இந்தியர்களின் குறையை நிவர்த்திசெய்வதற்காக ஏற்படுத்தின இந்தியன் ரிலீப் ஆக்டின் நோக்கமென்னவென்றால் இந்தியர்கள் ஸ்வதாவாக இந்தியாவைவிட்டுப்போக வேண்டுமென்பது. அவ்விதம் இந்தியர்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேறாவிட்டால் அதிகாரிகள் தங்கள் எண்ணத்தைநிறைவேற்ற ஷை பாகங்களை கண்டிப்பாப அமுலுக்குக் கொண்டுவருவார்களென்பது நிச்சயம்.

## Indentured Labour.

**ஒப்பந்தக்கூலி** —கல்கத்தாமார்வாரி ஸங்கத்தார்ஒப்பந்தகூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு ஒரு விண்ணப்பம் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தோடு, குடியேற்ற நாடுகளுக்குப்போய் அங்கே சில காலம் தங்கியிருந்து பிறகு இந்தியாவுக்குத் திரும்பி வந்த இந்தியர்களின் வாககுமூலங்களையும் சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள்.

இது விஷயமாக 'இந்தியன் எமிக்ரண்ட்' பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது. இந்த ஒப்பந்த ஏற்பாடானது 50-வர்ஷத்துக்கு மேலாக நடந்துவருகிறதென்றும, ஆகையால் கவர்ன்மெண்டார் ஒப்பந்தக் கூலிகள் விஷயத்தில் அதிக பொறுப்பு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் மார்வாரி ஸங்கத்தார் தங்கள் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அத்தனை காலமாக ஒப்பந்தக்கூலி ஏற்பாடு இருந்துவந்திருக்க இதைப்பற்றி இந்தியர்கள் இதுவரையில் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்று "இந்தியன எமிக்ரண்ட்" பத்ரிகை கேட்கிறது மேலும் இது வரையில் பொது ஜனங்களாலனுப்பப்பட்ட இந்திய ப்ரதிநிதிகள் எவரும் குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்போனதேயில்லை. ஸுமார் 50 வர்ஷமாய் தக்கமுயற்சி எதுவும் எடுத்துக்கொள்ளாதது இந்தியர்கள் எவ்வளவு அச்ரத்தையா யிருக்கிறார்களென்பதை எடுத்துக்காட்டுகிறது. மேலும் சில இந்தியர்கள இந்தியாவில் கூலியாட்கள் குறைவாயிருக்கிறார்களென்பதை உத்தேசித்து ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை ஆக்ஷேபிக்கிறார்களே ஒழிய, அந்த ஏற்பாட்டினால் கூலியாட்களுக்கு ஏற்படும் கெடுதிகளை சீர் தூக்கி ஆக்ஷேபிக்கவில்லை. ஆகையால் இந்தியர்கள் இது விஷயத்தில் அதிக ச்ரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Sultan's Decision.

ஸுல்தானுடைய தீர்ப்பு. — ஐரோப்பாவிலுள்ள ஒரு கவர்ன்மெண்டார் தமது உத்யோகஸ்தர் ஒருவரை துருக்கிக்கு தூதராக நியமித்து, கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அனுப்பியிருந்தார்கள். தூதருக்கு வயஸு அதிகமில்லை. மேலும் அந்த உத்யோகத்தில் பயிற்சியும் கிடையாது. அவர் ஒரு நாள் ஸுல்தானுடைய அந்தப்புரத்து ஸ்த்ரீகள் ஏறியிருந்த வண்டியைக் கண்டார். அது நன்றாய் மூடப்பட்டிருந்த ஒரு கோச்வண்டி. அதில் ஒரு ஜன்னல் மாத்ரம் திறந்திருந்தது. ஒரு பேடி அதற்குக் காவலாக இருந்தான் தூதர் அந்த வண்டியில் அவ்வளவு பத்ரமாயிருப்பவர் யாரென்று அறிய ஆவல் கொண்டு, அந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க முயன்றார். ஆனால் உடனே அந்தப பேடி தூதரை, முகத்தில் நன்றாய் அறைந்தான். அதன் மேல் தூதர் அது விஷயமாய்க் கலவரமுண்டாக்கினதோடு, அப்தல் ஹமீது ஸுல்தானிடம் ப்ராது செய்தார். ஸுல்தான தூதரை வரவழைத்து விஷயததைக் கேட்கவே தூதர் தமது புகாரைத் தெரிவித்துக் கொண்டார். அவர் சொல்லி முடிததும் ஸுல்தான் சொன்னதாவது. 'ஐயா, உமது வழக்கு முழுவதும் கேட்டேன. நீரோ ஒரு கனவான். ஆகையால் நீர மரியாதைக குறைவான ஒரு கார்யத்தை செய்திருக்க மாட்டீர். ஆகையால் ஒரு பேடியும் உம்மை அடிக்கக் காரண மேற்படாது. ஆகையால் இந்தக் கேஸைத் தள்ளிவிடுவோம்," என்றார்.

### Will the Horse Run Fast?

குதிரை நன்றாக ஓடுமோ?—ஒரு வித்வானுக்குக் கடன் கொடுத்திருந்த வ்யாபாரி பலமுறை வித்வானை தேடியும அகப்படவில்லை ஒரு ஸமயம் இருவரும் ஒரு தெருவில் ஸந்திக்கும்படி நேர்ந்தது வித்வான் நடந்து போனார். வ்யாபாரி குதிரைமீது சென்றார். இம்முறை வ்யாபாரியை ஏமாற்ற முடியாதென்று கண்ட வித்வான், "செட்டியார் வாள், பேஷ் குதிரை! இது ஓட்டததில் எப்படி?" என்று கேட்டார. வ்யாபாரி உடனே குதிரையைத தட்டிவிட்டார. அது வேகமாகச்சென்றது. வித்வான தன் வழியேசென்றார்.

### How to Get Rid of Neighbour's Hens.

அயலானுடைய கோழி வாராதிருக்க உபாயம்.— பட்டணத்திலிருந்து வந்த ஸ்நேகிதன் :—உன பககத்து வீட்டுககாரனுடைய கோழிகள் உன் தோட்டத்திற்குள் வந்து தொந்தரவு செய்கின்றனவென்று முனபு சொன்னாயே. இப்பொழுதும் அவை வருவதுண்டோ?

க்ராமவாஸி :—இப்பொழுது அவைகள் வெளியில் வருவதேயில்லை. பக்கத்து வீட்டுக்காரன் அவைகளைக் கோழிக்கூட்டில் அடைத்து வைக்கிறான்.

பட்டணவாஸத்தான் :—"எனப்படி யவன் செய்கிறான்? நீ என்ன் செய்தாய்?"

க்ராமவாஸி :—"ஒவ்வொரு நாளும் இரவில் தோட்டத்துப் புல்லில் பத்துப் பதினைந்து கோழிமுட்டைகளை மறைத்து வைத்து, மறுநாள் காலையில் பக்கத்து வீட்டான் எனது தோட்டத்தை எட்டிப் பார்க்கும்போது, அந்த முட்டைகளை அவனுக்குத் தெரியும்படி வெளியெடுத்து வீட்டுக்குள் கொண்டுபோனேன். நாலைந்து நாள்களுக்குப பிறகு அவன் கோழிகளை வெளியில் விடுவதேயில்லை."

### Geography Lesson.

பூகோளப்பாடம்.—நீ ஏன் பூகோளப்பாடம் படிக்கவில்லை என்று ஹார்லட் என்னும் தமது மாணாக்கனை உபாதயாயர் கேள்விகேட்க, அதற்கு அவன் "ஐயா, தாஙகள் சிலதினங்களுக்குமுன் இபபோது நடந்தேறிவரும் யுத்தத்தினால் பூகோளபபடங்களில் காட்டியிருக்கிற அந்தந்தத் தேசங்களின் எல்லைகளெல்லாம் மாறுபட்டுபோம என்று சொன்னது என ஞாபகத்தில் நன்றாயிருக்கிறது. ஆகையால் அந்த மாறுதல்களுக்குப்பின் ஒரேமூச்சாய்ப் படித்துவிடலாமென்று காத்திருக்கிறேன்" என்றான்.

### The Motor Car.

மோட்டார் வண்டி.—ஒரு குதிரை வண்டிக்காரன்:—உமது வண்டியில் ஒரு பக்கத்தில் என்னவோ வைததிருக்கிறீரே அதென்ன?

மோட்டார் வண்டி ஓட்டுபவன்:—அதுவா? சக்கரத்துக்கு ஏதாவது கெடுதல உண்டாகி விட்டால் உபயோகித்துக் கொள்வதற்காக அதிகபபடியாக ரப்பர் டையா (பட்டா) வைத்திருக்கிறது. இது உனககுத் தெரியாதா?

கு. வ:—அபபடியா, வேடிக்கையாயிருககிறதே. நான் 20-வாஷமாய் வணடி யோட்டி வருகிறேன். அதிகப்படி பட்டா ஒருகாலும் கொண்டுபோனதேயில்லையே.

# CURIOSITIES.

# விநோதங்கள்.

## Accuracy in Journalism.

**பத்திரிகைகளில் பிழையில்லாமல் எழுதுவது.**—டெய்லி டெலிக்ராப் என்னும் இங்கிலீஷ் பத்திரிகை பின்வருமாறு எழுதிற்றும். "லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு 1910-ம் வர்ஷத்தில் பாரன் பட்டம் கொடுக்கப்பட்டது. அந்த வர்ஷத்தில் அவர், லார்ட் கர்ஸனுக்குப் பிறகு இந்தியாவின் வைஸ்ராயாக வந்தார்"

லார்ட் கர்ஸன் லார்ட் மிண்டோவுக்கு முன் வைஸ்ராயாக இருந்தவர். லார்ட் மிண்டோவுக்குப் பிறகு லார்ட் ஹார்ட்டிஞ்ஜ் வைஸ்ராயாக வந்தார். இப்படித் தவறாக எழுதினது பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்திய விஷயங்களை எவ்வளவுதூரம் அறிந்திருக்கின்றன என்பதற்கு ஒரு தக்க உதாரணமாகுமென்று அல்லகபாத்து 'லீடர்' பத்திரிகை எழுதுகிறது.

ஸமீபத்தில் தமிழ்ப் பத்திரிகைகளில் சில ஜெர்மானியர்கள் உபயோகிப்பதாகச் சொல்லப்படும் 42-ஸெண்டி மீட்டர் வாயளவுள்ள பீரங்கிகளைப்பற்றி எழுதுகையில் அவைகளை, ஸெண்டிமீட்டர் பீரங்கிகள், என்று குறிப்பிட்டன. ஸெண்டி மீட்டர்என்பது நீட்டலளவையில் ஒன்றாகும். அது ஒரு அங்குலத்தில் ஐந்தில் 2-பாகமாகும்.

ஜெர்மானியர் உபயோகித்த 42-ஸெண்டி மீட்டர் பீரங்கியானது 16.8-அங்குலம் வாயளவுள்ளது. அதாவது கிட்டத்தட்ட 17-அங்குலமாகும். இத்தனை ஸெண்டிமீட்டர் என்று குறிப்பிடாமல், சும்மா "ஸெண்டி மீட்டர் பீரங்கி" என்று எழுதுவதானது இத்தனை அங்குலமென்று குறிப்பிடாமல் "அங்குல பீரங்கிகள்" என்றெழுதுவதைப் போலாகும்.

## Banana with Two Bunches.

**இரண்டு தலைகளுள்ள வாழைமரம்.**—சிலசமயங்களில் வாழைமரம் இரண்டு தாறு போடுவதுண்டாம். பஞ்சனூரில் ஸமீபத்தில் ஒரு தோட்டத்தில் இப்படிப்பட்ட மரம் ஒன்று இருந்ததாம். ஜமெய்காவில் ஒரு வாழைத்தோட்டத்தில் இவ்விதமரமொன்று இருந்ததாம். அதைத் தோட்டக்காரர் போட்டோ எடுத்து ஒரு பத்திரிகைக்கு அனுப்பினார். அந்தப் படம் 'மைஸூர் எகனமிக் ஜர்னல்' என்னும் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதன் காய்கள் ரொம்ப சிறியவையாயிருக்கின்றனவாம். மொத்தத்தில் இரண்டு குலைகளிலும் உள்ள காய்களின் எண்ணிக்கை அதிகமானாலும், அவைகளின் மொத்த நிறை ஸாதாரணவளர்ச்சியுள்ள ஒருமரத்தின் குலையிலுள்ள காய்களினுடைய மொத்த நிறையைவிட அதிகமாயிருக்குமோவென்பது ஸந்தேகமாம்.

## A Fire-proof Sadhu.

**நெருப்பால் கெடுதியடையாத ஒரு ஸாது.**—மூன்று மாதங்களுக்கு முன் விஜயநகரத்தில் ஒருஸாது 2-அடி நீளம், 2-அடி அகலம், 4-அடி ஆழத்தில் ஒரு குழிவெட்டச்செய்து அதில் தீவளர்த்து இரவு 9மணிக்கு அதில் குதித்தார். கழுத்தளவிற்கு மண்ணால் மூடப்பட்டது. பிறகு பலகைகளால் மூடிக்காற்று ப்ரவேசியாமல் மண்ணால் மூடி 15-20 வண்டி விறகுகளையதன் மேல்போட்டு 12 மணிவரையில் கொளுத்தினார்கள். இதை வேடிக்கை பார்த்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவர் செத்திருப்பாரென்று நினைத்தார்கள். ஆனால் அவர் சாகாமல் தெளிவான முகத்தோடும் சுத்தமான உடையோடும் வெளியே வந்து எல்லோரையும் ஆசீர்வதித்தாரென்று ஒரு நிருபர் ஒரு பத்திரிகையில் தெரிவிக்கிறார்.

## A Motor Cycle Street Sweeper.

**தெருக்கூட்டும் மோட்டார் ஸைக்கில்.**—அமெரிக்காவில் ஒரு பட்டணத்தில் தெருக்கூட்ட மோட்டார் ஸைக்கிளை உபயோகிக்கிறார்களாம். மோட்டார்ஸைக்கிளுக்கு முன்புறத்தில் ஒரு உருக்கு ப்ரஷ் அமைக்கப்பட்டிருக்கிறது. வண்டியை ஓட்டிக்கொண்டு போகும்போது அது தெருவிலுள்ள குப்பைகளைக் கிளறிவிடுகிறது. ஸைக்கிளின் பின்புறத்தில் ஒரு அகன்ற தொட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது. ப்ரஷ்கிளறிவிட்ட குப்பைகளை அது சேகரிக்கிறது. இந்த குப்பை கூட்டும் மோட்டார் ஸைக்கிள் நன்றாய் வேலைக்கு உதவுகிறதாம்.

## Four Children in a Birth.

**ஒரு ப்ரஸவத்தில் நான்கு குழந்தைகள்.**—மைஸூர் ஜில்லாவில் ஒரு ஊரில் வெங்கம்மா என்னும் ஒரு ப்ராமண ஸ்திரீ ஸமீபத்தில் ஒரே ப்ரஸவத்தில் 24மணி நேரத்துக்குள் 4 குழந்தைகளைப் பெற்றாளாம். ப்ரஸவவேதனை அதிகமாயிருந்ததாம். முதல் குழந்தையும் மூன்றாவது குழந்தையும் ஆண்களாம். மற்றவை பெண்களாம். முதலில் பிறந்த 2 குழந்தைகள் ஒன்பது நாளும், மற்றவை 13-நாள்களும் உயிரோடிருந்தனவாம்.

## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பிய யுத்தம்.

பிப்ரவரிமீ 10-தேதி.

ரஷ்யர்கள் ஸெர்னோவிட்ஸுக்கு 42-மைல் வடமேற்கில் நீஸ்டர் நதியின் வடகரையிலுள்ள உஸஸ்கோ ப்ரதேசத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

இரண்டு ஜெர்மன் ஸீபளேன் என்னும் ஆகாயக்கப்பல்கள் இங்க்லண்டில் ராம்ஸ்கேட், ப்ராட்ஸ்டேர்ஸ் என்னுமிடங்களில் வெடிகுண்டுகள் போட்டன.

ஜெர்மனி பெல்ஜியத்துடன் தனியாக ஸமாதானம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னதாகவும், அதற்கு பெல்ஜியம ஸம்மதிக்கவில்லையென்றும் தெரிகிறது.

11-தேதி.

ரஷ்யர்கள் லக்குக்கும் ரோவ்னுவுக்கும் மத்தியில் ஒரு குன்றைபபிடித்தார்கள். அவர்கள் நீஸ்டர்நதியின மேற்குக்கரைக்கு கடந்து போனார்கள்.

இன்றக்ரீஸின் பார்லிமெண்டில் க்ரீஸின் ப்ரதம மந்த்ரியானவர், அந்த தேசம் யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமல தனித்து இருக்கத் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்.

சில ஜெர்மன் டிஸ்ட்ராயா கப்பல்கள இங்க்லண்டுக்குப் பக்கத்திலுள்ள டாகர்பாங்க் என்னும் இடத்துக்குப பக்கத்தில் கடல்வெடிகுண்டுகள் வாரியெடுக்கும் ப்ரிட்டிஷ் கப்பல்கள் நான்கோடு யுததமசெய்து ஒன்றை மூழ்கடித்தன.

14-தேதி.

'அரிதூஸா' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் இங்க்லண்டின் கிழககுககரையில் ஒரு கடல் வெடிகுண்டில்தாக்கி சேதமடைந்தது. 10-பேர்கள் உயிரிழந்தார்கள். கப்பல்முழுவதும் நாசமாகிவிடும் என்று தோன்றுகிறதாம்.

இட்டாலியப போர்முனையில் எதிரிகள் ராம்பான் ப்ரதேசத்தில் சில இடங்குகளைப் பிடித்துக்கொண்டார்கள்.

ரஷ்யப் போர்முகததில் இல்லக்ஸ்டுக்குப் பக்கத்தில் பலமான பீரங்கி யுததம் நடந்தது. ரஷ்ய டிஸ்ட்ராயர் கப்பல்கள் கருங்கடலில் 8-எதிரிக் கப்பல்களை மூழ்கடித்தன.

ரஷ்யர்கள் எர்ஸிரம் ப்ரதேசத்தில் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் காப் என்னும் இடத்தையும், பெர்ஷியாவில் டௌலாடாபாட் என்னும் ஊரையும் பிடித்துககொண்டார்கள்.

15-தேதி.

லார்ட் ப்ரெஞ்ச் ஆகாயப் பாதுகாப்பு வேலைக்குத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார்

16-தேதி.

எர்ஸிரமிலுள்ள 8-கோட்டைகளை ரஷ்யர்கள் பிடித்தார்கள்.

17-தேதி.

ரஷ்யர்கள் 5-நாள் யுத்தம் செய்து எர்ஸீரம் கோட்டையைப் பிடித்திருக்கிறார்கள். எர்ஸீரமுக்குத் தென் கிழக்கில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் ஆப்ரிக்காவில் காமரூன்ஸ் ப்ரதேசத்தைப் பிடித்திருக்கின்றன. ஜெர்மன் சேனைத் தலைவர் அங்கிருந்து ஸ்பெயினுடைய ப்ரதேசத்துக்கு ஓடிவிட்டார்.

மாண்டிநிக்ரோவின் அரசரும் அவரது மனைவியும் ப்ரான்ஸிலுள்ள போர்டோவில் தங்கியிருக்கிறார்கள்.

ப்ரெஞ்ச் யுத்தக்கப்பல்கள் அட்ரியாடிக் கடலில் 2-எதிரி ஸப்மரீன் கப்பல்களை மூழ்கடித்தன.

21-தேதி.

ரஷ்யர்கள் ஆசியா துருக்கியில் மஷ், அலாட் என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

ஜெர்மானியர்கள் கிவெஞ்சிவுட் என்னும் காட்டிலும், வெர்டூன் ப்ரதேசத்திலும் சில கிடங்குகளைப் பிடித்தார்கள். அவர்கள் பொமாணட் தோபபையும் இன்னும் சில இடங்களையும் கைப்பற்றினார்கள்.

ஜெர்மன் கப்பல் படைககு முன்பு தலைவராயிருந்த வான்போல் என்பவர் இறந்துவிட்டதாகத் தெரிகிறது.

ஒரு ஜர்மன் கப்பல் டெனரிப்புக்குப் பக்கத்தில் 7-ப்ரிட்டிஷ்கப்பல்களை மூழ்கடித்து அதிலிருந்த ஜனங்களை இன்னொரு ப்ரிட்டிஷ் கப்பலில் ஏற்றி டெனரிப்புக்கு அனுப்பிவிட்டது.

24-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டுனுக்குப பக்கத்தில் ரேசத் திருபபுகளை பலமாகத்தாக்குகிறார்கள். ப்ரெஞ்ச் திருப்புகள் ஹௌமாண்ட் க்ராமத்தை காலிசெய்து விட்டன.

ஆஸ்ட்ரியர்கள் டுர்ராஸோவுக்குத தென்மேற்கில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

வெர்டென் சண்டை இன்னும் பலமாகவே நடந்து வருகிறது. ப்ரெஞ்ச் திருப்புகள் ப்ராபாண்ட் என்னும் ஊரைக் காலிசெய்துவிட்டார்கள்.

26-தேதி

வெர்டென்யுத்தம் இன்னும் நடக்கிறது. ப்ரெஞ்சுக்காரர்கள் வெர்டுனுக்கு வடக்கிலுள்ள ஒரு புதிய இடத்தில் தங்கியிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் பெர்ஷியாவில் கெர்மான்ஷா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ஸெர்வியர்களும் மாண்டிநிக்ரர்களும் அல்பானியா முழுவதையும் காலிசெய்துவிட்டார்கள்.

27-தேதி.

"மலோஜா" என்னும் தபால் கப்பல் மூழ்கின போது அதிலுள்ள ஜனங்களுக்கு உதவிசெய்யப்போன 'எம்பரெஸ அப் போர்ட் வில்லியம்' என்னும் கப்பலும் கடல் வெடிகுண்டுதாக்கி மூழ்கிப்போயிற்று. மொத்தம் 411-அப்பல் ஜனங்களில் 260-பேர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறார்களாம்.

ரஷ்யர்கள் எர்ஸிரத்தைப் பிடித்தபோது 13,000 துருக்கியர்களைக் கைதுசெய்தார்களாம்.

28-தேதி.

வெர்டுனுக்குப் பக்கத்தில் பலமாக சண்டை நடந்து வருகிறது. ப்ரெஞ்சுக்காரர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள். வெர்டுனுக்கு 6-மைல் வடமேற்கில் உள்ள போராட் டௌமாண்ட் என்பதை ஜெர்மானியர்கள் பிடித்ததாகச் சொல்லுகிறார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் டுர்ராஸோவைக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

எர்ஸிரமுக்கு 30-மைல் மேற்கிலுள்ள ஆஷ்காலா என்னுமிடத்தை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

மார்ச்சுமீ 3-தேதி.

வெர்டுனுக்குப் பக்கத்தில் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. ஜெர்மானியர்கள் ரிகாவுக்கு மேற்கில் கப்பல் பீரங்கிகளைக்கொண்டு ரஷ்யர்களைத் தாக்கினார்கள். ரஷ்யர்கள் பிட்லிஸுக்கு வடக்கிழக்கில் 7-மைல் தூரத்திலுள்ள காமாச், நகவான்க் கன்வெண்டு என்னுமிடங்களைப்பிடித்திருக்கிறார்கள். துருக்கியர்கள் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

4-தேதி.

ஜெர்மானியர்கள் டௌவாமாண்ட் என்னும் ஊரில் புகுந்திருக்கிறார்கள்.

ரஷ்யர் பிட்லிஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

6-தேதி.

ரஷ்ய டிஸ்ட்ராயர் கப்பல்கள் பால்டிக் கடலோரமாக உள்ள துருக்கியைச் சேர்ந்த ட்ரெபிஸாண்ட் என்னும் ஊரைத் தாக்கின.

ஜெர்மானிர்கள் டௌமெண்ட் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் பாரஸீகத்தில் ஹாமாடானுக்கு 90-மைல் வடமேற்கில் உள்ள பிஜார் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ஜெர்மானியர்கள் மேற் காங்கத்தில் போர்ஜஸ் என்னும் ஊரைப் பிடித்தார்கள். ரஷ்யர்கள் கருங்கடல் கரையில் ட்ரெபிஸாண்ட் என்னும் ஊருக்கு 60-மைல் கிழக்கில் உள்ள ஏடிஹ என்னும் ஊரைப் பிடித்தார்கள்.

## INDIAN NEWS.

### இந்திய வர்த்தமானம்.

பிப்ரவரிமீ 11-தேதி

இந்திய ஸங்கீதத்தின் சீர்திருத்தம்.—மேல்நாட்டிலு ஸங்கீதம அபிவ்ருத்தி யடைந்திருப்பதற்கேற்ப இந்திய ஸங்கீததைச் சீர்திருத்துவதைப்பற்றி ஆலோசிப்பதற்காக பரோடாவில் ஒரு ஸங்கீதகான்பரென்ஸ் நடத்த பம்பாயிலும் பரோடாவிலும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

14-தேதி.

**ஒரு பித்தனின் பரிதாப மாணம்.**—வங்காளத்தில் பாக்பூர் என்னுமிடத்திலிருந்த ஒரு பீரங்கிப்படை வீரன் ஸமீபத்தில் பைத்யம் பிடித்துப்போனான். அவனை பவானிபூர் ஆஸ்பத்ரிக்கு அனுப்பி, எங்கும் அவன் ஓடாதபடி ராணுவ பந்தோபஸ்து செய்திருந்தார்கள். அவன் இன்றுகாலையில் ஸ்நானம் செய்யும் அறைக்குப்போய் அங்கிருக்கும் ஜன்னல் வழியாக கூரைமேல் ஏறி அங்கிருந்து பூமியில் தாவிக்குதித்தான். குதித்ததும் உடனே இறந்துவிட்டான்.

**காசி ஸதியாலோசனைக் கேஸ்.**—காசியில் விசாரணையாகிவரும் காசி ஸதியாலோசனைக்கேஸில் இன்று கோர்ட்டார் தீர்ப்புசொன்னார்கள். மொத்தம் 15-பேர்களில் 4-பேர்கள் விடுதலையடைந்தார்கள். ஸதியாலோசனைத் தலைவனாகிய ராஜேந்திரநாத ஸன்யாலுக்கு ஆயுள்பரியந்தம் தீவாந்தரசிக்ஷையும், மற்றவர்களுக்கு 2-முதல் 7-வருஷம் வரையில் கடுங்காவல் சிக்ஷையும் விதித்தார்கள்.

15-தேதி.

**தென்னை ஆராய்ச்சிப் பண்ணைகள்.**—மலையாளம் ஜில்லாவில் சில இடங்களில் தென்னந்தோட்ட ஸாகுபடியைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்வதற்காக கவர்ன்மெண்டார் சில பண்ணைகள் ஸ்தாபிக்கப்போகிறார்களாம்.

17-தேதி.

**ஸ்த்ரீ வைத்யகாலேஜ்.**—இன்று வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ் டெல்லியில் லேடி ஹார்டிஞ்ஜ் ஸ்த்ரீ வைத்ய கலாசாலையைத் திறந்துவைத்தார். இது 1912 லேடி ஹார்டிஞ்ஜின் முயற்சியால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

19-தேதி.

**காலஞ்சென்ற மிஸ்டர் கோகலே.**—மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே இறந்து இன்று 1-வருஷமாகிறது. அவர் இறந்ததினத்தைக் கொண்டாடுவதற்காக சென்னை பாமுகர்கள் ஒரு மீட்டிங்கூடினார்கள். மிஸ்டர் கோகலேயின் குணாதிசயங்களைப்பற்றி சிலர் ப்ரஸங்கம் செய்தார்கள். சென்னையிலேயன்றி, நாக்பூர், பூனா, பம்பாய் முதலிய இடங்களிலும் இவ்வித மீட்டிங்குகள் நடந்தன.

மூன்றாவது மதனப்பள்ளி டிவிஷனல் கான்பரென்ஸ்.—இந்தக் கான்பரென்ஸ் இன்று வாயல்பாடில் கூடிற்று. மிஸ்டர் ராமதாஸ் பந்துலு ப்ரெஸிடெண்டாக இருந்து க்ராமபஞ்சாயத்துகள், க்ராமஸங்கங்கள், ரெவின்யூ ஸெட்டில்மெண்டு, ஸ்தல ஸ்வயஆட்சி ஆகிய இவைகளைப்பற்றிப் பேசினார்.

22-தேதி.

**மிஸ்டர் ஹார்டிங்க்.**—திருச்சினாப்பள்ளியில் ஜில்லா கோர்ட் ஜட்ஜாக இருந்த மிஸ்டர் எச் ஓ. டி. ஹார்டிங்க் இன்று ஒரு மகம்மதியனால் குத்திக் கொல்லப்பட்டார். அவரைக் காக்க முயன்ற டபேதாரும் காயமடைந்தான். மகம்மதியனுடைய பெயர் ஸையத் இஸ்மேல். அவனைச் சிறையில் வைத்திருக்கிறார்கள்.

24-தேதி.

**கல்கத்தாவில் வ்யாபார ம்யுஸியம்.**—இன்று வங்காளத்து கவர்னர், லார்ட் கார்மிகேல், கல்கத்தாவில் வ்யாபார ம்யுஸியத்தை (பொருள்காட்சி சாலையை)த் திறந்துவைத்தார். இதில் இந்திய கைத்தொழில் சரக்குகளின் மாதிரிகளும், கல்கத்தாவுக்கு இறக்குமதியாகும் அயல் சாக்குகளின் மாதிரிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

**பெண்கள் கல்வி.**—இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்திசெய்வது விஷயமாக மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கடிதங்கள் எழுதப்போகிறார்களாம்.

**உஷ்ணதேச வ்யாதிகளுக்கான ஹாஸ்பிடல்.**—கல்கத்தாவிலுள்ள மெடிகல் காலேஜை ஒட்டி ஸ்தாபிக்கப்படும் உஷ்ண தேச வ்யாதிகளுக்கான ஆஸ்பத்ரியின் கட்டிடத்துக்கு வங்காளத்து கவர்னர் லார்ட் கார்மிகேல் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

26-தேதி.

**ஜோட்பூர்.**—ராஜபுதனத்திலுள்ள ஸ்வதேச ஸமஸ்தானமாகிய ஜோட்பூரின் அரசர் இன்று முதல் ராஜ்யபாரம் வகிக்கத் தொடங்கினார். ராஜ ப்ரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ஜ் ஜோட்பூர் அரசரை ஸிம்மாஸன மேற்றுவித்தார்.

**வைஸ்ராய்க்கு எல் எல். டி. பட்டம்.**—பம்பாய் யூனிவர்ஸிட்டியார் வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு எல். எல். டி. பட்டம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.